உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ
கணபதிதுணை.

# திருக்கூவப்புராணம்.

திருக்கைலாசபரம்பரைப்
பொம்மையபாளையம்
சிவஞானபாலையதேசிகராதீனத்து
நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

## சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது
ஷை ஆதீனத்துச் சிதம்பரம்
**இராமலிங்கசுவாமிகளால்**
பரிசோதிக்கப்பட்டு
காயாறு
**ஞானசுந்தரஐயராலும்**
காஞ்சீபுரம்-பச்சையப்பமுதலியார்
தருமபரிபாலன சபைத்தலைவராகிய
பாளையம்
**சோமசுந்தரசெட்டியாராலும்**

சென்னை:
மிமோரியல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

தாரண ௵ ஆனி ௴

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்

பொருந்தார்ரணம்பொடிபடுத்தபொன்னு
சிலையோன்கூவத்தி, னிருஞ்சீர்தமிழாற்புனைதல்செ
யதானிதழ்கூப்பாதவந்தாதி, யருந்தாமந்தான்புனை
ந்துசெந்திலமர்ந்துசூர்மாமுதமடிந்தோன், பெரு
தோண்மலைகட்கணிந்தசிவப்பிரகாசப்பேர்ப்பெரு
தகையே.

சருக்கவகை.

உருக்கமிகுபாயிரநைமிசாரணியச்சருக்கமுய
தலச்சருக்கங், தருக்குதிரிபுரதகனச்சருக்கங்கல்ல
ந்தானகிரிசந்தானச், சருக்கமடிமுடிதேடுசருக்கம்
லிசெந்நெல்வைத்தசருக்கம்பாவச், செருக்குமுத
ருகன்வதையாஞ்சருக்கமிவைகூவபுராணச்சேர்வா
மால்.

முற்றிற்று.

சிவசண்முகன் றுணை.

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

# சிவப்பிரகாசசுவாமிகள்

## சரித்திரச்சுருக்கம்.

தொண்டைமண்டலத்திலே, முத்திநகரம் ஏழனுள் ஒன்றாய்விளங்குகின்ற காஞ்சிபுரத்திலே, ஏறக்குறைய இருநூற்றெழுபது வருடங்களுக்குமுன் தொண்டைமண்டல வேளாளர்க்குத் தீக்ஷாகுருவாகக் குமாரசுவாமிதேசிகர் என்பவர் ஒருவரிருந்தார்.* அவர், திருக்கார்த்திகைத் தரிசனத்திற்காகத் திருவண்ணாமலை யாத்திரைக்குப்புறப்பட்டு, ஒருநாள், வழியில், ஒரு நந்தனவனத்திற்றங்கிச் சிவபூசைமுடித்து, அன்று சாயங்காலமே தாங்குறித்த அத்தலத்தையடைந்து, அங்குள்ள ஈசானிய தீர்த்தத்திலே அநுட்டானஞ்செய்துகொண்டு, பூசைப்பேடகம் எங்கே? என்று பரிசனர்களிடத்து வினவ; அவர்கள், பகலிலே தங்கியிருந்த இடத்தில்வைத்து மறந்துவந்ததாக அச்சத்தோடு விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டு, மிக மனக்கலக்கமுற்று, அப்பரிசனர்களை பகற்றங்கியிருந்த நந்தனவனம்வரையும் பரிசோதித்து வரும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஓரிடத்திற்போய், நம்முடைய ஆன்மார்த்த

* பெட்டகம் என்பதும் வழக்கம்.

மாகிய உடையவரை விட்டுப்பிரியும்படி நேரிட்டதே என்னும் வருத்தத்தால் அன்றிரவுமுழுதும் நித்திரையின்றிச் சிவத்தியானஞ் செய்துகொண்டிருந்தனர். அத்தருணத்தில், அவரது சிவபுண்ணிய முதிர்ச்சியினாலே திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும சிவபெருமான, ஓர் சங்கமத்திருவுருவங் கொண்டு, அவரிடத்திற்கெழுந்தருளி, தம்மெதிர்வந்து தமக்குநிகழ்ந்த ஆபத்தைத்தெரிவித்து அன்பொடுவணஙகிநின்ற அவர்மீது கிருபாகோககஞ் செய்து, "நீர் அங்கம் வேறு இலிங்கம் வேறாக இருந்தமையால் இவ்வாறு பிரியும்படி நேரிட்டது? இலிங்காங்க சமபந்தியாயிருந்தால் இவ்வண்ணம் நேரிடுதலியலாது? உமது பூசைப்பேடகம் நாளை உதயத்தில் வந்துசேரும்? நீர் இதுமுதல் இலிங்கதாரணஞ் செய்துகொள்ளும்." என்று அநுக்கிரகிகக; அவர், இச்செய்கை தமதுசிடர் பந்துககள் முதலானவாகளுக்கு விரோதமாக இருக்கும் என்பதை விண்ணப்பித்து நின்றனர். அதுகேட்ட சிவபெருமான், "அந்தச் சிடர்முதலியோராற் பெறப்படும்பயன் சிறிதுமில்லை? நமது கட்டளைப்படி நீர் சிவலிங்கதாரணஞ் செயதுகொண்டால் உமக்கு மூன்றுபுத்திரர்களும் ஒருபுத்திரியும் பிறப்பார்கள்? அவர்களால் இம்மை மறுமையின்பங்களும் முத்தியுஞ்சித்திக்கும்: ஆதலால், இவ்வாலயத்திற்குத் தெற்குவீதியி

ஹுள்ள மடத்திலிருக்கும் குருதேவரிடத்திலே தார ணதீக்ஷை செய்துகொள்ளும்.'' என்று வறபுறுத் தி ஆஞ்ஞாபித்து, வீரசைவ சமயாசாரநெறிகளை யும் போதித்து, அவ்வாறே குருதேவருக்குங் கட் டளையிட்டு, மறைந்தருளினார்.

மறுநாட்காலையில், சிவபெருமானது திருவாக் கின்படியே பூசைப்பேடகம் வரப்பெற்று, ஸ்ரீகுரு தேவரா லனுப்பபபட்ட அடியார்களோடு மடால யத்தையடைந்து, குருதேவரைத் தரிசித்து, அவ ராலே தாரணதீக்ஷை செய்யப்பெற்று, திருக்கார்த் திகைத திருவிழா நிறைவேறியபின் குருதேவரிடத தில் விடைபெற்றுக்கொண்டு, காஞ்சீபுரத்திற்குவ ந்து, தமது அநுட்டானப்படியே சீடர்களுக்குந் தாரணதீக்ஷை செய்துகொண்டிருக்க; அக்காலதகி லே, அவருக்கு அண்ணாமலையார் அநுக்கிரகித்தப டியே மூன்றுபுத்திராகளும் ஒருபுத்திரியும் அவத ரித்தார்கள். தந்தையாராகிய குமாரசுவாமிதேசிகர், களிகூர்ந்து அவர்களுககு, முறையே சிவப்பிரகா சம், வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம்பி கை, என்று நாமகரணந்தரித்து, முதன்மூவரும் க ல்வியிற்பயின்று வருங்காலத்தில், சிவலிங்கவைக்கிய மாயினார்.

பின்பு மூத்தவராகிய சிவப்பிரகாசசுவாமிகள், தமது சகோதரர் முதலியவாகளோடு திருவண்ணா

மலைக்குப்போய், குருதேவரைத் தரிசித்து, அங்கே வாசஞ்செய்துகொண்டு, தமது கல்விமுயற்சியிற் றளராது வாழும் நாள்களுள் ஒருநாள், அந்தச் சோணசைலத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து வரும்போதே, சோணசைலமாலையெனப் பெயரிய நூறு செய்யுள்களால் அதனைத் தோத்திரம்பண்ணினர். பின்னும் பேரிலக்கணங்களைப் பெரிதுங் கற்கவிரும்பி, தமது சகோதரர்களுடனே தக்ஷிணதேசத்திற்குப் பிரயாணமுற்று, வாலிகண்டபுரத்திற்குத் தென்பாகத்திலுள்ள துறைமங்கலம் என்னும் நகரத்தைச்சார்ந்த ஒரு நந்தனவனத்தில், சிவபூசைசெய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில், அக்கிராமாதிபதியாயும் சிவலிங்கதாரியாயும் குருலிங்கசங்கமபத்தியிற் சிறப்புற்றவராயும் விளங்கிய அண்ணாமலைரெட்டியாரென்பவர், சிவப்பிரகாசசுவாமிகள்வரவைக் கேள்வியுற்று, அங்கடைந்து தரிசித்தமாத்திரத்தில், அவரிடத்தே அநுக்கிரகம்பெறவிரும்பி அடிமைபூண்டு, "சுவாமீ, தேவரீர் இவ்விடத்தில் வாசஞ்செய்தருளவேண்டும்." என்று பிரார்த்தித்து, அவரை யுடன்படுத்தி, தங்கள் குருவாகிய சென்னவசவையர் மடத்திற்கு மேற்றிசையில் ஒருதிருமடங்கட்டி, அதில் சுவாமிகளை எழுந்தருளுவித்து,* அகோராத்திரம் பிரிவின்றி † அணுக்கத்தொண்டரா

---

* அகோராத்திரம் - பகலிரவு. † அணுக்கம் - சமீபம்.

யமர்ந்திருக்க; சிவப்பிரகாசசுவாமிகள், அவருக்கு ச சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு, இரண்டுவருஷமவரையில அங்கே எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு தாங்கொண்டகருத்தை நிறைவேற்றவிரும்பி, தக்ஷிணதேசத்திற்குச் செல்லல்வேண்டுமென்பதை அவருக்கறிவுறுத்தித் திருநெல்வேலியையடைந்து, தாமிரபர்ணி நதிதீரத்திலிருக்கின்ற சிந்துபூந்துறையில் தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலவாணசுவாமிகள் இலக்கணவிலக்கியங்களில அதிவல்லவாகளாய் இருக்கின்றூர்கள் என்பதைக் கேள்வியுற்று, அவ்விடத்திற்சென்று சுவாமிகளைக்கண்டு, அச்சுவாமிகளால் உபசரிக்கப்பெற்று, தாம் இலக்கணங்சற்கவேண்டி வந்தமையைத் தெரிவித்துக்கொண்டனர். அச்சுவாமிகள், சுவாமிகளுடைய இலக்கியப்பயிற்சியை அறிதற்பொருட்டு, "கு, என்பதை முதற்கொண்டு ஊருடையான், என்பதை இடைப்பெய்து கு, என்பதையே ஈற்றினுங் கொண்டு முடியும்படி ஒருவெண்பாப் பாடுக." என்றுகூற; சுவாமிகள்,

"குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன், முடக்கோடு முன்னமணி வாற்கு-வடக்கோடு, தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள, லூருடையா னென்னு முலகு."

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினார். மேலவெண்பாவினுள் வடகோடுதேருடையான் என்று அமைத்தமையை அச்சுவாமிகள், வியந்துபாராட்டி, சுவாமிகளைத்தழுவித் தம்மருகிருத்தி, சுவாமிகள் சகோதரர்களாகிய வேலையசுவாமிகள, கருணைப்பிரகாசசுவாமிகள் என்னும் இருவருகரும் ஒருபக்ஷத்துள் பஞ்சலக்ஷணங்களையும் பாடஞ்சொல்லிமுடித்தார். அதுகண்ட சிவப்பிரகாசசுவாமிகள், பேருவகையுறறு, அண்ணாமலை ரெட்டியாரென்பவர் தங்களுக்கு வழிச்செலவிற்குபகரித்த மூந்நூறுபொன்னையும் குருதக்ஷிணையாக வைதது உபசரிக்க; அச்சுவாமிகள், "இது நமக்குவேண்டுவதில்லை: நம்மைத்தூஷித்தலேயே இயல்பாகக கொண்டு திருசசெந்தூரில வசிக்கும் தமிழ்ப்புலவரொருவரைத தங்கள் முன்னிலையில் வெற்றிகொண்டு அவர்வந்து நம்மைவணங்கும்படி செயது கோடலே குருதக்ஷிணையாகும்.'' என்று மறுத்தருளினர்.

அவாகருத்தறிந்த சுவாமிகள், அதற்குடன்பட்டு, அவர்மாணாக்கரோடும் திருச்செந்தூருக்குப் போய், முருககடவுளைத் தரிசனஞ்செய்து பிரதக்ஷிணம் வரும்போது; அச்சுவாமிகளாற் சுட்டப்பட்ட தமிழ்ப்புலவா, எதிர்ப்பட்டுச் சிவப்பிரகாசசுவாமிகளை யாதுதொன்று அவ்விடவந்த மாணாக்க

ரிடத்திற்றானே வினவி, மேற்படி சுவாமிகளிடத்தி
ற் பாடங்கேட்டசுவாமிகள் என்பதை அறிந்துகொ
ண்டு, அவர்களைத் தமதுவழக்கப்படியே தூஷிக்கத்
தலைப்பட்டார். அப்பொழுது சுவாமிகளுக்கும் புல
வருக்கும் கலகநேரிட; புலவர், சுவாமிகளை நூதன
வகையாற்பாடி வெற்றிபெறுவோமெனத்துணிந்து,
"நாமிருவரும் நிரோட்டகயமகம் பாடுவோம்: முன்
னர்ப் பாடிமுடித்தவருக்கு அஃதியலாதார் அடிமை
யாவோம்." என்று வாக்குத்தத்தஞ்செய்தார். சுவா
மிகள், தங்கருத்து நிறைவேறுதற்கு வாயில் இது
வே என்றுகருதி அதற்கிசைந்தருளி, அவரோடுபா
டத்தொடங்கி உடனே, அத்தலத்து முருகக்கட
வுண்மீது நிரோட்டகயமகவந்தாதித் தொடையாக
முப்பதுகட்டளைக்கலித்துறைபாடி முடித்தருளினா
ர். அதுகண்டபுலவர், தாம் ஒருசெய்யுளேனும் பா
டிமுடியாமையையுணர்ந்து, சுவாமிகளுடைய திரு
வடிகளைவணங்கி, "அடிமையாயினேன்." என்று வி
ண்ணப்பஞ்செய்ய; சுவாமிகள், தமதடிமையாயமை
ந்த அப்புலவனை ஆதீனத்திற் கழைத்துவந்து அச்
சுவாமிகளுக்கு, அடிமையாக்கிவிட்டார். அச்சுவா
மிகள், திருவுளமகிழ்ந்து சிவப்பிரகாசசுவாமிகளை
ப்பார்த்து, "தாங்கள் பாடியசெய்யுளிற் குறித்தபடி
யே சிதம்பரத்திற் சிலகாலம் வாசஞ்செய்தருளுக."
என்று விடைகொடுத்தனுப்பியருளினார்.

சுவாமிகள், அவ்விடத்தினின்றும் நீங்கி, சிவஸ் தலங்கடோறுஞ்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, துறைமங்கலத்தைச்சார்ந்து, முன்போலவே அண்ணாமலைரெட்டியாரென்பவருக்குத் திருவருள்பாலித்து, அவரது வேண்டுகோளின்படி அவராலுகையிலமைந்த வாலிகண்டபுரத்தின் வடமேற்பாகத்துள்ள திருவெங்கைமாநகரத்திலே, தம்பொருட்டு அவராற்கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்துகொண்டு, அத்தலத்திலுள்ள பழமலைநாதர்மீது திருவெங்கைக்கோவை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்காரம், என்னும் நான்கு பிரபந்தங்களை இயற்றியருளினர். அக்காலத்தில் ஒருநாள், அவ்வூர்ப்பிடாரியாரது உற்சவஇரதத்தால், அடியார்க்குபயோகமாகத் திருமடத்தெதிரிலிருந்த முருங்கைமரம் அழிந்தமைகண்டு,

"திருந்துதமி ழிலக்கணவைந் திணைக்கோவை விருத்தகிரிச் செல்வற் கோதும்,பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை வெங்கைநகர்ப் பிடாரி காண்க, விரும்புவீயி லொருமுருங்கைக் கொம்பொடியர மற்காத்திங் கிருக்கு நீகம், முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென் றுனக்கு முறைய தாமோ."

என்னும் திருவிருத்தத்தை அருளியமாத்திரத்தே, அவ்விரதம் அழிந்தொழிய; தாம் சிலகாலமங்கிருந்து, துறைமங்கலத்தை யடைந்தருளினர்.

அக்காலத்திலே, அண்ணாமலைசெட்டியாரென்பவர், சுவாமிகளை "தேவரீர் விவாகம்செய்துகொள்ள வேண்டும்." என்று பிரார்த்திக்க; அதற்குத்தரமாக,

"செய்கொண்டா ருங்கமலச செம்மலுடனேயரவப், பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே, நோய்கொண்டா லுங்கொளலா நூறுவயதளவிருந்து, பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே."

என்னும் தரவுகொச்சகக்கலிப்பாவைத் தந்தருளினார். சுவாமிகள் கருத்துணர்ந்து, பின்பு வேலையசுவாமிகளைப் பிரார்த்திக்க; அவர், சிவப்பிரகாசசுவாமிகளுடைய கட்டளை எவ்வாறோமோ என்னுங் கருத்தால் உடன்படல் மறுத்தலென்னும் இரண்டுமின்றி மௌனராயினர். பின்னர் யாத்திரையினின்றும் வந்த கருணைப்பிரகாசசுவாமிகளிடத்தில் தமது வேண்டுகோளை விண்ணப்பஞ்செய்தமாத்திரத்தில், அவர், அதற்குத்தரமாக,

"காணி யென்பதை காரியென் றுரைத்திடு நகையால், வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்ததுவென்றாற், காண லாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டாற், பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ."

என்னும் கலித்துறையைப்பாடித் தமது கருத்தை உள்ளபடி தெரிவித்தார். சிவப்பிரகாசசுவாமி

கள், தம்பின்னோராகிய இருவர் கருத்தையும் உணர்ந்து, அவர்களுக்குத் தாம் துறவறம்பூண்டமையைத் தெரிவித்து மணம்புரிவித்து, "இல்லறத்தை வழுவாமல நடத்தி வாழ்க." என்று ஆசீர்வதித்து, அவர்களை நிறுத்திவிட்டு, தம்மிடத்தன்புபூண்ட அண்ணாமலையொட்டியாரோடு சிதம்பரத்திற்கு எழுந்தருளி, அங்கே ஒரு திருமடங் கட்டுவித்து அதில் வீற்றிருந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, சிவபபிரகாசவிகாசம், தருக்கபரிபாஷை, சதமணிமாலை, நால்வர் நான்மணிமாலை, என்னும் பிரபந்தங்களைச்செய்தருளினார்.

பின்பு சிதமபரத்தை அருமையாகநீங்கி, பிறதலங்களையும் வணங்கி, திருக்காட்டுப்பள்ளியையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கிருக்கும்போது, கல்வியறிவிற்சிறந்த ஒருபெண் வீதியினிடத்தே உபபுவிற்றலேதலைக்கண்டு, இரக்கமுற்றுயத திருநோக்கதீகைஷசெய்து, அவளது நல்லூழையும பரிபக்குவத்தையும் உணர்ந்து, அவளுடைய புலமையைப் பிறர்க்குப்புலப்படுத்தத் திருவுளங்கொண்டு,

"நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா - னுறையுந்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு."

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தரு ளியமாத்திரத்தே, அப்பெண்,

"தென்னேங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெரு மான், பொன்னேஙகு சேவடியைப் போற்றிஞே- மன்ஞேன், றிருக்கூட்ட மத்தனைக்குந் தெண்ட் னிட்டோந் திராக், கருக்கூட்டம் போக்கிஞேங காண்."

என்னும வெண்பாவைப் பாடிக்கொண்டு, தரி சனவேதியினெதிர்ப்பட்ட இரும்புபோல மனமுரு கி மிக்க விரைவொடுவிழுந்து நமஸ்கரித்தெழுந்து கூப்பியகரத்தினளாய நிற்க; அபபெண்ணிற்கு உ ண்மைஞானமுண்டாகும்படி கிருபாநோக்கஞ்செ ய்து, சிலகாலமங்கிருந்தார்.

அதன்பின் சுவாமிகள், காஞ்சிபுரத்தைத் தரி சிக்கவிரும்பி அண்ணமலைசெட்டியாரோடும் பிரயா ணப்பட்டு வரும்போது, வழியிலே சாந்தலிங்கசு வாமிகளைக்கண்டு கலந்து, களிகூர்ந்தபின் அவரை நோக்கித் தாங்கள் பேருசென்னுந் திவ்வியதலத்தி னின்றும் எதையுத்தேசித்து எழுந்தருளியதென்று வினவ; அவர், "திருக்கைலாயத்தில் சிவபெருமான ருளியவாறே சமுத்திரத்தில் திருவவதாரஞ்செய்து வீரசைவசமயத்தை உலகத்தில் நிலைபெறநாட்டி முருகக்கடவுளது வரப்பிரசாதியாய் மயிலமலையில்

விளங்கியிருந்த † சங்குகன்னரென்னும் கணத்தலைவரது திருவருள்பெற்றசிவஞானபாலையதேசிகரைத் தரிசித்தல்வேண்டுமென்னும் காதலால்வந்தேன்.'' என்றுரைத்தருளினர். பின்னர், இருவரும் பேருவகையுற்றுப் பொம்மையபாளையத்துக்குச் சமீபமாகிய புத்துப்பட்டு என்னும் நகரத்தையடைந்தவுடன் சாந்தலிங்கசுவாமிகள், சுவாமிகளைநோக்கி, ''நாமிருவரும் சிவஞானபாலையதேசிகரைத் தரிசிக்கவேண்டியிருப்பதால் அவர்கண்மீது சிலதோத்திரங்கள் பாடுக.'' என்று பிரார்த்திக்க; சுவாமிகள், ''நாம் நரஸ்துதி பண்ணுகிறதேயில்லை.'' என்று மறுத்துவிட்டு, சாந்தலிங்கசுவாமிகளோடு அவ்வூரிலுள்ள ஐயனார்கோயிலின்புறம்பில் அன்றிரவு துயில்கொண்டார். அப்பொழுது, முருகக்கடவுள் மயில்வாகனரூடராய் எழுந்தருளி ஒருபாத்திரத்தில் விடுபுஷ்பங்களைவைத்து ''இவற்றை மாலையாகத்தொடுத்து நமக்கு அணியக்கடவாய்.'' என்று திருவாய்மலர்ந்து மறைந்ததாகக் கனவுகண்டு, சாந்தலிங்கசுவாமிகளுக்குத் தெரிவிக்க; அவர், ''சிவஞானபாலையதேசிகர் முருகக்கடவுளிடத்து அதிபத்திமையூண்ட உள்ளத்தோடு விளங்கியிருத்தலால் அதுபற்றியே அக்கடவுள் தங்களுக்குச் சொப்பனத்தில் அத்

---

† சங்குகன்னர் சரித்திரவிரிவை மயிலாசலபுராணத்துட்

தேசிகர் மகிமையை இவ்வாறாகப் புலப்படுத்தினர்." என்று வலியுறுத்தினார். அத்தேசிகர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடுதூது, என்னும் பிரபந்தங்களைப்பாடி, சந்நிதானத்திலே அரங்கேற்றி, ஞானோபதேசம் பெற்று, அந்தஞானாசாரியரது கட்டளைப்படியே தமது தங்கையாகிய ஞானாம்பிகையைச் * சாந்தலிங்கசுவாமிகளுக்கு விவாகஞ்செய்துகொடுத்துவிட்டு, தம்மை நெடுநாளாகப் பிரியாது அத்தியந்த அன்புடையராய் உடன்றொடர்ந்து வந்த அண்ணாமலைசெட்டியாரைத் துறைமங்கலத்துக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்து, ஞானாசாரியரைத் தரிசித்துக்கொண்டு, அவ்விடத்திற்றானே இருந்தார்.

சிலகாலஞ்சென்றபின் ஞானாசாரியரிடத்தே விடைபெற்றுக் காஞ்சிபுரத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து அங்கிருக்கும்பொழுது, நிஜகுணயோகியென்பாராற் கன்னடபாஷையிற் செய்யப்பட்டிருந்த விவேகசிந்தாமணியின் ஓர் பாகமாகிய வேதாந்தபரிச்சேதத்துக்கு வேதாந்தசூடாமணியெனப்பெயர்தந்து அதனையும், இரேணுகரென்னுங் கணத்தலைவரால் அகத்தியமகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட சித்தாந்தசிகாமணியையும், பிரபுதேவர் சரித்திரமாகிய பிரபுலிங்கலீலையையும், தமிழிற்பாடியருளி, ஞானாசாரியரைத் தரிசிக்கவேண்டுமென்று

* சாந்தலிங்கசுவாமிகள் பின்னர்த் துறவுபெற்றவர்.

ம் பேராசையால் அவர்மீது பிள்ளைத்தமிழ், திருப்பள்ளியெழுச்சி, அதிசயப்பத்து, என்னும் மூன்று பிரபந்தங்களையுஞ் செய்துகொண்டு, அங்ககன்று இடையிலுள்ள தலங்களைத்தரிசித்து, கூவமென்னும் திருவிற்கோலத்திற்கு* எழுந்தருளும்பொழுது, அத்தலத்தில் வீற்றிருக்கும் திரிபுராந்தகநாதருக்கு நித்தியநைமித்திகங்களை வழுவாமல் நடத்திக்கொண்டு அதிசுசீலர்களாய்க் கூவமுதலிய ஐந்துநகரத்திலுமிருந்த வேளாளர்கள், சுவாமிகளின் அற்புதமகிமைகளைக் கேள்வியுற்று, எதிர்கொண்டுபசரித்து வணங்கி, அத்தலபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தருளும்படி பிரார்த்திக்க; அவர்களது வேண்டுகோளுக்கிசைந்து, அத்தலத்தில் வாசஞ்செய்துகொண்டு புராணம்பாடி முடித்து, அரங்கேற்றி, பிரிவாற்றாது வருந்திநிற்கும் அவர்களைத்தேற்றி நிறுத்திவிட்டு, ஞானாசாரியரையடைந்து தரிசனஞ்செய்து, மேற்சொல்லிய பிரபந்தங்களைச் சந்நிதியிலரங்கேற்றி, உடன்வசித்திருந்தார்.

பின்னர் ஞானாசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு விருத்தகிரியையடைந்து,பழமலைநாதனையும் பெரியநாயகியம்மையாரையுந் தரிசித்து வணங்கி, அவ்விடத்திலே ஞானாசாரியர் கட்டளைப்படி ஒரு திருமடமமைத்துத் தம்வரவுநோக்கி எதிர்கொண்டு வணங்கிநிற்கும் சிதம்பரபூபதியைச் சிறப்பித்து,

“வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்து
ணாக்கு, மெங்கட் கினிய சிவஞான தேவ னிசைவு
கொடு, திங்கட் பவனி யிருகான் முதுகுன்றர் சேர்
மறுகின்,மங்குற்சிதம்பர பூபதி நல்குமடமிதுவே.”

எனனும கட்டளைககலிததுறையைப பாடியருளி, அத்திருமடத்தடைந்து வீற்றிருந்து, பழமலையந்தாதி, பிக்ஷாடன நவமணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங்கழிநெடிலாசிரிய விருத்தம், பெரியநாயகியம்மை கலித்துறை, என்னும்பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினார்.ஒரு நாள், மணிமுத்தநதியிலே ஸ்நானஞ்செய்து வரும் பொழுது, அதனருகிருந்த மாஞ்சோலையின்புறத்து வறிதே விழுந்துகிடந்த மாங்கனியைக்கண்டு,இது சிவலிங்கப்பெருமானுக்கு நைவேத்தியத்திற்கு உபகரணமாகுமென்று கருதி எடுக்க; அதுகண்ட அச்சோலைக்காவலாளன், மகிமையறியாது மடிபிடித்திழுத்து மனவருத்தஞ்செய்தனன்.சுவாமிகள், அவன் சிவாபராதியாயிருத்தலின் அவனை தண்டித்துச் சுத்தனாக்கத் திருவுளங்கொண்டு,

“அடுத்துவருந்தொண்டனுக்கா வந்தகனைத் தாளா
லடர்த்ததுவுஞ் சத்தியமே யானா-லெடுத்ததொரு
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்.”

என்னும் வெண்பாவைப்பாடி, சூரியனுதயமா னவுடன் உயிர்துறக்கும்படி செய்து, நற்கதியில டைவித்தருளினார்.

சிலநாட்சென்றபின் அங்ககன்று,திருப்பதிகம்பெ ற்ற திருத்தலங்கடோறும் யாத்திரைசெய்துவரும் பொழுது, அகராதிசெய்தவீரமாமுனிவரென்பவர், எதிர்ப்பட்டு யேசுமதமாகிய தங்கொள்கையை நா ட்டுதற்பொருட்டுத் தருக்கஞ்செய்ய; உடனே அக் கொள்கையை மறுத்து, யேசுமதநிராகரணமென ப்பெயரிய ஓர்நூலை அருளிச்செய்து, ஒவ்வோர்தல ங்களையும் இவ்விரண்டுவெண்பாக்களாற் றோத்திர ஞ்செய்துமுடித்து, அதன்பின் கலம்பகமென்னும் ஓர்பிரபந்தத்தை இயற்றிக்கொண்டுவந்து, ஞானா சாரியரைத்தரிசித்து, அந்நூலை சந்நிதானத்தி லரங் கேற்றி, உடன் வசித்தனர். ஒருநாள், சாயங்கால அநுட்டான முடித்துக்கொண்டு, ஞானசாரியரிட த்துத் தாம் ஏகாந்தமாயிருந்து, சடஸ்தல இலிங் கானுபவமுதலியவற்றை ஆராய்ந்துகொண்டு இன் புறும்பொழுது, எதிரொழுந்த சந்திரோதயத்தைக் கண்டு,

"கடன்முரச மார்ப்பக் கதிர்க்கயிற்று லேறி
யடைமதி விண்கழைநின் றாடக் - கொடைமருவு
மெங்கள் சிவஞான வேந்த விறைத்தமணி
தங்கியவே தாரகைக டாம்."

என்னும் வெண்பாவை அருளிச்செய்து, பின்னுமொருநாள், தனிமையாய்ச் சமுத்திரதீரத்தை யடைந்து அங்குள்ள நறுமணற்பரப்பில் தாமெழுதிய நன்னெறிவெண்பா நாற்பதையும் எழுதிவரும்படி தம்பின்னோராகிய கருணைப்பிரகாசசுவாமிகளுக்குக் கட்டளையிட்டு, ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு நல்லாற்றூரையடைந்து, அவ்வாசிரியர் திருமடத்தில் வீற்றிருந்தார்.

இவரிடத்து விடைபெற்றுச்சென்ற கருணைப்பிரகாசசுவாமிகள், இஷ்டலிங்கவகவல் பாடிமுடித்து, சீகாளத்திப்புராணத்தைப் பாடத்தொடங்கி சீகாளத்திச்சருக்கம்வரையும் தமிழில் மொழிபெயர்த்தருளி, திருவெங்கைமாநகரத்தில், பதினெட்டாம்வயதில், சிவலிங்கவைக்கியமாயினார். அதனையறிந்த சிவப்பிரகாசசுவாமிகள், அவ்விடத்தேசென்று,

"முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு கண்டசுவை முதிர்ச்சி யாலே, தன்னியலை முழுதுமுரைத் தமையாமுன் னினைக்கவர்ந்து தடங்காளத்தி, மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே, யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச னென்னுங் கோவே."

என்னும் விருத்தத்தைப் பாடிநிற்க; வேலையசுவாமிகள்,

"ஆண்டதனு லெனையொவ்வாய வித்தையினிற்
றமையனினு மதிக மென்றே,பூண்டவுல கதனினு
ள்ளோர் புகல்வதுகேட் டிருந்துமென்ன புதுமை
தானோ, காண்டகுகண் மணியேநல் விளங்கருணைப்
பிரகாசக் காளாய் நீதான், மாண்டனையென் றறி
ந்திருந்து முயிர்தரித்தேன் யானுமிகு வன்னெஞ
சேனே."

என்னும் விருத்தத்தைப்பாடித துக்கித்துக்
கொண்டு, சுவாமிகளைப் பிரியலாற்றாது வருந்திநி
ன்றனர். அவரை ஒருவாறுதேற்றி நிறுத்திவிட்டு,
தாம் நல்லாற்றூரையடைந்து, திருமடத்திலிருந்து
கொண்டு, சிவநாமமகிமையும், இஷ்டலிங்கப்பெரு
மான்மீது அபிஷேகமாலையும், நெடுங்கழிநெடிலும்,
குறுங்கழிநெடிலும், நிரஞ்சனமாலையும், கைத்தல
மாலையும், சீகாளத்திப்புராணத்தில் கண்ணப்பச்ச
ருக்கமும், நக்கீரச்சருக்கமும், செய்தருளி, சிவாநு
பவச்செல்வராய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்து, முப்
பத்திரண்டாம்வயதில், கன்னிமதியில், பௌர்ணி
மைத்திதியில், பரசிவலிங்கத்திற் கலந்தருளினர்.

அப்பொழுது வேலையசுவாமிகள்,

"அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்-முல்லை
யரும்பிற் பொரவியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுவிக்ர்த்தேன் காண்."

என்னும் வெண்பாவைப்பாடி அளவிடப்பட டாத அருந்துயர்க்கடலின்மூழ்கி, ஒருவாறு தெளிந்து, சிவப்பிரகாசசுவாமிகளது சமாதிதரிசனஞ் செய்துகொண்டு, அவ்விடத்தினின்றும் நீங்கி, நல்லூர்ப்புராணம், இஷ்டலிங்கக்கைத்தலமாலை, கும்பகோணச்சாரங்கதேவர் சரித்திரமாகிய வீரசிங்காதனபுராணம், குகைநமச்சிவாயதேசிகர் சரித்திரமாகிய நமச்சிவாயலீலை, கிருஷ்ணசரித்திரமாகிய பாரிசாதலீலை, மயிலத்திரட்டைமணிமாலை, மயிலத்துலா, என்னும் பிரபந்தங்களைச் செய்தருளி, சீகாளத்திப்புராணத்தையு முடித்து பெருமத்தூர்மடத்தில், எழுபத்திரண்டாம்வயதில், சிவலிங்கவைக்கியமாயினர்.

முற்றுப்பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090.

உ

சிவமயம்.

# மூவரருளியபிரபந்தங்கள்.

## சிவப்பிரகாசசுவாமிகள்.

சோணசைலமாலை.
திருச்செந்திலந்தாதி.
திருவெங்கைக்கோவை.
திருவெங்கைக்கலம்பகம்.
திருவெங்கையுலா.
திருவெங்கையலங்காரம்.
சிவபிரகாசவிகாசம்.
தருக்கபரிபாஷை.
சதமணிமாலை.
நால்வர்நானமணிமாலை.
தாலாட்டு.
நெஞ்சுவிடுதூது.
வேதாந்தசூடாமணி.
சித்தாந்தசிகாமணி.
பிரபுலிங்கலீலை.
பிள்ளைத்தமிழ்.
திருப்பள்ளியெழுச்சி.
அதிசயபபத்து
திருக்கூவப்புராணம்.
பழமலையந்தாதி.
பிக்ஷாடனநவமணிமாலை.
கொச்சகக்கலிப்பா.
பெரியநாயகிவிருத்தம்.
பெரியநாயகிகலித்துறை.
யேசுமதநிராகரணம்.
க்ஷேத்திரவெண்பா.
கலம்பகம்.
நன்னெறி.
சிவநாமமகிமை.
அபிஷேகமாலை.
நெடுங்கழிநெடில்.
குறுங்கழிநெடில்.
நிரஞ்சனமாலை.
கைததலமாலை.

## வேலையசுவாமிகள்.

நல்லூர்ப்புராணம்.
கைத்தலமாலை.
வீரசிங்காதனபுராணம்.
சுகைகநமச்சிவாயலீலை.
பாரிசாதலீலை.
மயிலத்திரட்டைமணிமாலை
மயிலத்துலா.

## கருணைப்பிரகாசசுவாமிகள்.

இஷ்டலிங்கவகவல்.

இம்மூவருமருளிச்செய்தது.
சீகாளத்திபுராணம்.

ஆகப்பிரபந்தங்கள்-௪௩.

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

# திருவிற்கோலத்தேவாரம்.

பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம.

உருவினாருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினன்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினனுறைவிடந்திருவிற்கோலமே. (க)

சிற்றிடையுமையொருபங்கனங்கையி
லுற்றதோரெரியினனொருசரத்தினால்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (உ)

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனார்வண்ணவண்ணம்வான்
பையரவல்குலாள்பாகமாகவுஞ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. (ங)

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலனை
யுதைத்தவனுயிரிழந்துருண்டுவீழ்தரப்
புதைத்தவனெடுநகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (ச)

முந்தினான்மூவருண்முதல்வனாயினான்
கொந்துலாமலர்ப்பொழிற் * கூகமேவினா

* கூவம் என்பது - கூகம் என மருவியது.

னந்திவான்பிறையினானடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. (ரு)

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினான்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (சு)

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந்
தரித்தவன்றரியலர்புரங்களாசற
வெரித்தவனிலங்கையாகோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (எ, அ)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையில்வைத்தவ
னரியொடுபிரமனதாற்றலாலுருத
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே. (கூ)

சிர்மையில்சமணொடுசீவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதநேசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வமபரிந்துநல்கிடுஞ்
சீர்மையினானிடந்திருவிற்கோலமே. (க0)

கோடல்வெண்பிறையனைக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லஃதமிழ்ஞானசம்பந்தன்
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

# *திரு இலம்பையங்கோட்டூர்த்தேவாரம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறு
    மாசிலாச்சீர்மறைக்காடுநெய்த்தான
நிலையினானெனதுரைதனதுரையாக
    நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கலையினார்மடப்பிணைதுணையொடுந்துயிலக
    கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலு
மிலையினார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
    ரிருக்கையாப்பேணியெனனெழிலகொள்வதியலபே. (௧)

திருமலர்க்கொன்றையானின்றியூர்மேயான்
    றேவர்கடலைமகன்றிருக்கழிப்பாலை
நிருபமனெனதுரைதனதுரையாக
    நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனைநீண்மலர்க்குவளை
    கதிர்முலையிளையவர்மதிமுகத்துலவு
மிருமலர்த்தண்பொய்கையிலம்பையங்கோட்டூ
    ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௨)

---

* இத்தலத்தின் மான்மியத்தை இப்புராணத்தின் ௬௬ - வது பக்கத்திற் காண்க.

பாலனும்விருத்தனும்பசுபதிதானும்
பண்டுவெங்கூற்றுதைத்தடியவர்க்கருளுங்
காலனுமெனதுரைதனதுரையாகக்
கனலெரியங்கையிலேந்தியகடவு
ணீலமாமலர்ச்சுனைவண்டுபண்செய்ய
நீர்மலர்க்குவளைகடாதுவிண்டோங்கு
மேல்நாறும்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௩)

உளங்கொள்வாருச்சியார்கச்சியேகம்ப
னொற்றியூருறையுமண்ணாமலையண்ணல்
விளம்புவானெனதுரைதனதுரையாக
வெள்ளநீர்விரிசடைத்தாங்கியவிமலன்
குளம்புறக்கலைதுளமலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங்கூவிளங்கொள்ள
விளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாபபேணியென்னெழிலகொள்வதியலபே. (௪)

தேனுமாயமுதுமாய்த்தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன்வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுரைதனதுரையாக
வரியராவரைக்கசைத்துழிதருமைந்தன்
கானமான்வெருவுறக்கருவிரலூகங்
கடுவனோடுகளுமூர்கற்கடுஞ்சார
லேனமானுழிதருமிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௫)

மனமுலாமடியவர்க்கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிரிந்துண்பிலான்மற்றோர்

தனமிலானென துறைதன துறையாகத்
    தாழ்சடையிளமதிதாங்கியதலைவன்
புனமெலாமருவிகளிருவிசேர்முத்தம்
    பொன்னொடுமணிகொழித்தீண்டிவந்தெங்கு
மினமெலாமடைகரையிலமபையஙகோட்டூ
    ரிருககையாபபேணியெனனெழிலகொள்வதியலபே. (சு)

நீருளான்றீயுளானந்தரத்துள்ளா
    னினைப்பவர்மனத்துளானித்தமாவேத்து
மூருளானெனதுறைதன துறையாக
    வொற்றைவெள்ளேறுகந்தேறியவொருவன்
பாருளாரபாடலொடாடல்றூத
    பண்முரன்றஞ்சிறைவண்டிளம்பாடு
மேருளார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
    ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (எ)

வேருலாமாழ்கடல்வருதிரையிலங்கை
    வேந்தனதடக்கைகளடர்த்தவனுலகி
லாருலாமெனதுறைதனதுறையாக
    வாகமோராவணிந்துழிதருமண்ணல்
வாருலாநல்லனமாக்களுஞ்சார
    வாரணமுழிதருமல்லலங்கான
லேருலாம்பொழிலணியிலம்பையங்கோட்டூ
    ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (அ)

கிளர்மழைதாங்கினானான்முகமுடையோன்
    கீழடிமேன்முடிதேர்ந்தளக்கில்லா
வுளமழையெனதுறைதனதுறையாக
    வொள்ளழலங்கையிலேந்தியவொருவன்

## ௨௬ திருஇலம்பையங்கோட்டூர்த்தேவாரம்.

வளமழையெனக்கழைவளர்துளிசோர
　மாசுணமுழிதருமணியணிமாலை
யிளமழைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
　ரிருக்கையாப்பேணியெனவெழில்கொள்வதியல்பே. (௯)

உரிஞ்சனகூறைகளுடம்பினராகி
　யுழிதருசமணருஞ்சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரைதனதுரையாகப
　பெய்பலிகொன்றுழல்பெரியவர்பெருமான்
கருஞ்சுனைமுல்லைநன்பொன்னடைவேங்கை
　களிமுகவண்டொடுதேனினமுரலு
மிருஞ்சுனைமல்கியவிலம்பையங்கோட்டூ
　ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே.(௧௦

கந்தனைமலிகனைகடலொலியோதங்
　கானலங்கழிவளர்கழுமலமென்னு
நந்தியாருறைபதிநான்மறைநாவ
　னற்றமிழ்க்கின்றுணைஞானசம்பந்த
னெந்தையார்வளநகரிலம்பையங்கோட்டூ
　ரிசையொடுகூடியபத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிடவிண்ணவரோடும்
　வீடுபேறின்மையின்வீடெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

சுவாமிதிருநாமம்-அரம்பேசுரர்.

தேவிதிருநாமம்-கனககுசாம்பிகையம்மை.

சந்திரசேகரர்-கோடேந்தமுலையம்மை-என்பதும் வழக்கம்.

---

# சருக்கவகராதி.

| பககம். | சருக்கம். | தொகை. |
|---|---|---|
| ௭0 | அடிமுடிதேடியசருக்கம். | ௪௨ |
| ௬௪ | சந்தானகிரிசந்தானச்சருககம். | ௨௪ |
| ௭௯ | செங்நெல்வைத்தசருக்கம். | ௪௨ |
| ௮௯ | தாருகன்வதைச்சருக்கம். | ௨௯௩ |
| ௩௬ | திரிபுரதகனச்சருககம். | ௧௩௮ |
| ௧௯ | திருததலச்சருக்கம். | ௭௮ |
| ௫ | நைமிசாரணியச்சருக்கம். | ௭0 |
| ௧ | பாயிரம். | ௧௬ |

## பிரசித்தபத்திரம்.

சென்னபட்டணம் முத்தியாலுப்பேட்டை தமபு செட்டியார்வீதியில் மேலண்டைவாடை-130-வது நெம்பர் வீட்டில் நமயிடத்திலும், சென்னபட்டணத்தைச்சார்ந்த இராயபுரம் மன்னார்சாமிகோவில் தெருவில் கீழண்டைவாடை-94-வது நெம்பர் வீட்டில் ம-ள-ள-ஸ்ரீ சரவணஐயரவர்களிடத்திலும், சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர்திருவனந்தல் காலை சந்திக கட்டளை ம-ள-ள-ஸ்ரீ சி-கந்தசுவாமிமுதலியாரவர்களிடத்திலும் இப்புத்தகம், அணா-10-ஆகவும், வசவ புராணம், ரூபா-1-அணா-4-ஆகவும விலைக்குப் பெறறுக்கொள்ளலாம். தபால்முன்னிலேயில் அழைத்துக் கொள்வோர் தபாற்கூலியுடன் மனியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இங்ஙனம்,
கா. ஞானசுந்தரஐயர்.

# பரிசோதனபத்திரம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம. |
|---|---|---|---|---|
| ௧௩ | சரித திரம். | ௧௯ | பராற | பவராற |
| ௮ | ௧௭ | ௨ | வுன்ஞை | வுனனில் |
| ௧௪ | ௪௪ | ௩ | வானிர | வெநதிர |
| ௩0 | ௫௧ | ௪ | தமர் | தமாக |
| ஷை | ௫௫ | ௧ | கணிறைநது | கண்ணிமைததுக் |
| ௪0 | ௨௧ | ௩ | கொண்டு | கேடு |
| ௪௨ | ௨௯ | ௨ | மெழுந | நலிந |
| ௪௬ | ௫௧ | ௩ | தனன | ானன |
| ௪௮ | ௫௬ | ௩ | சொல்லி | சொலலின |
| ௫௨ | ௭௯ | ௪ | பொற | போர்க |
| ௫௬ | ௯௬ | ௩ | வே, ஞெ | வென,ஞெ |
| ௬௩ | ௧௩௩ | ௩ | ஞேன்றி | றுவனறி |
| ௭௩ | ௪௪ | ௨ | வேதை | மேதை |
| ௭௪ | ௨0 | ௨ | திநாங் | தூநங |
| ௮௯ | ௧ | ௪ | லிருக்கு | லிரிசகு |
| ஷை | ௩ | ௧ | களை | கஞ |
| ௯௫ | ௩0 | ௩ | வன்னஞ் | வநநரு |
| ௧௧௩ | ௧௨௫ | ௧ | மகிழ்நது. | மகிழ்நதே |
| ௧௨௨ | ௧௭0 | ௪ | றுற்றுச் | றுததி |
| ௧௨௮ | ௨0௩ | ௩ | று, | றுங, |
| ௧௩0 | ௨௧௧ | ௧ | ளாறு | ளேழு |
| ௧௩௭ | ௨௪௫ | ௧ | குல்லைரே | குலாலனே |
| ௧௩௮ | ௨௫௧ | ௪ | றதே. | றவே. |

இப்பரிசோதன பத்திரத்துட் குறிக்கப்படுவன, இப்புராணத தைஅச்சிட்டபின்னர்க்கிடைத்தபிரதிகளிற்காணப்பட்டன.

கணபதிதுணை.

## திருச்சிற்றம்பலம்.

# திருக்கூவப்புராணம்.

## பாயிரம்.

### காப்பு.

குவளைத்தந்தக்குளிர்விண்வளைத்துறக்
கவளத்தந்தக்கரணமிருத்திய
பவளத்தந்தப்படிவங்கர்த்தொளிர்
தவளத்தந்தத்தலைவனைவாழ்த்துவாம். (௧)

நச்சிறுத்தநயனச்குவிமுலைப்
பொச்சிறுத்தநுசுப்பினர்ப்போற்றிவாய
மிச்சிறுத்தவிரகவிகர்ங்கொலோ
வச்சிறுத்தவடிகளடிகளே. (௨)

### திரிபுராந்தகநாதர்.

நீர்கொண்டசடையொடுநம்பெருங்காமத்தழலவிப்பநிற்கின்றானைக், கூர்கொண்டகனமழுமானாண்மையும்பெண்மையுமாயகூற்றிற்கேற்பச், சீர்கொண்டவலனிடங்கொளுயகனைப்புகலியிறைச்செந்தமிழ்ப்பூந்,தார்கொண்டதிருவிற்கோலப்பெருமான்றனையிதயத்தவிசின்வைப்பாம். (௩)

### திரிபுராந்தகநாயகி.

பைத்தசிறுமணியரவந்தாழ்ந்துமதிகவர்கின்ற
பரிசதென்ன, மெய்த்தவிரும்புகழ்த்திருவிற்கோல
நாயகன்மகிழ விற்கோலத்தை, யொத்தநறுநுதலி
டைப்பொம்சுட்டியின்கீழ்வெண்டிலக மொளிரத்தீ
ட்டி, வைத்தருளுமெழி லுடைப் *பையரவல்குலம்
மைபதம்வணககஞ்செய்வாம். (௨)

### சபாநாதர்.

சீர்கொண்டமலைமாதின்றிருநுதல்கண்டராப்ப
சைவெண்டிங்கணீககி, யார்கொண்டசடையரவமல்
குலைக்கண்டடற்கையுழைப்பகையயர்த்து,நோகொ
ண்டவுழைவிழிகண்டருகுறுமெய்ப் புலிபபகைநீத
திருப்பநின்றே, யேர்கொண்டதனித்தில்லைநடம்பு
ரியெம்பெருமானையிறைஞ்சல்செய்வாம். (௩)

### சிவகாமியம்மை.

வன்னிகரம்வளர்வுறநற்பணிபயிலவருவார்க்கு
ச்சுவர்க்கமீந்து, பன்னுநுதன்மதியடியார் பரிபுரங்
கொண்டெழிற்கனிமெல்லிதழியாரப், பொன்னனு
குமலரவைசேர்ந்திசைகொளரிமறையோதி புரிந்து
தாழ்த், தன்னையிடத்திருத்துபரம்பொருளிங்கரு
மையம்மைசரணிற்றாழ்வாம். (௪)

### விநாயகக்கடவுள்.

கற்றைநெடுஞ்சடாமவுலிப்பிறையுமொருதன்
கோடுங்கரத்திற்சேர்த்தி, மற்றைநிறைமதியாக்கிம

---

* பையரவல்குலம்மை என்பதும் தேவிதிருநாமம்.

றுவிகந்துவல்லவைதன்வடிவுபூத்த, நெற்றிநிகர்த்த மையன்றி யழகொழுகுதிருமுகத்தை நிகர்ப்பநேய ம், பெற்றமழகளிற்றைறமனச்சேவகத்தினிறுவியிட ரப்பிறவிதீர்ப்பாம். (ரு)

சுப்பிரமணியக்கடவுள்.

நான்குமுகன்றெழுமைந்துமுகனீன்றவாறுமு கநாதன்றன்னை, வான்குலவுமொருகடவுள்யானையி ன்பாகனைப்புனத்துவடிவுகூர்ந்த, மான்குறமகவேங் கையுருவெடுத்தானை யசுரர்குலமாய்த்துப்பேய்கட், கூன்குருதியொடுமளவிப்புதுவிருந்திட்டானை நம துளத்துள்வைப்பாம். (சு)

திருநந்திதேவர்-வேறு.

பாக்குலங்கள்பழிச்சுமைநெஞ்சமும்
வாக்குமங்கைவடிவுநிகர்த்தொளி
தேக்கும்வெள்ளிச்சிலம்புடனெம்மையுங்
காக்குநந்திகழறெழுதேத்துவாம். (எ)

காரைக்காலம்மையார்.

கிடந்துகண்களிற்கேட்குமவன்புக
லடைந்தகைகொடுயிர்ப்பவனத்தன்வாழ்
வடந்தயங்குவனத்திற்றலையிறை
னடந்தவம்மைபதமலர்நண்ணுவாம். (அ)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

அங்கமானதணங்கினுமேம்படு
மங்கையாகப்படைத்துமகளெனப்

திருக்கூவப்புராணம்.

பங்கயாதனன்வெள்குறப்பார்த்தருள்
பொங்குஞானசம்பந்தனைப்போற்றுவாம (௯)

திருநாவுக்கரசுநாயனார்.

மருக்குலாவுமறைவனத்தொன்றிய
திருக்கபாடந்திறந்தசொல்வேந்தனை
யருட்குலாவுமறிவினைமூடிய
விருட்கபாடந்திறக்கவுமேத்துவாம். (௧0)

சுந்தரமூர்த்திநாயனார்.

கன்றுகாமங்கழன்றிலர்தம்முரு
வென்றமோர்வரிதென்றிருப்போன்றனை
யனறுதூதுவனாகவரிவைபாற்
சென்றுவாவென்றதீரனைவாழ்த்துவாம். (௧௧)

மாணிக்கவாசகசுவாமிகள்.

இன்பமாணிக்கவாசகனென்னுமோர்
மன்பெரும்பெயரியாரும்வழங்குறத்
தன்பெயர்க்கொடையோடுதரித்தபே
ரன்பன்றன்னையகத்துளிருத்துவாம். (௧௨)

அவையடக்கம் - வேறு.

மூதறிவாளருமறிவின்மூகரு
மோதுறுநடுநிலையோருஞ்சொற்பொருட்
டீதுரைப்பதற்கொருசெயலுங்கண்டிலே
னுதலினென்கவிக்கழிவின்றுகுமால். (௧௩)

நூல்வந்தவழி - வேறு.

காவிநேர்விழிமங்கைபங்கினளிசைக்காந்த
மேவுமாசனற்குமாரசங்கிதையிலவிரித்த
தாவில்காளிகாகாண்டமென்கடம்புகழ்தன்னிற்
கூவநீர்மையுட்கொண்டியான்கூறுவன்றமிழால். ()

பாயிரமுற்றிற்று.

ஆகச செய்யுள் - சரு.

---

## நைமிசாரணியச்சருக்கம்.

சீதவம்புலாமலர்க்கொடிநானிலந்திகழும்
பாதவமபுதலாதியவளமெலாம்பயின்ற
தாதவம்பனிமழையொலிக்குடைந்திடாதமர்ந்து
மாதவம்புரிவோர்க்கிடநைமிசவனமே. (௧)

பொன்னுலாமலர்க்கற்பகாடவிநிழற்போக
மின்னலாமெனவெறுத்திநதவனததிடையின்ப
மன்னயான்புகவருளெனவீசனைமகவா [போர்
னுன்னிவேண்டுவனெனிலதன்சிறப்பெவருரைப்

வந்ததேபுணவாகிமற்றானுணமயுத்துச்
சந்தயோகிகள்போன்றபோகிகளுறத்தமது
புந்திபோம்விரிவொடுக்கியேபொதிப்பணமட்க்கு
மூந்துபோகிகள்போன்றியோகிகளுறுமுதிர்கான்.

எலியும்பாம்புமங்கதமுமஞ்ஞையுமிளமயிலு
நலியுங்கோம்பியுமொருத்தலுமடங்கலு * நவியும்
புலியுந்தாம்பெறுபகையொரீஇப்புணருமவ்வனத்தி
மெலியும்பாவமுமறமுமேபகையன்றிவிரவா. [ன்

ஆதிமாலயன்மனத்தெழுமகந்தையையடக்க
மீதுலாமழன்மயநெடுந்தம்பமிக்குயர்ந்த
சோதிமாமரமுகிலதிற்சூழ்தருதூமந்
தீதிலாவகிமணிசிதறியபொறிசசிவனும். (௫)

கரணநான்கையுங்கடந்தமுக்கட்பெருங்கடவுள்
சரணவாரிசம்பற்றெனவடைந்ததாபதர்க்குத்
தருணவேள்வியிற்பகைஞர்சாதித்திடப்படாத
வரணமாயதுநலந்தருநைமிசாரணியம். (௬)

பேரசோகமேயெனக்கொடுபிண்டிவின்மதவேள்
வீரவாளியாய்மலாந்துதுன்பங்களேவிளேத்த
கோரபாவமற்றப்பெயர்மெய்பெறக்குளிர்ந்து
வாரமாதவர்சோகநீத்திடமலர்வழங்கும். (௭)

அருந்தவம்பயின்றைம்புலக்குறும்பினேயடர்த்துத்
திருந்துநன்முனிவரர்வனத்தொருதனித்திகிரி
மருந்தயங்குவெண்குடைநிகர்மதிதனுதும்பர் [கும்
பொருந்துகின்றழிக்காம்பெனும்பெயரினேப்புதுக

* நவ்வி எனபது நவி என்றாயிற்று.

வேறு.

நெட்டிலைகொண்டுநிமிர்ந்தெழுதாழை
கிட்டியிணைந்துறுகின்றனதோகைப்
புட்டனையொக்குமிசைக்கதிர்ப்போது
நட்டிவர்செவ்வயினம்பியையொக்கும். (கூ)

எரிபுரைகின்றவிளந்தளிர்மாவி
னருகுறநீனிறமார்தருபுன்னை
மருவுதல்செஞ்சடைவள்ளன்மருங்கு
தருமம்வளர்ப்பவடங்குதலொக்கும். (க0)

ஒன்றினொடொன்றிழையொண்கழைதம்மில
வன்றழல்வந்துவளர்ந்தெழமீது
சென்றமர்மந்திதிடுக்கிடவிண்ணின்
மன்றனெடுந்தருவின்மிசைவாவும். (கக)

பாசிலைகொண்டுயர்பாதவமென்பூ
மாசறுமையர்மருங்கினுகுத்தல்
கேசவனன்புகிடைத்தவர்மீது
வீசுறுமொய்ம்மலர்மாரியின்மேவும். (கஉ)

வேறு.

இத்தகைநலம்பெற்றுள்ள வெழிறருவனத்தின் மேய, மெய்த்தவர்புலன்களைந்தும் விரவுறுமனமு மீட்டு, முத்தலையெஃகமேந்து முதற்பெருங்கடவு டன்பா, லுய்த்தவருலகவாழ்வை யொருபொருளா கக்கொள்ளார். (கங)

உலகினர்செல்வநந்தலுளைப்பொருளிரண்டுங் கோட, விலகுவிண்மதியங்காட்டவென்றுமோாத கைத்தாய்ச்சேறல், விலகுதஞ்செல்வமெங்கள்விழு ப்பொருளாயவண்ண, லலகிலசெஞசோதிப்பின்ன லணிமதியுணர்த்தவாழ்வார். (கச)

அன்புகொண்டருஞ்சிவத்தோடயர்ந்தனுப வித்திருக்கு, மினபமுமுத்தியன்றென்றிகந்துறந் துடையமேலோர், துன்பமிக்கெய்திமின்னிற்றொ லைந்துபோஞ்சிற்றின்பத்திற், றன்பரிவறத்துறதத ல்சாம்றவேண்டுவதுமுண்டோ. (கரு)

சேயரிநெடுங்கட்செவ்வாய்ச்சிறுநுதற்கரிய கூந்தல், வேயமர்வலயப்பொற்றோள்வெம்புறழ்கு வவுக்கொங்கை, யாயிழைமகளிர்நேயத்தணையினும வளாயின்ற, தாயெனக்கருதுநீரார்தபனியமோட்டி ம்காண்பார். (கசு)

பற்றிகலிலாதஞானப்பண்பினர்நட்டார்ப்பே ண, மற்றவர்ச்செறுக்கவுன்னுவல்லமெய்த்தவத்தி ன்மேலோர்,முற்றுறமின்பதுன்பமுன்புளதொட ர்புடற்கென், றற்றமின்மகிழ்ச்சிவாட்டமகன்றநற் றுணிவின்மிக்கார். (கஎ)

கண்டிகைக்கலனுநீற்றுக்களபமும்பொலிந்தயா க்கை, * மண்டிதர்சடிலக்கற்றைமவுலியர்நிறைந்த

* மண்டிதர் - அலங்காரமுடையவர்.

தெண்ணீர்க்குண்டிகைதண்டுதாங்குகையினர்குன்றவில்லி, புண்டரீகத்தாட்கன்புபொருந்தியமனத்தர்மாதோ. (கஅ)

கண்புனலுளிப்பநெஞ்சங்கரைந்துகமயிர்பொடிப்பத், தண்புனறரித்தவேணித்தம்பிரான்பூசைசெய்வார், பண்பயின்மறைகளுன்கின்பயத்தவாமஞ்செழுத்து, நண்புடன்பகருகின்றநாவர்முக்குற்றந்தீர்ந்தார். (கக)

வேதன்மாறமையுமன்னோர்வியன்பதந்தமையுநகொள்ளா, ராதிநாயகனெம்மீசனருளினுலவர்தஞ்செய்கை, யாதுமோர்திரணந்தன்னையியற்றிடநிறுவவல்லா, ரோதுறுதுதிநிந்தைக்கணுவகையும்வெறுப்புமில்லார். (உ0)

ஆதரவின்சொற்றூய்மையருணெறியொழுக்கமெய்ம்மை, மேதகவுடையர்திமைவிரகம்பொயயாசைகோபங், காதரவிலர்வேதாந்தக்கருத்துணர்பெரியர்செம்பொற், பூதரவில்லிதானம்புகுந்திறைஞ்சுதற்குநேயர். (உக)

வேறு.

இப்பெருமுனிவர்தம்முண்முன்பொருநாளிருந்தவக்காசிபன்வசிட்டன், றுப்புறழ்சடிலக்கௌதமன்பாரத்துவசன்கண்ணுவன்சவுனகனே, மெய்ப்புலத்தியன்ற சனகனாதன் வான்மீகன்சாதாதபனு

தி,யொப்பிலரநேகர் குழுமியவ்வனத்திடுருபுடை
வந்துவீற்றிருந்தார். (௨௨)

இருந்தவர்சனனசாகரங்கடத்தற்கிணையுறும
பரசிவகதியிற், பொருந்தினர்க்கன்றியரிதெனத்தம
துபுந்திகொண் டனைவருமதுதான், வருந்திமமுயல்
வதெந்நெறியென்னுமற்றதையாய்ந்தனருசாவ, வ
ருந்ததிகொழுநன்முதுகருறைவதனலடிகள்கேண
மினகளென்றறைறவான். (௨௩)

வேறு.

எவ்வகைப்பொருள்களுமீயவல்லது
செவ்வியதவமதேதெரியின்வேறிலை
யிவ்வுலகினிலஃதியற்றுகின்றதே
யுவ்வுடலெடுத்தபேருறுதியென்பவே. (௨௪)

தவத்தினிலமர்புரிசமனைவெல்லலாந்
தவத்தினிலெழுகடறமையுமுண்ணலாந்
தவத்தினில்வடவரைகளேந்துதாங்கலாந்
தவத்தினிலனலமுந்தரிக்கலாகுமே. (௨௫)

நன்றிகொடவத்திலம்பூதநல்கவுந்
துன்றியவுயிர்த்தொகைதோற்றுவிப்பவு
† மன்றியவுலகுயிரடவுநண்ணினர்க்
கொன்றருள்புரியவுமொருங்கிடைய்துமால். (௨௬)

அண்டமும்பொருள்களுமடங்குபேருருக்
கொண்டிடவனுவெனக்குறுகவாழ்புனல்

† அனறுதல் - பகைத்தல்.

விண்டலன்மிசைச்செலவிளிவிலாதுற
வொண்டவமன்றியாதுதவவல்லதே. (உஎ)

பொன்றணிமார்பகப்புனிதனாதியை
நின்றுழிதவத்தினானினைந்தழைத்திட
லனறியுமவர்க்கரிதாயவெள்ளியங
குன்றிறைசரணமுங்குறுகலாகுமால். (உஅ)

ஆதலினொப்புயர்வகன்றுதன்னைநேர்
மாதவமேசெயும்வழக்கமாமென
வோதினன்வசிட்டனங்குணர்த்தநின்றசா
தாதபனினையனசாற்றன்மேயினான். (உகூ)

வேறு.

தருமமேயிணையில்பொருடாயிடைத்தகைசா
லொருமையின்பிணையுதவிவிண்ணுலகினுமுடனபோ
யருமையின்பமுய்த்தந்தகற்செறுமெனிலறமே
யிருமையுந்துணையாகுவதன்றிமற்றில்லை. (௩0)

புகழுங்கல்வியுஞ்செல்வமும்வீரமும்பொலிவு
மகிழுங்கோலமுமொழுக்கமும்விழுப்பமுமவழங்கி
யிகழும்பாவமும்பழியுநீத்தரனுமையிடத்திற்
றிகழும்பூதனாயவரருள்செய்யவுஞ்செய்யும். (௩க)

ஏற்றின்மேல்வருமெந்தைதன்னெழிலுருவறமா
மாற்றிலன்னதேயாற்றுகவென்றவனையைய
நீற்றின்மேனியிற்கண்டிகைமாலைகணிரம்ப
வீற்றிருந்திடுநகவுதமனியையனவிளம்பும். (௩உ.)

மகாமகோபாத்யாய, டாக்டர்

மனைகடோறுமுற்றிரந்திடுகபாலியுண்மகிழ
வனகமால்விடையூர்ந்துவந்தெளிதினிலருளக்
கனைகருங்கடலுலகினிற்செய்வதுகருதின்
வினைகடீர்ந்திடுதானமேயன்றிவேறுளதோ. (௩௩)

அரியவாகியகலைகள்யாவையும்பயிலறிஞர்
பெரியமாதவருயர்தருகுலததிடைப்பிறந்தோ
ருரியதானியைப்புகழ்ந்தனருறுவரங்களவோ
தரியலாரகளுமுறவுசெயதவன்புடைசார்வார். ( )

சூழுமவான்முகிலெனப்பயன்றூக்குறா தளிப்போன்
பாழிமாபுகழ்பபடலைபோய்ப்பரந்திடுமுலகே
ழேழுமாமயன்மான்முதலிமையவர்தமிற்றும்
வாழுமேமபதமனையெனவாக்குறமலைவார். (௩௫)

இகத்தினின்கொடைப்பெருமையையறிந்து
ளோரிலலென்,றகத்திறுமமுறைசெயாரவரிதா
கத், தொகுத்தவோர்பொருணல்குவனொன்பதென்
றுணிந்து, மிகுத்தவாவியுங்கொடுப்பரால்வேண்டு
முன்விரும்பி. (௩௬)

புவியிலின்கொடையில்லவன்றோற்றத்தின்பொ
லிவு, கவிர்மலர்ந்திடற்கொப்பெனக்கழறுவரதனு,
லவிர்பெரும்புகழ்க் கொடையதேயதிகமென்றறை
ந்தான், சவிதருஞ்சடைக்கௌதமன்காசிபன்சாற்
றும். (௩௭)

உவமந்திர்நதிடுவாய்மையொன்றேயுறினுலகிற [ப
றவமுநதானமுமொருங்குறச் செய்தலிற்றலையாய
பவமகன்றுநான்மறைமுடிவாகியபரம
சிவனரும்பதமபெறுமபடியுயர்த்திடுநதெரியின். ()

இரவிவாண்மதியுதித்தொடுங்குதலொலியியங்கல
பரவைதானிகவாதுறல்பயோதரம்பொழிதல்
கருவினூடுவந்தமாதல்பின்றேற்றுதலகாயத
தருவமாமுயிரகிற்குதல்வாய்மையினனறே. (௩௯)

மன்னனாகியிவ்வுலகெலாம்புரந்திடவரினு, ம
ன்னறூனுழந்துடலம்விட்டிறந்திடவரினும், ப
னுமவாய்மையிற்பிறழ்ந்திடாதொழுகவிப்பவம்போ
ய், மினனுலாஞ்சடையெமபிரானபதம்புகவேண்
டின். (௪0)

என்றுகாசிபமுனிவரன்வாய்மையினியல்பை
யொன்றவேவிரித்தருந்தவர்தங்களோடுவைபப
வன்றுசார்ந்துறும்பரத்துவசப்பெயரறிஞன்
குன்றுபோலுயர்குணத்தினீர்கேண்மெனககூறும்.

வின்னுளோர்தமக்கவியுணமகிழ்தரவிளைத்து
மண்ணினுருயிர்க்கெழிலிகொண்டுணவினைவழங்கி
யெண்ணிலெவ்வுலகிற்குமின்பீந்துநற்றனம
புண்ணியந்தவமவளர்த்தலான்யாகமேபொருளாம

வேறு.

இரதிகொண்கனெழிலுருவட்டவன்
பெரிதுமுண்மகிழ்பெற்றிடச்செய்வது

சுருதிசொன்மகமென்றவன்சொற்றிடக்
கருதிமற்றொன்றுகண்ணுவன்கூறுவான். ()

இல்லொழுக்கமியைந்துபிதிர்க்கட
ணெல்லும்வண்ணமுஞற்றிமரபுளோர்
செல்லும்வானிரயத்துயர்சிந்துவான்
வலலமக்கட்பெறற்கிணைமற்றிலே. (சச)

மெத்துகின்றவிழுமியசீர்த்தியோ
டெய்த்தலின்றியிருமையின்புந்தரும்
புததிரற்பெறும்புண்ணியவாழ்க்கைதா
னத்தவத்தினுமாற்றச்சிறந்ததே. (சரு)

என்றுநன்மகப்பேற்றையினிதெனக
கன்றுநற்றவககண்ணுவன்சொற்றிடக
கொன்றையஞ்சடைக்கூத்தனைப்போற்றியே
ரொன்றுமெய்த்துருவாசனுரைசெயவான். ()

உறவுதந்தைதாயொண்டொடிமாதரார்
சிறுவர்வண்புவிசெல்வம்பெரும்புகழ்
பிறவினும்படுமாசைபிரிந்தமெய்த்
துறவினல்லதுதுன்பமகலுமோ. (சஎ)

வேறு.

ஈட்டுறுங்காலையினைமஞ்செய்வுழிக்
கூட்டலிற்றுயரினைக்குறுகுஞ்சுற்றமும்
வாட்டிடும்பகைஞராம்வகைசெய்வித்தலின்
வேட்டிடும்வெறுக்கையைவெறுக்கையின்பமே. ()

கொடுங்கனன்மதுவிடங்குறுகினுண்டிடிற்
சுடுங்கருத்தழித்திடுந்தொலைவுசெய்யுமாற
கடுந்துயர்க்காமமோகருதினன்னசெய
திடும்பினுந்தொடர்ந்துவெந்நிரயத்திட்டிடும். ( )

ஆதலிற்பெண்மயக்காதிநீங்கியே
நீதறத்துறந்திடுமரியசெய்கையே
மேதகக்கதியினில்விடுமென்றோதினன்
மாதவத்துயர்துருவாசமாமுனி. (௫௦)

இனையனவீற்றுவீற்றியம்பிமாதவர்
வினையறுநன்னெறிதெரியும்வேலையி
னனையவர்தவமுருவாகிநண்ணல்போற்
றுனியறவாயிடைசூதன்றோன்றினன். (௫௧)

கண்டிகைவடமுராங்கவினநீற்றொளிர்
புண்டரநுதன்மிசைப்பொலியவங்கையிற்
றண்டொடுகமண்டலந்தாங்கிவந்திட
வண்டவர்சூதனல்வரவுகண்டனர். (௫௨)

பொருக்கெனவெதிர்கொடுபோற்றிக்கொண்டுசென்
றுருக்கிளராதனமுதவியையனீ
யிருக்கெனவாயிடையிருத்திமாதவ
ரருக்கியமுதலனவளித்துக்கூறுவார். (௫௩)

ஐயமெய்க்கதிபெறுஞ்சூழ்ச்சியாய்ந்தியா
மையமுற்றிருந்துழியடிசில்வேட்கையான்

மையலுற்றழுங்குவோர்மாட்டுமூரல்கொண்
டொய்யெனத்தரவருபவரினுற்றனே. (ருச)

தொல்லையம்புராணநூற்றொகுதியாவையும
வல்லநன்முனிவரின்வரவினுய்ந்தன
நல்லவர்தாம்பெறுநலத்தகல்வியுஞ
செல்வமும்யாவருஞ்சிறப்பிற்பெற்றவாம். (ருரு)

வாதராயணமுனிவரனையொத்தமெய்ப்
போதநாயகவருட்பொழியுஞ்செம்முகச்
சூதமாதவவினைத்தொடர்புபோய்ச்சிவன்
பாததாமரைபெறும்பரிசுகூறென்றார். (ருசா)

வேறு.

என்றலுமுவகைநெஞ்சத்தெழுந்திடச்சூதனீா வே, றொன்றொருபொருளுமுன்னாதுலப்புறுமுத்தி யெய்தக், கன்றினீரதனுலும்பாற்கண்ணுதலருள்ப திந்த, நின்றுமையடைந்தியானுமுய்ந்தனனென்று சொல்வான். (ருஎ)

அரியதரம்விச்சைமூவாறவைமறைநான்காற ங்கங்,கருமஞானங்கள்சொன்னூன்மிருதிகாந்தருவ மவின்னூல், பரதம்வாகடம்புராணம்பகருநன்னி யாயமென்ன, விரிதருமிவற்றுட்சீர்சால்புராணமே மேலதாகும். (ருஅ)

பன்னுமப்புராணமீரொன்பானெனும்பாகுபா ட்டான், முன்னுறுதலைமைக்கேற்பமுக்கணெம்பி

ராற்கினைந்து, சென்னிகர்ப்பவற்குநான்குதிசைமு கற்கிரண்டுசெங்கேழ், துன்னுறு† கனலியென்பேர் ச்சுடர்களுக்கொவ்வொன்றுமே. (ருகூ)

அனையவற்றதிகமெந்தையமலமாக்கதையினை ந்து, நனிசிறபபவற்றுட்காந்தமதனினுணலத்ததம் மா, தனிவருசனற்குமாரசங்கிதையதனுட்சால, வி னியதுகாளிகாண்டமென்பர்மூதறிவின்மேலோர்.

அன்னதில்வியாதனெங்கோனருளினூற்றமியே ன்கேடபத், தன்னிகரிலாதமுத்திசார்ந்திடற்கேது தன்னை, முன்னமங்குரைத்தானன்றன்மொழிந்த வாறுமக்கியானும், பன்னுவனுடம்பெடுத்தபயன் பெறுமுனிவிர்கேண்மின். (சுக)

இச்சிறைப்பவங்கணீங்கியிணையிலாமுத்தியெ ய்தன், மெய்ச்சிவஞானத்தன்றிவேறுளகருமத்தா சா, தச்சிவஞானம்பெற்றோரயனதுகற்பவீற்றிற், சசசிதானந்தமுத்திசார்குவரொன்பமாதோ. (சுஉ)

பிறைமுடிக்கின்றமுக்கட்பிரான்றிருத்தலங்க டம்மி, லறமுடிப்பவர்த்துரந்தோரறிந்துமஞ்ஞான பாவத், துறைமுடிக்கிற்போரோனுந்துரிசெலாமெளி தினீற்று, மறைமுடிக்கரியஞானமன்னிமெய்க்கதி யிற்சேர்வார். (சுங)

† கனலியென்பேர்ச்சுடர்கள்-அக்கினி, சூரியன்என்பவர்.

வலியுகமலமெய ஞானமருவிட வேண்டிஞ்சார ந்த், புலியுகளத்தாளபோற்றப்பொது நடம்புரிவோ ன்றுனங, கலியுகமதனிற்சாலக்கசிந்து றவேணடும் பரமபி, னெலியுகணை மிசப்பேரிருந்தவவனத்தீனொன் றுன். (௬௪)

சூதமாமுனிவனின்னசொற்றிட வுவகைபூத்து க, தீதிலாமுனிவமுத்திசிவனிடமளிக்குமென்றுய, வாதராயணன்மலர்த்தாண் மருவுமாணுக்கர்தம்மு, ளோதியாலுயர்ந்தோய்சொல்கதொன்றுளதென்று சொலவார. (௬௫)

தண்ணிலாமலர்ந்தவேணித்தானுவுமுமையுந நங்கள், கண்ணுலாமக்களோடுங்கயிலைபோலிருப்ப தாகி, யெண்ணிலாவமரர்வேள்விபிறையயன்முரா ரியெனறு, முண்ணிலாவுவகையோடுமுவர்த்தொ ழுதமர்வதாகி. (௬௬)

அளப்பருமனந்தகோடியமலமெய்த்தலங்கடோ றுங், கொளப்படுபயன்கண்முற்றுமெளிதினிற்கொ டுப்பதேயாய்த், தளப்பதுமத்துமேலோனந்தினு ந ந்தாதாகி, யுளப்படுபோகமுத்தியொருங்குதவுதவு ஞசோத்தாய. (௬௭)

கங்கையாதிகளின்மிக்ககாமருபுனிததீர்த்தங், த ங்குவதாகியுன்னிற் சாற்றிடில்வினைவிற்செங்கேழ்ப, பங்கயன்மாயோனெம்மான்பதந்தரவல்லதாகி, யி ங்கொருதலத்தையயவியம்புதியெங்கட்கென்றுர்.

என்றவருரைத்தலோடுமெழுந்தபேருவகைபொங்கக், குன்றவிற்கோலத்தெம்மான்*கூவரங்கருதியுள்ளங், கன்றுளுமன்னனெஞ்சிற்கரைந்துகமயிர்பொடிப்ப, மென்றுளிவிழியருமபவிதிர்விதிர்த்தினையசொல்வான். (சுசு)

அருந்தவமுனிகணீவிரறைந்தனமுழுதும்பெற்ற, பெருந்தலமுளதொன்றம்மவதனதுபெருமைதன்னைப், பரந்திடுமுகங்கள்கோடிபஃறலையரவப்புத்தே, ளிருந்துரைப்பினுமடங்காதியான்சிறிதறிநதசொல்கேன். (எ0)

நைமிசாரணியச்சருககம் முற்றிறறு.

ஆகச்செய்யுள்-அசு.

## திருத்தலச்சருக்கம்.

நாட்டுச்சிறப்பு.

பண்டுளமுத்தனைபறியமெய்க்கதி
கண்டிடவனைவருங்கனகமேரு‡கோ
தண்டமண்டிதருறுதலத்தைச்சூழ்தரு
தொண்டைநன்னாட்டணிதொகுத்துக்கூறுவாம்

* கூ-ளுவரம் என்னும் வடமொழி - கூவரம் எனத் தற்பவமாயிற்று.

‡ கோதண்டமண்டிதர்-விற்கோலநாதர்.

வேறு.

வாய்த்தகார்புனற்சாடியின்வெண்படாம்வயங்கத
தோய்த்துவான்மகள்கருமைகூர்துகில்தரவிரித்துப்
போர்த்ததாமெனமிளிர்தருதவளவண்புயல்க
ளீத்தவாரிதிபடிந்துகார்நிறமொடுபரந்த. (உ)

விண்ணுலாவியபுழைக்கைபோன்முகிலினமேவிக்
கண்ணுலாவியசூல்வளைநித்திலங்களையிற
நண்ணுலாவியவலையெறிசலதிநீர்முகந்து
மண்ணுலாவியமதகரிபோன்மெனவந்த. (ங)

வேறு.

சிநதுரத்திருத்தென்கயிலாயம்வா
ழெந்தைதனமுடிக்கீர்ம்புனலாட்டல்போ
னந்தியமபெருநாகச்சிகரிமேல்
வந்துநின்றுமழைமுகில்பெய்தவே. (ச)

கோடுகொண்டுயர்குன்றினுநின்றுநீர்
மாடுதுன்றுமணியொடிழிந்திட
லாடுமங்கதமண்ணண்முடியைவிட்
டோடுகின்றவியல்பினையொத்ததே. (ரு)

கடியமன்னர்கவர்ந்துகொண்டேகியே
விடின்விரைந்துதம்வீழ்நகர்செல்பவர்
படியதென்னப்பயோதரம்பெய்புன
னெடியமைக்கடனேடிநடந்ததே. (சு)

காரடைந்துகாராவினமுதினைச்
சீரடைந்தசிலம்பிற்பொழிதனு
மேரடைந்தபாலாறென்றொருபெரும்
பேரடைந்துபுவியிற்பெயர்ந்ததே. (எ)

மெலியர்மேவும்வியன்சிறைநீக்குபு
வலியர்வந்துமீட்டேகுதன்மானவே
யொலிகொணீத்தமொண்கோடுடைத்தொல்லையிற்
பொலியும்வாவிநன்னீர்கொடுபோகுமால். (அ)

வானமேயவலிகெழுகோளரா
வானவீர்ங்கதிரொன்னவங்காந்திடக
கானமோடிககடுந்திரையாலெடுத்
தேனமாமருப்பெற்றுமந்நீத்தமே. (கூ)

சுலவிருமபுனற்றொண்டைநன்னாட்டினி
னிலவளங்கணிரபபுவதன்றியும்
புலனிலங்குபுதுமணியாதிய
மலைவளங்களுந்தந்திடவந்ததே. (க0)

குங்குமங்கலந்தோர்புறங்கூர்ஞ்சுனை
தங்கிநின்றுறுந்தாதளைந்தோர்புறம்
பொங்குதண்புனல்போதுவதொண்மலை
மங்கைபாதிமணந்தவர்ப்போன்றதே. (கக)

வில்லிருந்திரைவின்னுண்குறுக்கிடு
வல்லியொண்கணைசெவ்விதின்வந்ததா

ளல்லிநன்முகையாக்கொடுவேலையோ
டொல்லும்வெஞ்சமர்க்குற்றிடல்போன்றதே. ()

பெண்ணைசாய்த்துப்பெருகிக்காவேரியி
னண்ணியோதிமநன்குறவைகைசேர்ந்
தெண்ணுகம்பையியையந்துமணித்திரண்
மண்ணியேகும்வளங்கெழுபாலியே. (௧௩)

வேறு.

சிலம்படிமருவிச்சந்தத்திலகமுன்னொற்றியிட்
டுப், பொலங்கொடியிடைசூழ்காஞ்சிபொருந்திமெ
ன்னகின்மேலார, மிலங்குறவளைகள்கைசேர்ந்திரத்
தினப்பணிதாங்காவுற், பலம்பயிலளகமோடும்பா
லியாமடந்தைபோந்தாள். (௧௪)

சேட்டிளவாளைதாக்கத்தெங்கிளநீர்மார்த்தாண்
டன், பூட்டுவெம்பரித்தேர்காறும்விசையினிற்போ
தத்தெண்ணீர், வேட்டவணிருந்தபாகன்விளாவி
னிற்பற்றியுண்ணு, மூட்டுமூழெங்குற்றுலுமனைவர்
க்குமூட்டிடாதோ. (௧௫)

துருக்கமுநறியசந்துஞ்சுடர்கெழுமணியுமுத்
து, மருக்கிளர்மலருந்தாங்கிமதமுமிழ்கரிமேற்கொ
ண்டு, பெருக்கமுற்றளவின்மாக்கள்பரவப்பேரியா
ற்றுவேந்து, பொருக்கெனக்கடலோர்காதமெதிர்பு
குந்தழைப்பப்போமால். (௧௬)

நண்ணியபுறத்துமாசோடாடியநரர்க்குமற்றை,
புண்ணிகழ் மனத்தழுக்கு மொருங்குடன் றீரும்வ
ண்ண, மண்ணுபுமறித்துநண்ணுவகைபுரிந்தமலநீ
ல்கும், புண்ணியதீர்த்தம்பாலியல்லதுபுவியின்யா
தோ. (கஎ)

தன்னையாதரவிற்கண்டோர்தங்கட்காதனமா
ய்நல்கப், பொன்னிதழ்க்கமலப்போதும்பொருந்தி
யாடுநர்கடாங்க, வந்நிலையளிப்பச்சங்குமடுத்துவந்
துட்கொண்டோர்கள், பன்னகமணிதற்கியப்பரித்
தொழுகுறுமந்நீத்தம். (கஅ)

பொய்கையுங்கிடங்குங்காவும்புகுந்துலாம்பா
லிநீத்தஞ், செய்களின்மள்ளரார்ப்பச்சிரமொராயி
ரம்பெற்றீசன், வைகுமொண்கயிலைநண்ணிவலம்பு
ரிமுழக்குங்கம்பன், கைகளினிமிரும்பாங்கர்க்கால்
களினிவந்துசெல்லும். (கக)

தேஞ்சிலம்பெழுந்தபாலித்தெண்புனல்பரவ
மள்ளர், தாஞ்சிலம்பியமோடார்த்துத்தலைத்தலைக்
குழுமிச்செய்க்க,ணஞ்சிலம்பகடுபூட்டிநல்லெழின்
மாதர்தங்காற், பூஞ்சிலம்பெனச்சால்கீறிப்புடைப
ரந்துழுவாரன்றே. (உ0)

அந்தகனிவருமூர்தியன்னவெம்பகட்டேர்பூட்
டி, யுந்தியக்குரப்பிமள்ளருழும்பணையெகினஞ்சங்

ணைத், தந்திடுமண்டமென்னச்சடக்கெனவெடுத்து
வான்போய், நந்தெனவிடுப்பவீழ்வநளிர்மதிதவழி
ற்றொக்கும். (உக)

சுரும்பினமிரியல்போகத்தொத்திதழ்க்கமலச்செ
ப்பு, ணிரம்புகட்கைம்மடுத்துநிறையவுண்டெழு
ந்துமள்ளர்,வரும்புனறேக்கியான்றவயலுழுதலைந்
தசேறு, பரம்படித்திழுதுசெய்துபறித்தநாறெங்கு
நட்டார். (உஉ)

களைகளைவிப்பமள்ளர்கருதித்தம்மாதர்ப்பாரா
விளையமிர்தன்னீர்நுங்கள்விழியிதழ்வதனமோடு
முளரியொண்குமுதநீலமுரணிகிற்கின்றவென்ன
வளைகலிதிடவேரோடுமற்றவைகளைதலசெய்வார்.

வேறு.

முற்றிடுநளிர்மதிமுகத்துழத்திய
ருற்றிடவயலினெம்முறையிற்கண்களான்
மற்றெமைமயிகலினோர்வருதலென்னென
வெற்றிடுமறிந்திடவெழுந்தசேல்களே. (உச)

முண்டகநறைமலர்மொய்த்தபாங்கரி
லொண்டொடிமார்திருவுருவமெண்ணில
கொண்டவைதொறுமரீஇக்குதித்துநின்றென
மண்டுறுபெரும்புனல்வயற்கணிற்பரால். (உரு)

அலைபுனற்றண்பணையகத்துச்செந்நெலோ
ரிலைபுடைவளைவுறவீர்ம்பசுங்கதிர்

நிலைபெறவெழுந்துமேனிமிர்ந்துதோன்றுவ
கொலைமதகரியினங்குசங்கள்போன்றவே. (உசு)

உண்ணியவந்துறுநாரையோடமே
னண்ணியவாளைபாய்நலத்தபண்ணையிற்
பண்ணியபயிர்பெரும்பாலிநாட்டுளோர
புண்ணியநெதிவுறவிளைந்தபொற்பினால். (உஎ)

மேனிமிர்பைஞ்சுருள்விரிதசாலிகள்
பானிறைதருங்கதிர்பழுத்தகண்ணுறீஇக
கூனிரும்பிணைக்கரங்கொண்டரிந்தரோ
வானகடுரிஞ்சுபோர்வகுப்பர்மள்ளர்கள். (உஅ)

ஏர்க்கதிர்வாள்கொடேயீர்வர்வீக்கிமெய்
வோககவங்கெடுத்துராய்வீழ்த்தியெற்றுவர்
சூர்க்கரும்பகட்டினூற்றுவைப்பித்தார்ப்பராற்
போர்க்களம்புகுந்துபோரபுரிநன்மள்ளரே. (உகூ)

வேறுறும்பலாலநீத்துலவைமேவுறி
மாறரும்பதடிகண்மாற்றிநெற்குவா
லாறினென்றனையருக்களித்துமற்றவைங்
கூறுநல்லறங்களிற்குலவச்செய்வரால். (௩0)

வேறு.

பிரிந்தமடவாரளகங்குழைக்காதுவிழியதரம்பி
றங்குழூரல், பொருந்துகளமுலைபாணியுந்திமுழந
தாள்கணைக்கால்புறந்தாள்வாவி, பரந்திசைவல்ம்

வள்ளைகயலாம்பற்றாளமணிபணிலங்கண்ணி, விரிந்தமரைசுழியலவன்வரால்கமடமிளைஞருளம்விரும்பககாட்டும். (௩௪)

வானமெழுநிறைமதியந்தண்டகநாட்டரிவையர்தம்வதனம்போலா, தூனமுடனலமராவிப்பதும மாமலர்மலர்ந்தேயொப்பவிங்ஙன், ஞானமர்வதென் னுகவென்றழுக்காறுமனத்தடையத்தடத்தவாவித, தேனவிழுமிதழ்க்கமலச்செழும்போதின்றனதழகைச்சிதைக்குமன்றே. (௩௨)

வேறு.

தண்ணம்பாசடைதுன்னுபுசார்ந்துள
கண்ணகன்புனற்காமருபைந்தடம்
வண்ணவொண்குமுதங்கண்மலர்ந்தன
விண்ணின்வந்தெழுமின்றிரள்போன்றவே. ()

வாடுகின்றமருங்குல்வருத்துபூண்
மூடுகின்றமுகிண்முலைமாதரார்
பாடுகின்றஞிமிறுபரந்தெழ
வாடுகின்றனவம்புயவாவியே. (௩௩)

வேறு.

வாவியம்புனல்குடையுமெல்லியர் மதர்மழைக்கண், காவியென்றிதழ்க்குமுதமென்றுணனங்கமலப், பூவதென்றிருட்குழலினமென்றுபல்பொறிவண், டாவல்கொண்டுவீழ்ந்தணுகுபொருக்கெனவாழ்வார்.

கோட்டிரும்புனற்றடத்தினின்மூழ்கியேகுட
ங்கை,காட்டிநின்றிரிந்தோடியவோதிமங்காணு, வே
ட்டிலங்கியகமலமென்றதனிடையிவரப், பேட்டின
ஙகணெஞ்சழுங்குறவனிதையர்பிடிப்பார். (௩௬)

குடைந்துவாவிநீர்படியுமோர்குளிர்மதிமுகத்
தி; யடைந்துதாமரைமுகத்தியையலைக்குமொண்ம
யிலா, மடந்தையோரரவலகுலைப்பிடிக்கும்வாரண
ம்போ, னடந்தகோதையைமடங்கலாமருங்குலா
ணவியும். (௩௭)

நகரச்சிறப்பு.

இன்னவாகியவளங்கெழுதொண்டைநாடேமந்
தன்னிலாமொளிர்மதாணியாமற்றுளதலங்கண்
மன்னனாங்கரிற்சூழ்தரவழுத்தியமணியாக்
கொன்னுலாநடுநாயகமாயதுகூவம். (௩௮)

வம்புமாமதயானைகளிரண்டொருவயிரக்
கம்பமேவுறக்கட்டுமையறங்களைக்காட்டுஞ்
செம்பொன்மாமதிற்காஞ்சிதென்றிக்கினிற்றிகழ
விம்பர்மேயதுதனக்கிணையிலாதவக்கூவம். (௩௯)

தேங்குசோதிமாநவமணிபொன்கொடுசெய்த
வோங்குகோபுரமாடமாளிகையொளிர்வோம்
பாங்குசூழ்மதின்மண்டபந்தெற்றிகள்பலவு
மீங்குவாழ்தருமிந்திரனகரொளிலங்[illegible] (௪௰)

சோதிபெற்றவொன்பானெனுமணிகளுந்துவன்றி
மேதகப்பெருஞ்செய்குன்றுபம்பலவிளங்கல்
பாதலத்தராவிறைசிரமபரித்தபன்மகுடம்
பூதலத்துமேற்புறப்படத்தோன்றுவபோலும். ()

திங்கள்வாணுதலரிவையர்நடுநிலைசெறியத்
துங்கமாகியமரகதச்சிகரிகடோன்றல்
பங்கயாதனப்பொறிபலமார்பகம்பயில
மங்குல்வான்முகடளவுநீண்முராரிகண்மானும். ()

தெண்ணிலாவொளிர்மேனிலச்சேக்கையின்மாதர்
நண்ணிநாயகர்தங்கலைநெகிழ்த்திடநாணி
மண்ணிவாள்விடுபதுமராகப்பணிமறைத்து
வெண்ணிலாவிருள்பட்டிடநீலணிவிரிப்பார் (ச௩)

தருக்குமங்கலக்கடைத்தலைதொறுமணிதழைப்ப
நிரைக்குமொண்கழையரம்பைபூகதமிவைநிகழ்த
லரக்குமெல்லிதழ்மாதர்தோடொடைகளத்தழகை
யிரக்கும்வண்ணம்வந்தேகடைகாக்குமாறெய்கும்

ஓதிமஞ்சினகரத்தயனிறுவியேயுட்போ
யாதியங்கழல்பணிந்துமீண்டிடுமுனங்கடைந்த
மாதர்நன்னடைவிழைந்துபின்சென்றிடவந்து
போதனங்கதுகண்டிலன்றேடியேபோகும். (சரு)

முன்னனங்கண்மாட்டெய்துபூண்முலையினுட்கண்
மன்னுமைந்தர்தங்காதல்கூர்மகளிரைநோக்கி [ட

யென்னைநம்மெதிர்தமியளாய்நேர்ந்தவளார்கொ
லென்னவங்கவரூடுவர்விழைந்தனரொன்று. (சகூ)

மருவுமாடவரொழின்மிகுவடிவினைநோக்கிப்
பொருவின்மாரவேடனதுளம்பொருமலேவெளகி
யுருவமாயிவர்கண்முனமுற்றிடாதியாமுன்
னருவமாயதுநன்றெனததேறியேயகல்வான் (சஎ)

உளளமாதரங்கூரவின்சொற்புகன்றுதவும்
வள்ளலாகியகூவமாககுறைமாந்தர்த் [ப்
தெள்ளுநீர்மைகண்டைந்தருத்தேனுவொண்சிந்து
பள்ளமார்தருகருமுகிலினம்பயப்படுமால். (சஅ)

மோகசாகரங்கடந்துநூற்கரைகண்டமுனிவர்
யாகசாலையினறும்புகைப்படலைகளெழுந்து [ன்
பாகசாதனன்பதம்பெறுபசும்பொன்மாளிகைப்பா
மேகசாலங்கண்மேருவைச்சூழ்ந்தெனமேவும். ()

தலவிசேடம்.

இனையதாகியகூவமாந்தனிநகரிடத்து, முனிவ
ர்வானவாசூழ்தரமுப்புரமுடிப்பான், புனிதனேகு
ழிக்கரிமுகன்புகுந்து * கூவரத்தைத், தனியுலாங்
கரத்தொடித்தனன்செலவினைத்தடுத்தான். (ருo)

---

* கூவரம் - ஏர்க்கால்; ஏர்க்காலோடு ஆரையும் அச்சை
யும் ஒருங்குசேர்த்து ஒடித்தனராகலின் ஆரையொடித்தனா
அச்சையொடித்தனர் எனவும் வரும்.

ஆனகாலையினமரார்தந்துயர்கெடவாண்டு
ஞானநாயகன்றிரிபுரம்பொடிபடநகைத்து
வானநாடவர்வாழ்வுபெற்றுய்ந்திடவழங்கிக்
கூனன்மேருவிற்பிடித்தமர்கோலமாய்நின்றான். ( )

நின்றவாதிகூவரந்தனையொடித்திடுநிலையா
லன்றுகூவரக்கினனொடும்பிள்ளையோடமரிற்
சென்றதாலுடன் * வயிரவாகாரையாந்தேவி [ன்.
யொன்றமேருகோதண்டமண்டிதனெனவுறைந்தா

வேறு.

† காங்கெயன்வடுகன்றக்கற்காதி ‡ கூர்மாண்டன்காரி, யோங்குறுகாலச்செந்தீயுருதிரனுடகேசன், பூங்கமலத்தன்மாயோன்புரந்தரன்முனிவர்விண்ணோர், தாங்களுமிறைவற்போற்றித்தங்கினர்கூவமூதூர். (௫௩)

என்றுமிக்கூவமேயவெந்தைதன்கலைகடம்மி
லொன்றினையாயிரங்கூறிட்டவற்றொன்றதாக
மன்றலங்கயிலைமன்னுமாங்கமர்மற்றுளோருந்
துன்றியதபதுதானந்துன்னுவதற்றேயாகும் (௫௪)

அந்நகரத்தின்வந்தவமரார்கணிறைந்துகால்க, ளிந்நிலவரைப்பிற் சேர்த்தியிலங்குபேர் வேறுகொ

* வயிரவாகாரை - பயங்கரமானவுருவத்தையுடையவள்.
† காங்கேயன் எனபது-காங்கெயன் எனக்குறுகின்றது.
‡ கூஷ்மாண்டன் எனபது-கூர்மாண்டன் என்றாயிற்று.

ண்டு, முன்னுமுமுகங்களுன்குமுறையினந்தணர்க
ண்மன்னர், தொன்னிநிவணிகர்தூயசூத்திரரெ ன
னவாழ்வார். (ருரு)

அறந்தலைநிற்றலாற்பேரறிவினுறகொடையால
னபான், மறந்தருகொலைகளாதிமாற்றலால்வாயமை
ச்சொல்லா, னிறைந்தவிக்கலியுகத்துநிலைத்தசீரகூ
வமூதூர்ச், சிறந்தவேளாளராஞேர்தேவரொன்றறி
யலாமால. (ருசு)

தளங்கமழ்கமலவாசச்சதுர்முகன்கற்பவீழ்திற,
முளங்கிடவுலகமெல்லாந் தொலைக்குமப்பிரளயத்து
ம், வளநகெழுவிற்கோலத்தெம் வள்ளலூர்க்கிறுதி
யின்ருல், விளங்கியகூவநீரைவெள்ளங்கொண்டக
லுமோதான். (ருஎ)

கயிலைகேதாரங்காசிகச்சிதென்மதுரைசோண,
சயிலமாரூர்காளத்திதடம்பணைத்தில்லையாதி, யிய
லுறுதானந்தோறுமிருந்திறைபகர்வதெலலாம், ப
யிலுமாதவர்வாழ்கூவப் பதிப்பெரும்புகழேயம்மா.

தக்கநற்காசியாதிதலங்களினிழைத்ததீமை, முக்
கணெம்பெருமானேயமுழுதுறுங்கூவத்தெல்லே, பு
க்கவக்கணமேதிரும்போற்றுமந்நகரிற்செய்த, மிக்க
வெம்பவமவற்ருல்விலக்கிடப்படாதாலென்றும். ()

கடைவலம்வரவீருந்தனற்கூகாதனம்வணக்கங்,
கிடைமொழிதுதித்தல்கேட்டல் கேள்வியுன்னுதறி

யான, மடைதுயிலசமாதிசெய்கையரன்ஞெழிறோ
ககல்கொன்றைச், சடையனைநாடலாகுந்தனைநிகா
கூவத்தன்றே. (௬௦)

சிருறுமினையில்கூவச்செழுநகரிடத்துமேவி
யோரணுவளவியம்றுமோரறமேன்மேலோங்கி
மேருவின்வளருமன்னமேருவிற்செய்ததீமை
நேரணுவதனினெய்தாய்நீறுபட்டழியுமாதோ. ()

வேறு.

மைந்தரையன்னையைமாதரையாவைத்
தந்தையையந்தணர்தம்மைவதைத்த
வந்தமிலபாதகராயினுமெல்லை
வந்திடினந்நகர்வண்கதிநல்கும். (௬௨)

பன்றியயங்கள்பதாயுதநாய்மா
வன்றில்கரங்கொடியங்கதமாதி
கொன்மைமிலைந்தவர்கூவபுரத்தே
யொன்றினயாவையுமொண்கதிநண்ணும். (௬௩)

அருத்திமிகுந்திடவப்பதியின்பே
ருரைத்தவர்நெஞ்சுறவுன்னினரங்ஙன்
கருத்தனின்வந்துகலந்துபிறந்தார்
மரித்தவர்மெய்க்கதிமன்னுவரன்றே. (௬௪)

அந்நகரத்தினயற்பதியாயோர்
கன்னலிருப்பினயன்சதகற்ப

மன்னுவர்மெய்ச்சிவலோகவளத்தே
யென்னினதற்கிணையாதுரைசெயவாம். (௬௫)

ஆயிரகோடியயன்றிருமாருன்
மேயினர்பூசைவிளைத்தனர்கூவத்
தூயனையேவழிபாடுதொடங்கி
யேயினவிந்திரருக்களவின்றே. (௬௬)

வேறு.

அண்டர்சித்தரியக்ககின்னரராம்பலத்துறை
நாகர்வின்,மண்டிதற்கிடனாகிவைகியகூவமாநகரா
ழ்தர, வெண்டிசைக்கணுமவந்தமைத்தவர் பூசை
செய்தவிலிங்கமோ,கண்டவாககுயாபுததிமுத்தியளி
த்திருப்பகணிப்பில. (௬௭)

பன்னரும்புகழ்மேயகூவபுரத்தினிற்குடபாலி
னிற், கின்னரமபுனைகொங்கைமேனகைகெண்டை
யங்கணுருப்பசி, * முன்னரம்பையரிளமைநல்லெ
ழின்முற்றுறுதரம்பேசனு, மென்னவொண்சிவலிங
கமொன்றையியற்றியேவழிபட்டனர். (௬௮)

---

* அரம்பையரால் பூசிக்கப்பட்ட இத்தலம், ரம்பா என்
னும வடமொழி லம்பா என்றாகித தமிழ்விதிப்படி மொழிமு
தறகண் இகரம் பெற்று ஆகாரவீறு ஐகாரவீறாகி நிற்க அந்
நோடு கோட்டூர் என்னும் ஊர்ப்பெயர்புணருங்கால் அம்முச்
சாரியை தோனறப்பெற்று,இலம்பையங்கோட்டூர் எனவழ
ங்குகினறது: இது தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்று.

அந்தமையச்சிவலிங்கம்வேண்டுநர்வேண்டியா
நகுவழங்கியே, சுந்தரத் [illegible]
[illegible]தொடங்கிய, பந்தமற்றிட * முனிவர்பூ
சைசெய்யின்றகண்ணுவலிங்கமுற், றிநதிரத்திருவந்து
கண்டவர்பெறநிடும்படியீயுமே. (௬௯)

வேறு.

செம்பொனிதழ்க்கொன்றைபுனைவிற்கோலத்தெ
ம்பெருமான்றிருமுன்னாக, வம்பவளச்சடைக்கங
கைத்துளிற்புனிததீர்த்தமொனறுண் டதையகேண்
மி, னும்பருமங்கதினமூழ்கிமனககளங்கமொழிதது
டுவருயர்ந்தவிற்கோ, னம்புபடிற்பிழைசுருமோவி
லையனைத்துமககணமேயகன்றுபோமால். (௭0)

அத்தகையதீர்த்தமிவணவதரித்தவகையவுண
ர்புரங்கண்மாயச, சுத்தனடற்புரவிநெடுங்கொடிம
ணித்தேர்மிசையமராசூழ்ந்துபோற்ற, விததலநின்
றிடுங்காலையிரதகூவரத்தையிப முகத்தெம்பெம்மா
ன், கைத்தலங்கொண்டிறுத்தவிடத்தெழுந்தது நம
பவமாசுகழுவுநீராய. (௭௧)

ஆதலினதற்கரியதிருநாமமச்சிறுகேணியதா
மென்றே; யோதுவரங்கதன்பெருமையுமையொரு
பாலுடையபிரானுரைப்பதல்லாம், போதமிலென்
புந்தியி[illegible]லவெளிதோவதனைப்புகழ்ந்துபோற்

* முனிவர் - கண்ணுவமுனிவா.

றும், றீதசனுமெனும்பொருட்டாற்றமியேனுமறிந்
தபடிசெப்புவேனால். (எஉ)

வந்ததனிலிருநான்குபகன்மூழ்கின்வானமு
றையாலெவ்வோர்வைகற், கந்தமூலம்பலம்போம
புண்ணியம்வளருமகபதிதனரியதான, மூந்துபிரசா
பதிதானமயனுறுதானமுகுந்தன்றான, மெந்தை
புமையொருபாகனிருந்தான மூத்தியிலவையெய்தும
ன்றே. (எங)

செங்கதிர்வெண்கதிர்நாளட்டமியயனமுவா
வாதுதினக்கணண்ணி, யங்கதனிலாடுநர்களரும்பத
லவரரசாட்சியாக்கமெய்தித், தங்கியிருங்கதியடை
வரதிறமேயநதுபோம்பறவைசார்ந்தவாவிப், பொ
ஙகுபுனற்படிநர்களும்வினைதீர்ந்து மெய்க்கதியிற்பு
குவரன்றே. (எச)

தீர்த்தமுலகுளவெவ்வையுமப்புனிததீர்த்தத்து
ககொவ்வாதெனவா, மூர்த்திகளும்விற்கோலமூர்த்
திதனக்கிணையல்லமுந்நீர்சூழ்ந்த, பார்த்திகமுமருந்
தலங்களெனப்பகரப்பட்டவெலாம் புவனமூன்று
ம, பேர்த்தபெரும்புகழ்படைத்தகூவமாநகரதனை
ப்போலாவே. (எரு)

எண்ணிறந்தவுகங்கடவம்பயின்றதனால்விழிநு
தலினிமைக்குமீச, னுண்ணிறைந்தகருணையினாலில
குகுருபரனருளாலொழிவில்சீர்த்திப், பண்ணிறைந்

தகூவநகர்ப்பெருமை சிறிதறிந்துரைத்தேன் பவங்கடீரக், கண்ணிறைந்தமலபாகம்வரநீவிர துவினவசகாதல்கொண்டீர். (எசு)

என்றினையசூதமுனிபுகன்றிடலுமிருந்தவர்களுவகையெய்தி, யின்றெமதுவிழிசிறப்பதினைக்காணும்பேறுடையேமுலகினெல்லா, நன்றியையுமுடையேம்வெம்பவப்பிணிக்குமருந்தாகி நணுகுங்கூவஞ்,சென்றுதொழுமரும்பயனும்பெற்றனமென்றுரைத்திதனைச்செப்புகின்றார். (எஎ)

அருந்தவநீமுனம்புகன்றதிரிபுரத்தினியல்பெவன்கொலதிபராகி, யிருந்தவர்யாரவர்நாமமேதமரர்குழுவோடுமிறைவன்சாட, வருந்திறம்யாதைநகரத்துத்தனிக்கடவுளமலனிவர்வையத்தாழி,பொருந்துறுமாரொடித்ததென்னுக்குரைத்தியெனச்சூதமுனிபுகல்வதானன். (எஅ)

திருத்தலச்சருக்கம் முற்றிற்று.
ஆகச்செய்யுள்-கஉ௪.

## திரிபுரதகனச்சருக்கம்.

:0:

தாலமேற்புகழ்வைத்துள்ளதாரகன்சிறாரீய்வித்துமாலியேதாரகாக்கன்வயக்கமலாக்கனென்ன [ன்
வேலுலாந்தடக்கைவென்றிவீரர்கண்மூவர்பாவ
மூலகாரணமதாயமுக்குற்றம்போலுண்டானார். (க)

பேருகமனேகமெண்ணில்பெரும்புவியண்டமா
ணாட, * தாருகனுயிர்கூற்றுண்ணச சட்டகங்கடை
வாயபெய்நெய்த், தோருகவயிலிற்செவ்வேடொலை
த்தபின்மூவரும்பங,கேருகவிறையைநோக்கிக்கெட
லருந்தவமுயன்றார். (௨)

துயத்தலற்றளவில்காலந்துயரொடுநோற்றுமே
லி, யெய்த்தவர்க்கருளவன்னமுடனிருங்கரகத்தெ
ண்ணீர்,கைத்தலந்தனனிற்கொண்டுகமலபீடிகையி
னேயம், வைத்தமர்ந்துலகமாகரும்வள்ளன்முன்வ
ந்துநின்றான். (௩)

நின்றலுமதனைக்காணுநிலமுறப்பணிந்தெழுந்
து, வன்றிறலவுணர்போற்றமான்மகனுவகையெய்
தி,யென்றனைநினைந்துநோற்றதேதுளமவிரும்பிநீவி
ர், நன்றுறமொழிமினென்னவஞ்சலிநவிற்றிச்சொ
லவார். (௪)

மூவுலகத்துமொன்றமூவெயிலளிக்கவேண்டு,மூ
வருமவனுறைந்துமுடிவிலாவுகங்களாண்டு, மேவ
லர்ச்செகுக்கவேண்டும் பத்துநூறாண்டிற்கோர்கா
ன், மேவுறவெயில்கண்மூன்றுங் கூடவும்வேண்டு
மன்றே. (௫)

இன்னமுமொன்றுண்டையவெந்தமக்கிறுதிநா
ளுண், டென்னினுமொருவனேநின்றெளிதினிலா

---

* தாரகன என்பது எதுகைநோக்கித தாருகன் எனநின்றது.

டலேபோற், றம்ளெருகணையாலெம்மையொருங்கு றத்தடிவதல்லாழ், பினளெருசெயலான்வெல்லாப பெருமையும்வேண்டுமென்றார். (சா)

அனனவர்மொழியைக்கேளாவம்புயனற்றுகென்று தன்னருள்புரிந்துபோனுன்றயித்தியர்கிற்பவங்கு ளுன்னதமகற்சிநூறியோசனையாமூன்றிஞ்சி [றே. பொன்னயமவெள்ளிதன்னுற் பொற்புடனுனவன

ஓதிமனணைதன்னுனுயர்விணுக்கேற்பவாறு மேதினிதனிலயத்துமிளிர்மதிலந்தாத்துச சோதிசொள்வெள்ளியிஞ்சிதுறக்கத்தாடகதினுய மூதெயிலுறவவற்றைமூவருமுறையிற்கொண்டார்

கொண்டவரேவவாக்குக்கோபுரங்கோயிறெற்றி மண்டபமவுணவெள்ளமருவிடந்துரகசாலே [ன்று விண்டொடுசேவகம்பொன்வீதியாவணஞ்செய்கு தண்டலேவாவியாதிதந்தனன்மயனென்கின்றான்.( )

அவ்வளமனைத்துநோக்கியவுணர்களுவகைபூத் துச், செவ்விதுநங்கட்கிந்தச்செழும்புரமெனவிரு ப்ப, வெவ்வமில்கலேகடேர்ந்தவிருந்தவமயனென் றுள்ளோன்,றெவ்வடுபுயவீரர்க்கோருறுதியைத்தெ ருட்டுகின்றான். (சுo)

வேறு.

செல்வமும்பதாதியுஞ்செறுநர்தங்கனே வெல்வதும்வீரமும்புகழுமேன்மையுங்

கல்வியும்புதல்வருங்கதியும்வேண்டுந
ரொல்வருமிலிங்கபூசனையியற்றுவார். (௧௧)

அல்லலும்பழிகளும்பகையுமச்சமுஞ்
செல்லலுமட்பிணிகளுஞ்செயிருநிந்தைகள்
சொல்லலுமிடியும்வெளுசோகமோகங்கள்
புல்லலுமிலிங்கபூசனையிற்போகுமால். (௧௨)

அங்கையினடங்குநீரிலிங்கத்தாட்டியே
யெங்கணுமுடையபச்சிலையொன்றிட்டுமால
பங்கயனடிதொழும்பரனைப்பூசியா
மங்குறுபவர்கடமமடமென்சொல்லுவாம். (௧௩)

எய்திவாழ்வொடுஞ்சிலரிருப்பக்கண்டுமுன்
செய்தபூசாபலமென்னச்செப்புவார்
மெய்தவவிலிங்கபூசனைவிரும்பியே
செய்திடாதுழன்றிடுஞ்செய்கையென்சொல்வாம்.

இருள்புரிபவமகன்றின்பமெய்திட
வருள்புரியிலிங்கபூசனையையாற்றிடா
மருள்புரிமனத்தினோர்மருவுந்தீயுடல்
சுருள்புரிசுணங்கன்வாற்றோற்றம்போலுமால் (௧௫)

பரசிவலிங்கமெய்வடிவிற்பட்டிட
விரைமலரொன்றறியாமல்வீசிய
நரர்களேயிந்திரனுமங்கொண்டுபோய்ச்
சுரர்தொழவனுதினந்துறக்கமேவுவார். (௧௬)

வீழ்ந்தது வளைந்தது மிஞிறுதான்விழப்
போழ்ந்ததுபழையதுபுலர்ந்ததேமயிர்
சூழ்ந்ததுகளைந்தொருதூயபூமனம
வாழ்ந்தரனமுடியிடினமரித்துதித்திடார். (கஎ)

பொலககடிமலர்களாற்சிவனைப்பூசியா
வலக்கயிறெறிதருமறலிதன்னையுங
லக்கமிலறிவன்மார்க்கண்டன்வென்றுமுன்
விலககருமவிதியையும்விலக்கினரோ. (கஅ)

வேண்டியபொருளெலாம்வேண்டியாங்குறக்
* காண்டகுநீறுடம்புனைந்துகண்டிகை
பூண்டிலிங்கார்ச்சனைபுரிமினென்றனை
மீண்டருமயனெனுமிணையில்சூழ்ச்சியான். (க௯)

அன்னவனறைந்தசொல்லவுணத்தீயர்கேட்
டுன்னருமிலிங்கபூசனையுஞற்றிடு
நன்னலமடைந்தனர்நஞ்சுகான்றிடும்
பன்னகமணியையும்பரிக்குமாறுபோல. (உ0)

அன்னதின்பின்னரவ்வவுணர்மாதிர
மன்னரையமரரைமற்றுளோர்தமைத்
துன்னியவலியினாற்கொண்டுசூழ்ந்தொறுத்
தின்னலுற்றிடப்பிடித்தேவல்கொண்டனர். (உக)

கான்றிடுமெரிவிழிக்கடியமூவருந்
தோன்றிடுமுயிரெலாந்துயரின்மூழ்குற

---

* காண் - அழகு.

மூன்றெனுமுலகங்கண் முற்றும்வெற்றிகொண்
டான்றதம்மாணையேமிறுவியாண்டனர். (௨௨)

புரந்தரனவுணர்செய்புன்மையாற்றிடா
தரந்தையின்விரைந்தயிராணியைசொடு
வருந்திமையோரொடுமருவிமேருவிற்
கரந்தனனிருந்தனன் கணிப்பில்காலமே. (௨௩)

சிறந்திடுமிந்திரன் றிருவும்பொன்றியே
மறைந்துதன்மனையொடுவறியன்போல லை
யுறைந்தனனென்றிடிஞெருங்குமுற்றவு தி
துறந்திடுமின்பமேதுன்பமில்லதே. ந்த. (௨௪)
தனைசம
வெஙகொடிவருத்துறவெருவிக்கூகைக
டங்கள்வனகாலம்பார்த்தொளிததுத்தங்க (ரு ச)
* சிஙகுறவவுணரைச்செறக்குநாடொரிந் வன்னா
தங்குறுமமரர்களரையற்கோதுவார். (௨௫)

பொய்வகையவுணர்கள்புரியும்வெந்துய
ரொவ்வகையகலுமென்றிதயத்தெண்ணிநீ
யிவ்வகைமுயன்றிலைவறிதமர்ந்தனை
யுயவகையடியரோமுஞற்றவல்லமோ. (௨௬)

என்றிமையவர்பரிந்தியம்பவிந்திரன்
பொன்றிகழ்சரோருகப்பொகுட்டுவள்ளல்பாற்
சென்றுநந்துயரொலாந்தீர்த்தியையநீ
யென்றுநாம்வேண்டுதும்வம்மினென்றனன். (௨௭)

---

* சிங்கல் - அழிதல்.

வேறு.

அம்மொழி துன்பங்கூரிமையோர்கேட்டார்வத்தா
லெம்மிடர்போயிற்றின்றுடனென்னவெழுந்தெய்த
மும்மதிலோர்கட்கஞ்சியொளித்தேமுகிலூருஞ்
செம்மனறுங்கமலத்திறைதன்னுழிசென்றுற்றான்.

உற்றவனும்பருடன்சரணத்திலுறத்தாழூஉ
நற்றுதியே[...]மெழுந்தவணிற்பநறுங்கஞ்சப்
பொற்றவி[...]ணறெரிந்துமுகங்கள் புலர்ந்துள்ளா
சொற்றி[...]நஞ்சிலடுத்தகலாதுறுதுன்பென்றான் ()

வேறு.

[...]லுமகவான்சொல்வானிறைவநின்னருளி
பூண்டிலி[...], யன்றுறுமவுணரொம்மையலைப்பனைந்து
[...]ண்ட[...], மின்னிகழ்முகில்கண்டஞ்சும்வியன்சி
றைககுயிலிற்பொன்னங், குன்றிடையின்றுகாறுங்
குறுகினேங்கரந்துமன்னே. (௩௰)

[...]ன்னியவசுரர்தம்மைத்தொலைத்தினியெமை
ப்புரப்பான், பன்னுதுமெனவந்துற்றேம்பாரதியு
டையநீயே, யின்னலங்கடல்கடத்தினன்றியாரியற்
றவல்லார், நின்னருள்புரிதியென்னச்சதுர்முகனிக
ழ்த்துகின்றான். (௩௧)

புரத்திறென்றவுணர்மிக்கபொருவலியெம்மா
னீக்கும், தரத்ததன்றனைட்கண்மூடியதடத்தலர்ந்தில
ஙகுகின்ற, விரைத்ததண்குவளையன்னவிழியுடற்க

டவுணுந்தங, கருத்துவெந்துயரமெல்லாங்களைகுவ
ன்கமலக்கண்ணன். (௩௨)

என்றயனிந்திராதியிமையவர்க்கொண்டுமால்
பாற், சென்றடிவணங்கியன்னோர்திருவிழந்தவுணர
தமமால, வன்றுயருழக்குமாறுமனமுளைந்தியம்பிந
தீய, புன்றொழிலசுரர்ச்சாடிப்புரந்தருள்புனிதவெ
ன்றான். (௩௩)

நாரணனதனைக்கேளாநவிலும்பற்மலர்கடம்மை
ப், போரினி*லுபசத்துக்கள்பொருதழித்திடுவொரன
ன,. வாரணைமுனைத்தறன்றலைனயனைவிடுத்துமூட
று, வீரருமடியச்செயதுமவினையவென்றிதனைச்செ
யவான். (௩௪)

மனத்தினிலுபசத்துக்கள்வருகவென்றுன்னமா
யோ,னினைத்தனனென்னவன்னோர் நேர்ந்தனர்நிற
பநீவிர், சினத்தெயிலவுணர்தம்மைச்செற்றுவானவ
ர்களின்ன,லனைத்தையுமகற்றுமென்றான்படியளந்த
ளிக்குமண்ணல். (௩௫)

அன்னவரதனைக்கேளாச்செல்லுதுமவுணர்ச்சா
ட, வென்னலுமகிழ்ந்துதன்பாலிருங்கணந்தனிலெ
ண்ணில்லார், துன்னியவணிகமாகத்தூண்டினன்செ
ன்மியென்னப், பன்னகசயனன்பொற்றாள்பணிந்த
னர்போயினாரால். (௩௬)

---

* உபசத்து - ஒருவகை மந்திரங்கள்; இங்கே அவை அந்த
மந்திரங்களின் அதிஷ்டானதேவதைகளை உணர்த்துகின்றன.

தண்டுவேல்வயிரவொள்வாள்சரமமொழிசாப மாழி, பிண்டிபாலங்கள்சூலம்பேரொழுக்கணிசசியா தி,கொண்டபாணிகளோடண்டங்குலுங்கவார்த்தெ ழுந்துவேக, சண்டமாருதம்போனேர்ந்துசமாக தொழில்புரியச்சென்றார். (௩௭)

பேரொயின்மீதினேமிப்பிரான்விடுதானைநீத்தம, வாரிதிதனைநாடிவருநதிபோலச்செல்ல, வேருறு கடலெதிர்த்தாலென்னவாண்டமருஞ்செங்கட், கா ருடலவுணர்கேட்டுக்கதுமெனச்சமரினேர்ந்தார்.()

வில்லுமிழ்சரமுந்தண்டும்வேல்களுமழுவும்வா ளுங்,கலனுறமெழுவுந்தாளுங்கரங்களுந்தலையுஞ்சி ந்தச், செல்லுமிழ்முகிலினின்றுசிந்தினரவுணரன் னர், மல்லலம்படைகளார்ததுமற்றவர்தாமுந்தூர்த் தார். (௩௯)

இத்தகையுடன்றுவெம்போரிருதிறத்தவருமாற்ற மத்தவெங்களிறுபோலுமறவருக்குலகமூண்ட வித்தகனவிடுத்தசேனைவென்னிடவதனைக்காணு வத்தலைநின்றவானோரலக்கணுற்றோடிவந்தார்(௪௦)

வந்தவருயங்கிமாயோன்மலரடித்தலத்துவீழ்ந் து, சுந்தரவரவிற்றுஞ்சுந்தோன்றனீவிடுப்பப்போ னர்,வெந்திறலவுணரோடும்போர்த்தொழில்வினைத் துவன்மை, சிந்தினரிரியல்போனர்செயுஞ்செயலி னியாதென்றார். (௪௧)

மாயவன்வினவியுள்ளமாழ்கிவெய்யதுயிாத்துவடைா
சட்.,டையவர்சிவலிங்கத்தையருச்சனைசெயலாலயாவ,
ராயினுமவெல்லற்கொண்ணுவெனநினைந்தழுங்கிநி
ற்குஞ, சேயுயாவிசுமபிருக்குந் தேவரைநோக்கச
சொல்வான. (சஉ)

*வேறு.

பனகைத்திறைலடுஞ்சினவிலங்கிஞறபசாசாற்
றானவககிரகங்களாற்பிணிகளினெறுடர்பான
மனனிறகொடியோராகளாறகரவரானமருவ
மின்னன்மெய்ச்சிவலிங்கபூசனையினோர்க்கியைா ()

பாவகோடிகளபயின்றிடுபதக்ரோயெனினுந்
தேவதேவனைச்சிவலிங்கத்தருசசனைசெய்வோர்
தாவினமாதவப்புண்ணியரோயவர்தமபான்
மேவுவானலனந்தகன்றனதுளமவெருவி. (சச)

ஆதலாலெயின்மூன்றுடையவுணர்தாமரனைப்
பூதிசாதனமபுனைந்துபூசனைசெயுமளவும்
யாதுமோர்செயலானமுடிவெய்திலரியாமோா
போதசூழ்ச்சியினவரருச்சனைவிடப்புரிதும. (சரு)

நீங்குறும்மனத்துயர்சுரர்காளெனநிகழ்த்தி
யோங்குமாமரகதக்கிரியொன்றிருசுடரும்
பாங்குவைத்தெனக்குருமணியாழிவெண்பணிலந்
தாங்குமாயவனாதற்கினையனசாற்றும். (சசு)

வேறு.

அறபுடைமகிணர்தம்மாவியாகிய
கூறபுடைமங்கையாகருதிற்பல்வகைப்
பொற்புடையுலகெலாம்பொன்றுமாறுமார்
வெற்புடைமுனிவரின்வலியரன்னரோ. (௪௭)

கணவரைத்தொழப்படுங்கடவுளெனறுமம
பணவரவல்குலார்பணித்ததொன்மையான
மணமலர்த்தவிசயன்மகிழ்ந்திழைத்தலோ
விணையிலெங்கருத்தறுமிறையுஞ்செய்யுமால (௪௮)

புனிதமெய்க்கற்பறுப்பொருவினமாதரா
மனமகிழ்வுற்றிடின்வராதநன்கிலை
சினமுறப்பெற்றிடிற்றீங்குமன்னதே
யனையவர்தன்மையாரறியக்கூறுவார். (௪௯)

மடியினர்குணமிலர்விருத்தர்நோயினா
வடிவிலருறுப்பிலர்வஞ்சர்மூடர்வெகு
கொடியவராயினுங்கொழுநர்தம்மிடை
மடிவிலரன்புகற்புடையமாதரோ. (௫0)

இத்திறக்கற்பினரொயில்கண்மூன்றுடைக்
குத்திரக்கொடியவர்க்குறுகுமாதரா
ரத்திறத்தினுமடற்கரியதன்னகற்
பெத்திறத்தினுமொழித்தெய்தென்றேவினான் (௫௧)

நாரணனிலைசெகலநாரதப்பெய
ராரணமுனிவரனரும்புணர்ப்பினால்

வாரணமனையவர்மாதர்கற்பெலாங்
காரணவகற்றுவன்கடிதென்றேகினன். (௲உ)

வேறு.

முனிசென்றதற்பினிமையோர்துவன்றுமவை
யுற்றமாயமுதல்வன், றனியங்கெழுந்துபுரவாண
ர்தங்கள்சிவலிங்கபூசைதவிரும், வினையொன்றிழை
ப்பலெனவேதினைந்துமறைகடகுவேறுதருநூன், ம
றமொன்றும்வண்ணமுறைசெய்துபுத்த வடிவோடு
கொண்டுவருவான. (௲௩)

மறமொன்றுகின்றவரணங்கடமடின்வரு * மம்பு
யக்கணிறைவன், திறமொன்றுபுத்தனருகன்றயங்கு
சினனெனனவங்கணடையா, வறமென்றுவஞ்சமதி
நூன்மருட்டியறைகின்றகாலையவுணர், நிறமொன்று
பூதிமணியோடிலிங்கநிலைவிட்டகன்றனரரோ. ()

விதியென்றுமாயன்வினயத்துரைத்தவெறும
வஞ்சநூலின்விதியைக், கதியென்றுகொண்டுமன
மாலடைந்துகதியற்றதீயகயவர், நிதியென்றுகொண
டதிருநீறிழந்தநிலைபாழுடம்புநிலவு, மதிசென்றுசெ
ன்றுமறைகாலிருண்டுவளமற்றகங்குல்புரையும். ()

புரமொன்றுதீயர்மடமாதராருமுனம்வந்துபுக
கமுனிவன், விரகங்கலந்துமிகுதிட்பநெஞ்சினிகழு

---

* விட்டுணு, புத்தன் அருகன ஜினன் என்னமூவருக்கொ
ண்டு முப்புரக்கட்கும் சென்றனர் என்பது கருத்து.

ம்படிக்குவினையந், தருகின்றசொல்லிமையல்செய்யவு
ம்பர்தமபுண்ணியத்தின்வலியின்,றிரமொன்றாகப்பு
நிலைபோயகன்றதெறுகாமமுற்றுமெலிய. (௫௬)

வேறு.

இனிமாய்குவாதானவரின்றொடெனு
முனிமாதவனூர்வமுகிழ்ககவரா
நனிமாளையினுயிடைநண்ணியவா
றுனிமாகருவப்பவுரைத்தனரால. (௫௭)

அககாலையினாரணனஞ்சரண
முக்கால்வலம்வநதுமுடிககணியா
நககாடுவர்பாடுவர்நமபகைகு
ருக்காளெனவுண்மகிழும்பொலாம். (௫௮)

அம்மாகருவப்பரிகண்டருளி
னும்மாகுலமுற்றையுநூறிடவெம்
பெம்மானொடுபேசுதும்வம்மினென
வெம்மான்மலையெய்துவன்யாவரொடும. (௫௯)

அந்நாரணன்வானவராகுலமென்
றன்னுயகனொண்சரணந்தொழுது
சொன்னலஃதினறுதொலைப்பனென
வுன்னுவரும்வெற்பணியோதியிடின். (௬௰)

வேறு.

பண்டுதற்கம்பரித்தபரமனை
மண்டுதன்றலைவைப்பத்தவத்தினால்

விண்டலந்தொடவெண்மதிபேருருக
கொண்டெழுந்தெனநின்றதகுன்றமே (கூக)

வருணமிக்கபால்வாரிதிசிற்கன
புரணனுக்குமோர்பொற்றவிசாவுனித
திரணமொத்ததிருவனலாமையாற்
பரிணமித்தெழும்பண்பனதவ்வரை. (கூஉ)

இத்திறத்தினிலங்குகயிலையாம்
வித்தகததனிவெற்புழியிந்திரை
யத்தனும்பர்குழுவொடுமஞ்சலிக்
கைத்தலந்தலைகாட்டினனேகினான். (கூங)

எண்ணிகந்தவிருங்கணமேத்துற
வண்ணனந்திருநந்தியமர்ந்தருள்
வண்ணவொண்கடைவந்தவனைத்தொழாக்
கண்ணனின்றிதுகட்டுரைக்கின்றனன். (கூச)

சென்றுதெய்வசிகாமணிக்கிங்ஙன்யா
மொன்றுமவண்ணமுரைத்தருளாயநீ
யென்றுகண்ணனியம்பவருளியே
நன்றுநின்மெனப்போயினனந்தியே. (கூரு)

அளவிலொண்புவனுதிபர்பல்கண
மளவினன்முனிவோர்நிறைவாமவை
யளவில்சோதியவிர்மணிப்பீடம்வா
ழளவில்பேரருளாளிமுன்னெய்தினன். (கூகூ)

எந்தைதாண்முன்னிறைஞசிமலரய
னிந்திராதியிமையவர்சுற்றமால்
வந்துளானமணிவாயதலினென்றா
நந்திகூவுதியென்றனனாயகன். (௬௭)

இறையினிற்கடையெய்தியுமைப்பா
னுறவழைத்தியென்றோதினன்வம்மெனச்
சிறைவிடுத்ததெண்ணீரெனவோடினார்
நிறைமகிழ்சிநெடியவனாதியோர். (௬௮)

மின்னுலாஞ்சடைவித்தகனெற்பெறு
மன்னையோடுமமர்ந்தவவைக்களந்
தன்னினேகிமுன்சாயும்பணைமர
மென்னவேபணிந்தன்பினெழுந்தனர். (௬௯)

கூர்ந்தவன்பிற்குவித்தகையுச்சிகொண்
டோர்ந்தசொற்றளர்வுற்றனனெனக
வார்ந்தகட்புனன்மார்புநிரம்பமெய
சோர்ந்துநின்றுதுதித்திடனமேயினார். (௭௦)

வேறு.

நிறைந்தநின்றொல்லையுண்மைநிலைதிரிவின்றியா
ங்கள், பிறந்திறந்திடுதறீர்ப்பான்பேரருளுருவுகொ
ண்டிங்,குறைந்தநின்கருணைபோற்றியுயிர்க்குடலளி
த்தியக்கிச், செறிந்தமுன்வினையருத்தித்தீர்த்திடும்
பரிவுபோற்றி. (௭௧)

உலகுயிரின்பந்துய்ப்பவுனதுபேரருளைமாதென், றிலகுமவிடத்திருத்தியிருந்திடுங்கருணைபோற்றி, யிலகியவ்வின்பஞ்சில்லோர்விடுக்கவவ்வுருவகன்ற, வலகினல்லருள்கொண்டுற்றவமலவக்கருணைபோற்றி. (௭௨)

ஐம்பெரும்பூதமாதியாயதத்துவசாலங்க, டம்பெருகறிவொடுக்குந்தனியிருண்மலம்வேறாக, நம்பனின்னருளினின்றநற்றவர்தம்மின்வேறா, யிம்பரினறிந்துகூடாதிருந்தவாறிருப்போய்போற்றி. (௭௩)

அருவுநல்லுருவுமற்றையருவுருவதுவுமாகப், பரவுமொன்பதிற்றுப்பேதப்பகுதியுஞ்சத்தியைந்தின், விரிவுமன்றாயவுன்றன்மேனிலைதமதேயாகப், பொருவருமன்பர்க்காக்கும்பொருவிலிடப்பாகபோற்றி.

இனையனபகர்ந்துபோற்றலுங்கஞ்ஞயகன்முராரி, தனையருள்கொண்டுநோக்கிச்சததளக்கமலக்கோயின், வனிதையங்குவட்டுக்கொங்கைமுகடுழும்வயிரத்தோளாய், துனியுறுமமரரோடும்வந்ததென்சொன்னீயென்றான். (௭௫)

என்றலுந்திகிரிப்புத்தேளியம்புவனையவிண்ணோர், வன்றிறலெயில்கண்மூன்றும்மலராயன்றரப்பெற்றுள்ள, புன்றொழிலவுணரின்னல்புரியநொந்தனையனோடு, மின்றளவெல்லைகாணவிருந்துயர்க்கடலாழ்ந்தார். (௭௬)

கருணையங்கடனீ விண்ணோர்கலங்கஞர் விடுத்
நின்பொற், சரணபங்கயங்கட்கேவல்சந்ததமிய,
ம்வண்ண, மரணவெங்கொடியோராற்றலழித்தருவ
புரிதியென்ன, வருணகுங்குமப்புயத்துமாயவன்வழ
ங்கினின்றான். (எஎ)

படைக்கலமைந்துபெற்றோன்பகர்ந்திவைநிற்
குமெல்லை, தொடைக்கலன்பயிலும்பொற்றோட்சத
மகன்சுரர்களோடு, புடைக்கலஞ்சுழலுங்காகம்போ
ன்றனந்தமியேமுந்த, னடைக்கலங்கருணைசெயயெ
ன்றமலநாயகற்பணிந்தான். (எஅ)

வானுளோர்மனத்துமிக்கவன்றுயரகற்றவு
ணி, ஞானநாயகனகைத்துநாமெழுந்தருளிவந்து,
மானவேலவுணர்தம்மை மாய்க்குதுமதற்குநம்பா,
லானபொற்கருவியில்லென் றறைந்தனனருளின்மா
தோ. (எகூ)

கண்ணுதலுரைத்ததன்மைகடவுளர்கேட்டுவ
ப்பா, லெண்ணருமுலகமெல்லாமிமைப்பினிற்படை
த்தளித்து, நண்ணுறவொடுக்குமண்ணனவின்ற
தோராடலென்னப், பண்ணமைதங்கடச்சற்பார்த்தி
துபகரலுற்றார். (அ0)

பெருந்தகைக்கேற்றவையம்பெருமிதம்பெற
ச்செய்யென்ன, விரைந்துநற்புவிதேராழியிருசுடர்
வேதம்வாமா, னருந்திறற்கமலன்பாகன்மேருவில்ல

னந்தனுரி, * சாந்தழல்சசிமாலாகச்சமைத்தனன் றெய்வத்தச்சன். (அக)

விண்ணவரவைகண்டார்வயிக்கெழுமனத்தரா கி, யண்ணலைவணங்கிநின்றனருளிஞமிவைகொண் டாதிப், பண்ணவவமலமுக்கட்பராபரவெவமையண க்கு, நண்ணலர்தமைமுருக்கிநங்களைப்புரத்திியென் ருர். (அஉ)

சங்கரனதுகேட்டெங்கடாயுடனெழுந்துது ன்றி, யங்குறுமனைவருளுசூழ்ந்தன்பினிற்சயசயெ ன்னப், பங்கயவடிமணிப்பொற்பாதுகைமிசையிரு ததிப், பொங்கொளிவிரிக்குங்கோயிற்புறத்தெழுந் தருளிஞனல். (அ௩)

ஆண்டுறுதிகிரிப்பொற்றேரணிநலந்திருக்கண் சாத்தி,யேண்டருமலைமாதோடுமிவர்ந்துகூர்ங்கணை யுமற்றை, மாண்டருதனுவுஞ்செங்கேழ்மரைமலர் ககரங்கள்பற்றிக், காண்டருமழுகெறிப்பநின்றனன் கருணைவள்ளல். (அச)

மருவுலாங்குவளைவென்றுவண்கயன்மருட்டி நீள்கா, துருவவோடரித்தடங்கணுமைமணம்புண

---

* ஏனைப்புராணங்கள், தழல் வாயு மால் என்னும் மூவரு ம் சரமாயினர் எனக் கூறினவேனும், இத்தலத்தின் வடமொ ழிப் புராணம், வாயுவைக் கூருது சசியையேகூறுகின்றது.

ருங்கோமான், பொருவிறோள்கண்டுமிக்கபொலிவு பெற்றிருந்தமேரு, வருவினாணடைந்துசாலவன்றலைவளைந்ததம்மா. (௮௫)

தன்மனையிரதமாகத்தன்மகன்வலவனாகத், * தன்மகன்பேரனோடுதனக்குமைத்துனன்காலாகத்,தன்மலரணைநாணாகத்தானெடும்பகழியானான், றன்மனமிடங்கொண்டுற்றசங்கரன்றனக்குமாயன். (௮௬)

இளங்கதிர்விரிக்குங்கோடியிரவியோருருவங்கொண்டு, வளங்கெழுமிரதமொன்றின்வந்தெனநிற்கவையன்,களங்கமிலமரர்கண்கள்களிப்பக்கண்டுவகையெய்தி, யுளங்கவலொருவிவிண்ணின்றொண்மலர்மாரிதூர்த்தார். (௮௭)

பாடினர்பரமன்சீர்த்திபாதபங்கயங்கள்சென்னி, சூடினரொழுக்துதுள்ளித்தொடைபுடைத்தனர்துணங்கை, யாடினர்துகிலெறிந்துபற்றினராசைதோறு, மோடினருவகையென்னுமுததியிற்படிந்தவிண்ணோர். (௮௮)

மன்னுதன்னிலைபிரிந்தமயிரொனவிகழ்விலாதென், றன்னைநன்புனிதமாக்கிச்சகம்புகழ்சிறப்பளித்

* தனமகன் பிரமன் அவனமகன் காசிபன அவன்மகன சூரியன் ஆகலின்,சூரியனைத் தன்மகன்பேரன் எனவும், திருப்பாற்கடலிற் சீதேவியோடு உதித்தமையால், சந்திரனைத் தனக்கு மைத்துனன் எனவும் விதந்தார்.

கான், மின்னுசெஞ்சடையோனென்னுமிகுமுவப
பெயதியாட, லெனனநின்றிருமருங்குமிரட்டினர்க
வரிபல்லோர். (௮௯)

மாசுணம்பலவளப்பில்வண்கதிர்கவ்வியெங்க
ளீசனதுருநாகங்கட்கீந்திடநீட்டிவாங்கி [று
மோசமதிழைக்கலுற்றமுறைமையெம்மருங்குமின்
வீசினவொண்ணிலாகணமிளிருநெட்டாலவட்டம்.

திங்களாயிரமொருங்குசேர்ந்தெனவாய்கடோ
றுஞ, சங்கமாயிரம்வைத்தாத்தானசயநகெழுபா
னுகமபன்,பொஙகொலிமுழவம்பேரிபொருவில்சச்
சரிதடாரி,யெங்கணுமெண்ணிலோர்களிரட்டினரிடி
களேபோல். (௯௧)

அறிவுருவானோன்வந்தானன்பினிற்றிகழ்வோ
ன்வந்தான், பிறவிவேரறுப்போன்வந்தான்பேரரு
ண்மூர்த்திவந்தான்,குறைவிலானந்தஞானக்கூத்து
டையாளிவந்தான், கறையுலாமிடற்றோன்வந்தா
னென்றெழுங்காளங்கள். (௯௨)

நஞ்சுகுமெயிற்றுப்பேழ்வாய்நாகமதணிந்தவெ
ங்கோன்,வெஞ்சமர்புரியச்செல்வன்மேருவிற்பிடித்
தென்றிட்ட,கஞ்சுகங்கிழியவீங்கக்கல்லுறழ்குவவு
த்திண்டோ,ணெஞ்சுகுமுவகைவிம்மப்பாரிடநீத்த
ஞ்சூழ்ந்த. (௯௩)

வெள்ளிவெண்கொடுவாண்மாறிவைத்தெனவிள
நகும்பல்ல,பள்ளவெம்பிலனிகர்த்தவாயினபருப்ப
தத்தி, ருள்ளுறுமுழைகளன்னவுட்டுளைப்பெருந
துண்டதத, மெள்ளவின்சொற்புவிக்கண்விழுமிடி
போலசசொல்வ. (௬௪)

மண்டலவாடியென்னவயங்கெரிசிதறுங்கண்ண,
வொண்டமுனிமிர்ந்தெழுந்த தொத்தகுஞ்சியினவி
நத,வண்டமதிடினுமாற்றுவகட்டினகுறுகுந்தாள,
பண்டுளபூதமைந்தும்படைத்தளித்தழிக்கவல்ல ( )

அத்தனென்றன்னைநீயேயவுணாகவொல்லெனு
ஞே, விததிரடனிலெற்சின்றி யார்க்கமர்கிடைகது
மோவே, ஞெத்தவரடநான்பார்த்து வறிதுழுகுவ
ஞெவென்று, தததமினிலைந்துவாடுந்தன்மையபூத
முற்றும. (௬௬)

விண்ணகநிறைந்தவாதிவிதியகநிறைந்தமாயோ
ன், கண்ணகநிறைந்தவோதைக்கடலகநிறைந்தபா
ழி, மண்ணகநிறைந்தமேவிவரையகநிறைந்தவெங
கும்,பண்ணகநிறைந்தவோசைப்பரிசினிற்பணகண
ங்கள். (௬௭)

குதிப்பனவயிரத்திண்டோள்கொட்டுவதம்மை
த்தாமே, துதிப்பனவமர்வேட்டண்ணற்றொழுவன
தங்களாற்றன், மதிப்பனவரைகளைந்துதாங்குவவா

ரியுட்க, வதிர்ப்பனமகிழ்வவாகியடற்கணஞ்சென
றவமமா. (கூஅ)

சறபுயஙகொட்டியண்டசடாகமுமதிரவார்த்து
எழ்புறம்பூதவெள்ளமவநதிடவும்பரெண்ணில
பொறபுறுகவிகையோஙகிப்புணரிஉளேழுமாாபபப
பம்பலமதியெழுந்தபரிசெனநிகழ்ந்தமாதோ (கூகூ)

பொன்னுலகிகழுமென்னைப்பொருவனென்றகி
லமபோவ, தென்னநுண்டுகள்சென்றேறவெதிாத்
தமலைதலொப்பத்,துன்னுறுமமரர்தம்பொறசுண்
ணமவநதுடன்கலப்ப,மின்னுறுங்கொடியடித்துவி
லககுவபோலவாடும். (க00)

வேறு.

இரதவாறெழும்பூதவெள்ளங்களினிடையே
யந்திவானிறமனையவஞூழியநதடந்தோ
கந்தவாரிசப்பண்ணவன்றென்றிசைசகடவ
வந்தவானவரனைவருந்துவன்றுறவந்தான். (க0க)

பூதநாயகன்கயிலையம்பொருப்புவிட்டலகில்
காதமோரிறைப்பொழுதினிற்கடந்துவந்தருளிச்
சீதவார்பொழிற்கூவமென்றிருநகரடைந்தான
பாததாமரைவணஙகிவிண்ணவர்குழாம்பரவ. ( )

அங்கப்போதினிற்கடமெனுந்திருவருளரூத
துங்கப்போதகமுகப்பிரானிதழியந்தொடையோன்

றங்கபபோதிரதத்திறூர்தன்புழைக்கரத்தாம்
சிங்கப்போரொடித்திட்டனன றிடுக்கிடவெவருமே.

பொருக்கெனச்சினவிடையுருக்கொண்டிடை
புகுந்தா, னிரைகருநற்கொடிவையம்வென்றுநஙின
னெடுமபாம், பரைககசைத்தவனன் பினினிகரிலாத
மரா, வருககமுற்றுமவந்திறைஞ்சுபொறபதாமபுய
மாயன். (கoச)

தந்தையுற்றருளிரதகூவரத்தினைத்தனயன், வந்
திறுத்தலுமிமையவாமனம்பதைத்தின்னன, மூங்
தைபிறபதினமடங்குறீஇமுகத்தறைந்தழவும்,றெ
நதமொட்டலர்செயலெனத்திசைதொறுமிரிந்தாா.

அருளுலாந்திருமுகங்களோராறுமொள்ளலங்க
ல,புரளுமார்பமும்புயஙகளுமருமறைப்பொருளாய
த, தெருளுலாமபதமலருங்கொண்டெனதுளந்திக
ழவான், வெருளுலாமனத்திரியல்போம்விண்ணவர்
ககண்டானா? (கoரு)

மின்மினினமினீரஞ்சவிர்தீகழுமென்றந்தை,பொ
மமிளிர்ந்திடுதேரினொரொடித்தவர்புலவீ,ரொன்முன்
வந்திடுங்கரிமுகத்தண்ணலவ்வெயில்சோ,வன்மன
மபெறுமவரலவம்மினென்றழைத்தான். (கoஎ)

மீண்டுவானவர்குகன்புடையடைந்தினிவெம்போ
ராஞ்டநாடிஞ்புரிவதெவ்வாறெனவையம்

பூண்டுநின்றனர்நமமிறைபுதலவன்முனறனையாம
வேண்டிவநதிரதம்புகாமையிலிதுவிளைநததான். ( )

என்றுளங்கொடுமலைமகளின்றருள்யானைக், கடா
றைவந்தனைசெயகிலார்முயறருககருமம், பொனது
மென்பதுகாட்டிடக்கூவமாபுரததி, லன்றவன்சழ
ல்கனிமுதல்கொண்டருச்சித்தான். (க0கூ)

பின்புவிண்ணவர்மனத்துயர்பெயர்ந்திடத்தானவ
முன்புமும்மதில்வந்துறமுனனினனமுதல்வ
னன்புகொண்டொருநூறியோசனையகன்மதிலச
டின்புபெற்றிடவனைவருந்துண்ணெனவடைநத. ( )

கரிகளோடுமாருதந்தனின்விரைந்துபாயகவனப
பரிகளோடும்விண்முகடுமும்படுமணியிரதக
கிரிகளோடும்வெங்கனலினுங்கிளர்சினககழுங்கா
லரிகளோடும்வந்தமர்செயவான்சமைந்தனரவுணர்.

கண்டுமற்றதுவிண்ணவர்கலககமுற்றுயர்கோ, ரா
ண்டம்வைத்தலைச்சுடுசரமிடமவலததடககை, சொ
ண்டுநிற்பவற்குறுகிநல்வேலையீதடுதற, கெண்டயித்
தியர்ச்சமர்புரிந்தட்டருளென்றூர். (ககஉ)

என்றுவிண்ணவரியம்பியதெம்பிரான்வினவி
நன்றினங்கையைநோக்கினனகைக்கவந்நகையி
னின்றுவன்றழற்கொழுந்தொருங்கிடத்திற்பாதி
சென்றெடுங்குமுன்புரங்களிற்சென்றுபற்றியதே.

பகுவன்வாயமலர்வைத்திருந்துமிழ்ந்தெனப்பற்
றித,திகுதிகென்றெரிந்தெழுமழுங்கொழுந்துசேண
ளாபபத், தருவர்மென்புழுவெனப்பதைபதைத்து
யிர்தணந்தார்,நிகரினீறுபட்டிடாவுடனீறுபட்டன
வே (௧௧௪)

தேரெரிந்தனபுரவிகளெரிந்தனசெழுங்கைக்
காரெரிந்தனசிகரமுமெரிந்தனகழகச்
சாரெரிந்தனபொழிலினமெரிந்தனதருவ
ரூரெரிந்தனவெரிந்தனவடங்கலுமொருங்கு (௧௧௫)

திருத்தமொன்றெயின்மூன்றெனக்குருகுபுசிதைந்த
கருத்தமொன்றவளுறையுமுக்கயவருமடைந்த
வரதனினின்றனர்மரித்திடாதளிவரமலர்ந்து [ல்.
விரைத்ததண்பணையிழந்துறும்வெறியபாதவமபோ

பகைஞரொன்றுமுப்புரங்களிற்செஞ்சடைப்பகவ
னகையினின்றுசென்றுற்றதீயிடத்தெழுநறிய
புகைபரந்தகல்விசும்பிடமடங்கலும்போர்த்து [ன்
முகில்களென்றிடப்பட்டுநின்றனவின்றுமொழியி

நெறித்தகுஞ்சியந்தானவரெயில்களினிமல, னெ
றித்தவெண்ணிலாநகையினின்றெழுந்தபேரெரிசெ
ன், றுறைத்துவெள்ளிமாமதில்களைத்துருகுழிச்சித
றித், தெறித்தபோலும்விண்ணிடைச்செழுந்திங்க
ளுருமுடுவும். (௧௧௮)

பரிந்துதற்பதங்குறுகினர்பழையதீவினைபோ,
லெரிந்தவப்பரம்பொடிபட விறந்திடாதுயிர்கொ

ண, டிருந்தவப்பெருங்கொடியனையெம்பிரான்கண்
டு,பொருந்துபொற்சிலைவாங்கினன்சிலீமுகம்பூட்டி

குனித்தபொற்சிலைவலிகெழுங்குணவுருவணை
யி,னுனித்தவப்புருக்கொண்டுநிற்கின்றநோனரிக்கு
த,தனித்தபொற்றிருவாசிகைபோன்றொளிதழைத்
த,இனித்தசொற்கொடியிடத்தினன்மலர்க்கரமிசை
நது. (கஉ0)

பொருவிற்கொண்டிடுநெடுநுதிப்பகழியைப்பு
னிதன், விரைவிற்சென்றவருயிர்குடித்திடுகெனவி
டுத்தான், மருவிகுன்றெனநின்றிடுமூவர்மார்பினு
மபட்,டுருவிச்சென்றதப்புறத்தினினொருகணப்பொ
ழுதின். (கஉக)

மீண்டுசெங்கரன்வலக்கரமடைந்ததுவிசிக, மா
ண்டுபுங்கமுன்பட்டபோதவுணர்களலறிச், சேண்
டொடும்படிதுள்ளிவீழ்ந்துணர்வுகள்சிதைந்து,மா
ண்டுபோயினரிமையவர்மனத்துயர்மாள. (கஉஉ)

அம்புபட்டிடுமசுரர்கண்மார்பகப்புழையிற்,செ
ம்புனற்புறம்பெருக்கெடுத்திரைந்தலைதிரைத்துக்,க
மபமுற்றெழுந்தோடினகளேபரமலைப்பாற், சம்புப
ற்பலவாண்டிற்குண்டினையெனச்சார்ந்த. (கஉ௩)

**இருந்துதேவரும்பணிசெயத்திரிபுவனமுமாண்**
**டிருந்தமூவெயிலரக்கருமிறந்துசெய்கடன்கள்**

புரிந்துகாணவுமொருவரற்றிகலனுய்புரட்டி
யருந்தவேகிடந்தனரொளின்வாழ்வுவபபறிவோ. (

கதமபடைத்தபூதாககமர்கொடாதரன்கடிது
மதம்படைத்தவர்ச்சாடியதோதனம்வறியாக்
கிதம்படைத்திடுகுவமெனகொண்டுபோயிற்பாற
பதம்படைக்கிலம்போமெனப்பகர்ந்ததொத்ததுவே

மருளேயொத்தனமுப்புரமப்புரமருவு, மிருளே
யொத்தனரவுணரவ்விருளினேயிரிக்கு, மருளேயொ
த்தனன்முருந்தனவவருளினேயுடைய, பொருளே
யொத்தனனப்பொருளாகியபுராரி. (கஉசு)

செப்புரம்பதித்தன்னமாதுமைமுலேதிளேக்குந்
துப்புரம்பெறுபராபரன்றாநகைக்கணேயான்
முப்புரம்பொடிபட்டதுமுதல்வர்தம்முயிர்போ
யபபுரம்பொடிபட்டதுங்கண்டனரமரர். (கஉஎ)

வேறு.

ஆர்த்தனர்முகிலினமஞ்சப்பூமழை
தூர்த்தனர்மகிழ்ச்சியிற்றுணங்கையாடிமெய்
வேர்த்தனரருகுபோய்வெய்யர்மெய்களேப
பார்த்தனர்குதித்தனர்பரமற்பாடினர். (கஉஅ)

சரமொடுகுனிசிலேதாங்கிநின்றிடு
மொருவனதடிமலருச்சிசூடினர்
கரையறுமுவகையங்கடலிலாழ்ந்தனர்
பரவினர்கடவுளர்பகர்தன்மேயினர். (கஉகூ)

இந்நகரதனிடையிறைவநின்மலர்ப்
பொன்னடியருச்சனைபுரிந்துவாழ்வுற
நினனருள்புரிகெனநிகழ்த்தவாயிடை
மன்னியவிலிங்கநலவடிவமாயினன். (௧௫௦)

ஆதலுமனமகிழ்ந்தபுரந்திரன்
மாதவனயன்முனிவராகண்மஞ்சனம
போதொடுசுடர்நறும்புகைகொண்டாச்சியா
வீதுடலெடுத்தபேறெனநினைறேத்தினா. (௧௫௧)

குலவுறுமரியவிற்கோலங்கொண்டுமுன
னிலகுறநின்றதாலிலிங்கமாகியு
நலமருளுமம்விறகோலநாதனென்
றுலகினருரைசெயவமலனுற்றனன். (௧௫௨)

ஐங்கரக்கடவுளவேலரசன்மாலயன்
புங்கவர்கிறையவன்புவனநாயகா
துங்கமெய்த்தவர்முதற்றோன்றினோரெலா
மெங்களுக்குறுமிடமிஃதென்றுற்றனர். (௧௫௩)

எழிறருமுமையொடுமெங்கணுபக
ஞெழிவறவிரந்தரமுற்றதன்மையாற்
பொழிறிகழ்கூவமாபுரத்திற்கெங்கணு
மொழிதருபெயரவிமுத்தமாகுமால். (௧௫௪)

அலங்குறுமிரதகூவரத்தையாயிடை
வலங்கிளர்கிம்புரிக்கோட்டுமாமுக

னிலங்குறுபுழைக்கரத்திறுத்ததன்மையா
னலங்கிளர்கூவரநாமம்பெறறதே. (௧௱௫)

ஓவிலொண்பதிநடுக்கூவமொப்பவே
மூவுலகங்களுமுன்னிவந்தரோ
தாவிலின்பெய்துறுதன்மையாலெழிற்
கூவமென்றொருபெயர்கொண்டதநகர். (௧௱௬)

மேலைநாளிழைத்ததீவினைகட்கெங்கள்விற
கோலநாயகன்றிருக்கூவமுள்குத
லாலநாகங்களுக்கருமபுள்வேந்தினைத்
தாலமேனிணைக்குறுந்தன்மைபோலுமால். (௧௱௭)

எனறிவைபற்பலவியம்பிவண்டுழுங்
கொன்றையஞ்சடையினோன்கூவமாநகரச
சென்றடைந்தருங்கதிசேர்மினென்றனன்
வன்றிறற்புலனெறிமறித்தசூதனே. (௧௱௮)

திரிபுரதகனச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௱௦௨.

## சந்தானகிரிசுந்தானச்சருக்கம்.

சூதமுனிவரன்புகன்றமொழியினை வியுலகமய யுரக்குமேன்மை, மாதவர்நெஞ்சுவகைபெறீஇக்கூ வபுரத்தியல்கேட்பவளருமெங்கள், காதலமைவுற்ற திலைபுராணமுனியின் னுமுளங்கருணைகூர, வோது

கவென்றுரைத்தனரவ் வுரைகருமிகக்களித்தீதனையுரைப்பதானான். (௧)

அன்றுவிறற்கொடுமதில்கடழலெழப்புன்முறுவல்புரிந்தசுரர்ச்சாடித், தென்றிசைக்கூவரநகரினரசிங்கந்தொழத்தேவசிங்கம்வாழ்நாட், டுன்றுதுயர்க்கடனீந்தியார்வநெடுங்காடம்படிந்த சுரனைநோக்கிப், பொன்றிகழ்நற்கமலமலர்த்தவிசின்வீற்றிருக்குமிறைபுகலுகின்றான். (௨)

வண்டுகிளைத்தொழுகுநறைமதுப்பருகியிசைகூருமலர்மந்தாரத், தண்டெரியற்புலவிர்மிகவல்லவனிம்மாயவனித்தலத்திற்சூழ்ச்சி,கொண்டுபகைபினாகரவாட்போக்கிவதைப்பதுபோலக்கொடியர்நிறு, கண்டிடைநமெய்ச்சிவனுருவமகற்றியரன்கணையாகிகடிந்திட்டானால். (௩)

ஆதலினலமலசிவலிங்கபூசனைபுரிவோரறிவிக்ந்த, பாதகரேயெனினுமழிகிலரொன்றுமஃதிலரிப்படியின்வல்ல, மாதவர்களெனினுமழிகுவரொன்றுமறிந்தனமான்மனம்விழைந்து, நீதிகொடுபரமசிவபூசைபுரிவோர்பெருமைநிகழ்த்தற்பாற்றே. (௪)

இம்மைமறுமைப்பயனுமறையின்முடிதெருட்டுறுபேரின்பவீடு, மெய்ம்மைபெறத்தரவல்லதச்சிவபூசனையன்றிவேறுமுண்டோ, செம்மைமனத்திலிங்கபூசனைபுரியாதருங்கலியிற்செறியக்காத, நம்மன

ம்வைத்திடல்சிறகிலொருசிறுபுட்பறக்கவிழைதகை
மைபோலும. (ரு)

திரையெறியுஞசடைககஙகைத்துளிதெறிப்பந
னைந்தகுளிர்சிறுவெண்டிங்கள், கரமலரினிருந்தெழு
செங்கனற்கொழுந்திற்காயநதொழிக்குங்கடவுட
னைப், பரமனெனவுணர்கிலாதளியனுமவ்வரியுமாய
ப்பயின்றதிமை, பொருவில்புகழ்க்கூவபுரத்திலிஙக
பூசனைபுரிந்துபோக்கியுய்ந்தேம். (சு)

பூதிமணிக்கலன்புனைந்துசிவலிங்கபூசனையைப்
புரிந்திடாதோர், பாதகரிற்பாதகரெங்கட்கவர்கள்
புறமானோர்பகரிலென்று, மாதலிற்புங்கவர்நீவிர்சிவ
லிங்கபூசனையையகன்றிடாது, காதலிற்செய்திடுதிரெ
னப்புகன்றனனாரணமனைத்துங்கரைகண்டோனே.

அண்டரயனுரைத்தமொழிவினவிமனமகிழ்ந்த
வன்மெல்லடியிற்றாழ்ந்து, கொண்டறவழ்மணிமா
டக்கூவபுரத்திலிங்கவுருக்குலவச்செய்தே, மண்டு
மனத்தன்பின்வழிபட்டனராச்சிவலிங்கவடிவந்தோ
றும், புண்டரிகவதட்டிருவிற்கோலநாயகனின்றுபு
ரப்பன்மாதோ. (அ)

இத்தகையவிணையிறிருக்கூவபுரத்தெவரேனுமெ
ய்தினம்ம, சுத்தபரஞானமடைந்தரியசிவானந்தசு
கந்துய்ப்பர்விண்ணோர், மெய்த்ததவமொருகோடி

புரிந்துநரவுருவாகிவிமலனல்கு,மத்தலனிலவதரித்
துவாழ்வொளினதன்பெருமையளக்கம்பாற்றே( )

தன்னைமனத்தமைத்தவர்க்குமலமகற்றுஞ்சந்
தானகிரிசநதான,னென்னுமருட்குரவனெழிறகூவ
மாநகரினிடையிருக்கின்றோர்கட், குன்னருநற்கரு
ணையினிலுபதேசித்திடவுலகினெழிவிலின்ப, மன்
னிமனக்களிப்பொடிருந்தழிவில்பாகதியடைவினம
ருவவாரால். (௰)

என்றினையசூதமுனியிணையிலிருக்கூவபுரத்தியல
லபுகூற, மன்றனமலர்க்கரங்குவியாவருநதவரெஞ்
செவிககமுதம்வழங்கவந்தோய், கொன்றைமலாத்
தொடைபுனையுஞ்சடாமகுடத்தண்ணன்மகிழ்கூவ
மூதூ, ரொன்றுமவர்க்கருள்புரியுங்குரவன்யாரியம
புகெனவுரைப்பதானன். (௧௧)

வேறு.

முன்னமோர்காலத்தாதிமுகுந்தனுமயனுமபி
ன்றூழ்,பின்னன்மாதவருஞ்செமபொற்பிறழ்முடிச்
சுரருமீசன், றன்னதாஞ்சத்திபாதஞ்சார்தலானுட
ல்வெறுப்பும், றன்னருஞானந்தமுறுவதற்குவ
கையுற்றார். (௧௨)

. உற்றவர்கயிலைநண்ணியுமையொருபாகம்போற்
றிச், சிற்றறிவுடையேம்புன்மைச்சிறையுடற்பொ

றைதணந்து,பற்றறிவுருவமாகப்பதிபசுபாசத்துண்மை, முற்றுமெங்கட்குணர்த்திமுதல்வுநீபுரத்தியென்றார். (௧௩)

என்றவரியம்பவெங்கோனெல்லையில்கருணையெய்தி, நன்றெனக்கயிலைசூழ்ந்தநாற்பெருங்கிரிகடமு, என்றரிதனக்குச்சிர்சா லாமர்த்தகிரியினுச்சி, யொன்றிநறகுரவனாகி யுண்மையை யுணர்ததுகின்றான். (௧௪)

ஆதியுநடுவுமீறுமருவமுமுருவுமாகும்,பேதமுமளவுமின்றிப்பேரறிவுருவமாகி, வேதமுமுணர்வுமெட்டாவிமலமாய்நிறைவதாகிச், சாதலும்பிறப்புமற்றோர்தன்மையாம்பதியின்றன்மை. (௧௫)

மூலமாமலத்தாலன்றேமூயபேரறிவதாகிச், சீலமாயையினாற்றோன்றுஞ்சிற்றறிவுடையதாகி, மேலைநாள்வினையாற்றோற்றம்விளிவுடைத்தாகிவானம்போலவேயடுத்ததாகிப் புணர்வதுபசுவின்றன்மை.

ஆதியன்றாகியொன்றாயளப்பருஞ்சத்தியாகி
யோதரும்பலவாமாவியுணர்வெலாந்தடுப்பதாகிப்
பேதமிலருஞ்சிற்சத்திபிறழ்தருமுயிர்க்குநீங்கிப்
போதுமத்தன்மைத்தாகும்புகலிருளாணவந்தான்.

சுத்தமோடசுத்தமூலப்பகுதியென்றொடர்புபெற்று
தத்துவமைந்தோரோழுதகுமிருபத்துநான்கா [த்

யிதததைகயிற்பிரேரம்போக்கியமபோசுமென்ன
முதததைக்கீண்டமாகவுதவிமும்மாயைநிற்கும். ()

மனமொழிமெய்யியற்றவருவதாயறம்பாவஙக,
ளௌவிருவகைத்தாய்ச்சஞ்சி தாதிமூன்றியல்பாய
ப்புத்தி, தனிலுறுநிலையதாகித்தகையிற்றுய்த்தொ
ழிப்பதாகி, வினையெனும்பேர்பெற்றொத்துவிடுமிரு
நகன்மமனறே. (கக)

என்றமுப்பொருளின்றன்மையியம்பியிம்மலங்
களெல்லா, முன்றனக்கயலென்றோர்வித்தொழித்த
திவுருவமாகி, நின்றநிற்பாரொன்றுன்மாநிலையினையு
ணர்த்திமீது, வன்றுணையாகிநின்றமல்குதன்னரு
ளைக்காட்டி. (உ0)

சென்றுபுல்குறுவதன்றிச்சேர்ந்துநிற்பதுவும
ன்றி, ●ரன்றிரண்டென்பதன்றியுணர்வுசுட்டொ
ழிந்துநீயா, யென்றுநின்றிடுமென்றன்னையிருந்தவா
காண்டியென்று, துன்றுதன்னிலைசொல்லாதசொ
ல்லிறுலுபதேசித்தான். (உக)

இன்னவாறயற்கும்புட்பகிரியிடையிருடிகட்கு,
மன்னுவானளவுகோளகிரியிடைவானவர்க்குந், த
னனைநேர்கின்றபொற்பிற்சந்தானகிரியினண்ணி, மு
ன்னைவான்பொருள்கண்மூன்றுமொழிந்தனன்குர
வனுகி. (உஉ)

அப்பெருங்கிரியினுமத்தடுத்ததாரியற்குநாமஞ், செப்பருங்கூவத்துள்ளோர்தேவராதலினவர்கருத், தப்பில்பேரருளினுசான்சந்தானகிரிசந்தான, னிப்பெருங்குரவனங்கணென்றும்வீற்றிருப்பன்மாதோ. (உரு)

கொத்தலரிதழியெம்மான்குருவுருவாகிநேயம், வைத்துபதேசஞ்செயயும்வளங்கெழுகூவமூதூர்க், கொத்ததென்றயன்மற்றொன்றை யொப்புரைசெயலாகாதென், றத்தலத்தியல்புமுற்றுமறைந்தனன்சூதனன்றே. (உசா)

சந்தானகிரி சந்தானச்சருக்கம்
முற்றிற்று.
ஆகச்செய்யுள் - கூஉசு.

---

## அடிமுடிதேடியசருக்கம்.

————:0:————

சூதனியம்பமகிழ்ந்தறவோரரிதொல்வேத
ஞதியகம்பரமென்றுதமிற்பகையானுமொன்
றோதினைபின்பரனைப்பரமென்றவரோர்வுற்ற
வேதுவெனிங்கதியம்புகவென்னவியம்புற்றான்.(க)

மேனுண்மண்டுபிரளயம்வந்துவிரவுங்காற்
கானார்கஞ்சன்றுஞ்சுறுமவ்வுழிகண்ணுறமே
யானுவின்பத்தங்கணர்கைவைத்தங்கத்தின்
மானுமங்கைக்காவியனுய்துயின்மாறென்றார். (உ)

என்றலும்வேதனெழுந்துகளிப்போடெறிநீரிம்
சென்றுலவாநின்றனனதுபோதிறறிசழ்வாக
மொன்றுறுமேகந்தங்குதலேபோலுதிக்கண்
மென்றுயின்மேவுங்கண்ணபிரானைவிழியுற்றான். ( )

மாலான்மாலைமாலவடிததேமணிநீரின்
பாலாநீயாரென்றுவினவப்பதியாகு
மேலாநாராயணனென்றுவினைநதோதி
யேலாதாகுமகந்தைகொடங்கனெழுந்தானால். (௪)

மாயனுரைத்தெழுகின்றமைகண்டேமலர்வேத
னீயலநம்பரமயானெனவோதிமுனின்றானு
வாயிடையச்சுதன்மிக்கெழுகோபத்தவனாகிப் [னால்.
போயயன்விற்பொலிமார்பினெதிர்ந்துபுடைத்தா

மூண்டகவேதனுநெய்சொரிதீயின்முனிவுற்றே, யண்டகடாகமுடைந்ததெனும்படியங்கையான், விண்டுவின்மார்பெதிரொற்றினனித்திறம் வெம்போர்கண், மண்டிருவோர்கடமக்கும்விளைந்தனவந்தம்மா.

குற்றுவர்மார்புகுழிந்திடநின்றுகுதித்தோடி
யெற்றுவராடகவெற்பொடுமைம்மலையெய்திச்சூழ்
வுற்றதுபோலவுடன்சுழலவாருடலுக்கப்போய்ப்
பற்றுவர்கீழ்மேலாகவிழுந்துபதைப்பார்கள். (௭)

கட்டியெடுத்துவிழுத்தியிடக்கைகழுத்தூடே
யிட்டுவலத்தினழுத்தியுரத்தினிடிக்கொப்ப

முட்டிபிடித்தகரத்தொடுகுததுவர்முட்டுற்றே
வட்டணைசுற்றுவரித்திறமுற்றினர்மற்போரே. (அ)

வேறு.

மருவேவாகைகொண்முனிவோருடன்வருமவா
னவர்கண்டே, பொருவோர்களினிவர்போலறியோ
மென்றுபுகழ்ந்தார், விரைவோடுபிணுருமேமெறனும
வெடிசொல்லினராகி, யிருவோர்களுமுளைறவாளக
ளாயுருவிகொடெதிர்ந்தார். (கூ)

மின்றுமெனவெதிர்வீசியமிளிர்வாளொளியல்லா
லின்றரிவரிவனுற்றனனெனவேதமையிமையா
வர்நாகருமறியாவகையறைகின்றவொலிக்கு
முன்றுடுகறங்காமெனமுறைவட்டணைவந்தார். ()

வரையேகுவரமராபதிககரேகுவர்மலையுந், திரை
யேகுவர்பிலமேகுவர்திசையேகுவரொன்றாம், தரை
யேகுவர்விடையாளியையறியாதுசமழ்ந்தே," புரை
யேகொடுசனனந்தொறுமுழல்கின்றவர்புரைய. ()

தாணுடுவர்கரநாடுவர்தலைநாடுவர்மலருந்
தோணுடுவர்களநாடுவர்தொடைநாடுவர்சுடரும
பூணுடுறமுராணுடுவர்வயிணுடுவர்பொலியும்
வாணுடுறுவிழிநாடுவரிவ்வாறமலைந்தார். (கஉ)

வேறு.

கொந்துலாமலர்முடியண்டகோளகைக்கடப்ப,வந்
துபாதலமுழுவதுமலர்ப்பதமிகப்ப,வந்தவேலையினி

ருவர்தம்மகந்தையுமறுப்பா, னெந்தையாயிடையழ
லவடிவிலிங்கமாயெழுந்தான். (கூ)

ஆதிமாலயனன்பகத்திருளறவமைத்த, தீதின்மா
மணிவிளக்கெனத்திகழ்வதவ்விலிங்கம, வேதையா
மவரகத்திருளொருசிறுவிளக்கின், சோதிபோகவு
மோவப்பெருஞ்சோதியேயல்லான. (கச)

அங்குவந்தெழுமருட்கனற்றுறுவையயன்மாற
றங்கள்வெஞ்சமர்தணந்தனர்நோக்கியித்தாணு
விஙகுவந்ததென்னென்றனர்தாணுவெனறறியார்
கங்கரன்றனையவன்கணலன்றியார்காண்பார. (கரு)

மணடுவெஞ்சமர்தணந்தினியிருவருமலர்வு
கொண்டவஙகியினடிமுடிபார்ப்பமக்குறிமுன்
கண்டவன்பரமெனத்தமியிசையந்தனர்களிகூா
வண்டுழுங்கமலாதனக்கடவுளுமாலும். (கசு)

ஏனமாயரிமலரயனெகினமாய்ப்பிலமும்,வானு
மேகுபுமனமொழிதனிலுமேமருவா, ஞானநாயக
னடிமுடிவிழிகொடுநாடப்,போனமூதறிவுடைமை
யினினைந்துபோயினரால். (கஎ)

குன்றுபோல்வரும்மதக்கோட்டுவாரணத்தை
யனறுவாய்குடர்சொரிந்திடவேமிதித்தழுத்திக
கொனறதாண்மலவொன்றறியாதனைதக்குறுகிக
கன்றியோர்சிறுபன்றிகீழ்ப்பட்டதுகடிதின் (கஅ)

முளைத்தவெண்பிறையெனுமுடக்கோடுதேய்வுறமண, கிளைத்துவெம்பிலமனைத்தையுமிகந்துமிக்கேகேழ, விளைத்ததன்றிவானமெருடையையுங்கடந்ததிவின்பம், விளைத்தவெநநைதாள்விலங்குறப்பட்டதோவிளமபிா (கக)

வருந்திமெய்யிருநகேழலினுருவுகொண்மாயன், றிருந்திநாங்குறிகண்டிலமலரயன்சென்று, பொருந்துபொன்முடிகண்டிறிம்புகலவந்தன்னெனுநா, ணருந்துநெஞ்சொடுமொருவகைப்புவியின்மீண்டடைந்தான். (உ0)

விண்ணினைகியவியன்சிறையோதிமமவிரைந்தே யண்ணன்மாமுடிக்கநகையினறுறைபடிந்தாடக கண்ணியேகுதலெனச்செழுங்கதிரிடமுதலா [தால வெண்ணுமயாவையும்பரந்திவர்ந்திகந்துபோயின

விண்டுகாண்குவனடியினைமுடியினைவிரைந்து, கண்டுநாமினையாகுவமெனவயன்கருத்திலும், கொண்டுதேவமாவருடமோராயிரங்குலவு, மண்டமேறியுமடைந்திலனமலன்மார்பளவும். (உஉ)

சிறகுநொந்திளைத்திடுதலானப்புறஞ்சேணிற், றுறுகுகின்றதன்செய லொழிந்தெகி னுருக்கொண்டோ, னிறுகுதிண்புயத்தரிசெயலென்கொலோவென்று, மறுகுநெஞ்சொடுமீண்டுவந்தடைந்தனன்மண்ணில. (உ௩)

இட்டதங்குறிகண்டுதாம்பரமெனவிச்சைப்
பட்டனேகநாட்படாதபாடுகளெலாம்பட்டா
ரிட்டமோனநிலமெம்பிரானடிமுடியினைப்பூப்
பட்டகண்ணினர்காண்பரோவெத்தனைபடினும். ()

வந்துகூடியநங்கிருவருமனத்தெழுமகந்தை, சிந்தி
வாண்முகம்புலர்ந்துநின்றிடுதலாற்சிந்தை, தந்திடு
நங்குறிகாண்கிலாதமைத்தமிலமிந்தே, யுந்துகின்றநா
ணிருவருமொத்தவிறொழிந்தார். (உரு)

எங்கணாயகனருள்சிறிதுறுதலினினையோர், தங்க
ணாகியமயக்கொழிந்தற்புதத்தாணு, நங்கணாயகனே
யேநமக்கருணொற்றிச், செங்கணானுறமுருவமோ
வென்றுசிந்தித்தார். (உசு)

ஆனகாலையின்மணியிடத்தாடுறமொளிபோன்
ஞானநாயகனழனெடுந்தாணுவினடுவண்
மாணுமாமழுவுநிகழ்கரமுமொண்மார்புந்
தூநிலாநகைவதனமுந்தோன்றுறநின்றான். (உஎ)

நின்றகாலையின்மிடற்றணிநீலமுமுரத்திற்
றுன்றுமாலிகைத்தலைகளுங்கண்டுளநதுணுகரும்
றொன்றுநாணுடனச்சமுமொருங்கெழவயன்மால்
சென்றுநாயகன்றிருவடிசிரம்படவிழுந்தார். (உஅ)

எழுதிரஞ்சலியொன்றுமைநாயகனியம்பத் [தே
தொழுதகையொடு மெழுந் [illegible]வாதுதி-

யிழுதையேமுனைப்பரமெனவறிந்திடாதியற்றும்
பழுதுதீர்த்தருளென்றிடப்பராபரன்பகரும். (உகூ)

நுமமைநாம்படைத்திருதொழினுங்களுக்குதவ
வெம்மைநீரோனவுமதறிவொன்றியும்வேறுயக்
கொம்மைமாமுலையுமையொடுவடிவுகொண்டிருககு
மெம்மைநீமறந்துமைமதித்தமர்புரிந்திளைத்தீர். ( )

நீவிர்நம்மையேபரமெனநினைந்திடாதமர்செய்
பாவநந்திநும்பதநிலைபண்டுபோலடைய
வாவல்கொண்டுசமவடிவமாயிலிங்கநன்கமைத்துக
கூவநண்ணியர்ச்சியுமெனப்புகன்றினுங்கூறும். ( )

நீறுகண்டிகைபுனைந்துநாநிகழ்வடிவென்னக
கூறிலிங்கபூசனைபுரிகுணத்தனைநாமாத்
தேறுகிறவொழிவில்பேரின்பமெய்த்தேவர்
வேறுகண்டவர்வெந்துயர்விடாதநிராகர். (௩௨)

கலைகள்யாவையுமுணர்ந்தவராயினுங்[illegible]ருதி, யில
குநாமகிழிலிங்கபூசனைதனையியற்று, நிலையரோன
றையுமுணர்கிலாரஃதுடைநெறிய, குலகிஞைன்றை
புமுணர்கிலரோனுமுற்றுணர்ந்தோர். (௩௩)

நாரினீசரோயாயினுநல்லிலிங்கத்திற், பரிவினுன
மைபபூசனைபுரிகுவர்பகரிற், சுரரின்மேலவரஃதிலர்
சுரர்களிறசிறந்த, வரர்களாயினும்புலையரோமெய்ம்
மையிம்ம[illegible] (௩௪)

மகிழ்ந்திலிங்கபூசனைசெய்வோனெக்குலம்வரினும்
புகழ்ந்தவன்றனைநாமெனவந்தனைபுரிவோர
திகழ்ந்தநம்பதம்பெறுகுவரவன்குலஞ்சிந்தித்
திகழ்ந்தபுன்மையனீசனுய்நரகில்வீழ்ந்திகவான்

என்றுகூறியத்தாணுவின்மறைந்தனனிறைவ [து
னின்றமாலயனுவகைபூத்தண்ணல்சொன்னினைந
சென்றுகூவமாநகரிடைச்சிவலிங்கமமைத்து
மனறன்மாமலர்மஞ்சனங்கொடுவழிபட்டார. ( )

வினைகடீர்பபதுபுனிதன்மெய்ஞ்ஞானமேவிளைப்ப
தனகனேயமோடிருபபதககூவமாதலினும்
கனவிலாயினுமிந்நகர்கடகொளுதென்றங
கினியமேருவிற்கோலநாயகற்றொழுதிருநதார். ( )

மாலுநான்முகக்கடவுளும்வழிபடுமெழில்விற்
கோலநாயகனைக்கண்டிடிற்பன்னிருகோடி
மூலமாமிலிஙகங்களைமுறைமையிற்சென்று
சீலமோடுகண்டுறுபலன்கணஞ்செறியும். (௩௮)

அருவிப்பூதரமெனவருமதகரியட்ட,திருவிற்கோ
லநாயகன்பெயர்பலவுளசெப்பிற்,கருவிற்போக்குறு
பிருஞ்வினைகளையுமக்கணத்தின்,விரைவிற்போக்குவவ
வற்றினிற்சிலபெயர்விளம்பின். (௩௯)

## வேறு.

* இரக்ககர்தியாகரிசைசசந்ததாரரொழின்மிகவ
ளர்சடைக்கூத்த,ரருட்சகநாதரஞ்சனுபகண்டரரு
ங்கிலாணிக்கினரோடுங், திருக்கறுபுவனநாயகர்திரி
புரக்கினரப்பிரதிட்டர், தெரித்திடுகூவநாதரன்பர்
கருச்செங்நெல்வைத்தவரெனலாமால். (சு0)

இப்பெரும்பெயர்கள்பன்னிரண்டினையுமியம்பு
வோரிவற்றினுளொருபேர், செப்பரும்புதல்வற்கி
டுபவர்புவியிறசிதைவின்மெயப்போகங்கடுய்த்தே,

---

* இரக்ககர் - இரக்ஷிப்பவா. தியாகா - தேவர்சட்கும். முனிவர்கடகுமட தியாகமளித்தவர். சந்ததாரர்-அனபர்களைச சமுசாரபயததினீககி நன்குகாத்தவர். வளர்சடைக்கூததா-தீர்க்கசடாதாதகா. தீாக்கம் - நீட்சி. சகநாதர் - சர்வகர்த்தர். அஞ்சனுபகண்டா - விடததால் அஞ்சனம்போலும் காநதிபெற்ற கண்டததையுடையவர். கிலாணிக்கினர் - அடியவாகளுக்குக் கலிகாலககிலேசத்தை நீக்கி யருளினவர். கிலாணி-கிலேசம். புவனநாயகர் - அசுரரைமாய்த்துப் புவனங்களைக் காத்தவர். திரிபுரக்கினர் - திரிபுரத்தை யழித்தவர். அபபிரதிஷ்டர் - பிரதிஷ்டையல்லாதவர்: எனவே, சுயமபு என்றபடி. கூவநாதா - கூபரநாதர். செங்நெல்வைததவர் - நீவாரதர். நீவாரம் - செங்நெல். என்பர் வடநூலார். அன்றியும், அப்பிரதிஷ்டர் என்னும் திருநாமத்தை அப்பிரதிஷ்டா அக்ஙியதாகர்த்தர் எனப்பாடமோதி அதற்கு, தம்மை அடைந்தவர்களுக்கு அளித்த பதத்தை என்றும் அகற்றுதவர் எனப் பொருளுரைப்பர்,

யொப்பருங்குளிரவெண்டிங்கள்வண்கடுக்கை யுண
ணுழைந்தினியதாதளைந்து, மெய்ப்பசும்பொன்னி
ற்றிகழ்சடாமவுலிவிமலனதடியின்மேவுவரால். ( )

வேறு.

என்றுசூவத்திறைவன்பெரும்புகழ்
துன்றுமாசையிற்சூதமுனிவர
னன்றுமேவுநயிமிசமாவனத்
தொன்றுமாதவர்க்கோதினனென்பவே. (சஉ)

அடிமுடிதேடியசருககம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௩௬அ.

## செந்நெல்வைத்தசருக்கம்.

:0:

மறுவறுதவத்தின்முனிவரர்மிக்கமகிழ்ச்சியின
மறிந்துமச்சூத, னறுமலர்க்கமலத்திருவடிபரவிநந
களுகசையுவிறகோலச், சிறுநுதற்குமரியிடத்தின
வைத்தவற்குசெ, செங்நெல்வைத்தவனெனும்பெய
ரொம்,முறைமையினடுத்ததனைத்தியென்றியம்பமு
னிவனன்றெனவதுமொழிவான். (க)

முன்னரக்கூவபுரத்திடைக்காமமுதலியமுக்கு
றும்பெறிந்தோர் புன்னெறிப்படுமைம்புலன்களுந்
தடிந்தோர்பொய்யினைமெய்யினிற்கண்டோர்சென்
னியிற்பிறைகொண்டவன்றனக்கன்பு செறிந்தனம

யடியர்கட்டிசழ்த்து; கன்னிலைத்தருமசீலனொன
வோர்நாமவந்தணருளரானா. (உ)

உருவநல்லறமாக்கறைமிடற்றிறையன்புயிலொ
னவந்ததேயனையார், பொருவினன்னெறியின்வரு
மபெருஞ்செல்வாபுரமெரிபடுத்தவிற்கோலத்,தொ
ருவனதடிமுப்பொழுதும்வந்தனைசெய், தறுசுவை
யடிசின்மாதவர்க்குப், பரிவொடுமளித்துமிச்சில்
கொண்டெமக்குப்பயனிதுவெனவொழுகுறுநாள்.

வேறு.

கோதினந்தருமசீலர்கொடைகண்டுநாணுட
கொண்டோ,மேதகுமவர்தம்மேன்மைவிளக்கவோ
வறிந்திலேமா, லோதமுண்முகிலொடுங்கிற்றொரு
புடையதனலையாரும, பேதுறுபசிநோய்கூரப்பெரு
மிதமிழந்துகைந்தார். (ச)

வறியவக்காலம்போதமறுவறுந்தருமசீலர்;செ
றியுமெய்த்தவர்கட்கெல்லாஞ்செழுங்கறியமுதினோ
டு, நறியமென்புழுக்கலன்பானற்சுவையளித்தளித்
தந், நெறியினிற்பெறும்பேறென்றேநிற்கநின்றில
துசெல்வம். (ரு)

பழகுதஞ்செல்வமெல்லாம்பயன்றருகதவியா
கு;வழுவுதம்பெருகுகற்பினளவலாதளவிலாம,லொ
ழுகுநன்மனைவியார்தம்முரியபொற்றாலியாதி,முழு
தும்விற்றடியார்க்கன்பான் முதிர்சுவையமுதளித்
தார். (சு)

மனையிலுள்ளவனைத்துமாண்டிடச்செயலொ
ன்றின்றி, யினியருந்தவர்கட்கேதோவென்செய்கே
னனத்துளங்கி, யனையவர்க்கிரப்புற்றேனுமமுத
மிட்டொழிந்ததன்பே,னென மனந்துணிந்தவ்வா
றுசெந்பலியிரந்துசெய்தார். (எ)

இத்திறமொழுகுநாளினின்மைமேன்மேல்வந்
தெய்த, வெய்த்திடுபவர்களின்றியெண்பகல்பலிககு
ழன்றே, யுத்தமர்வறிதுமீண்டங்குடற்றும்வெம்ப
சிநோய்கூர, மைத்தடங்கண்மாதோடும்வருந்திமெ
ய்தளர்ந்திருந்தார். (அ)

கொழுநர்தம்மெய்வருத்தங்காண்டொறுங்கு
ழைந்துநெஞ்சம், விழிபொழிவெள்ளமோடவெய்
துயிர்த்தேதென்செய்கோமென், றெழுதுயர்மனத்தி
னோங்கவில்லினுக்குரியார்செந்தீ,மெழுகெனவுருகி
நைந்தார், வினைகொலோவிதுவென்றெண்ணி. (கூ)

அன்பர்தாமுடறளர்ந்துமகத்தளர்வின்றிச்சென்
று, முன்பெனநதிநீர்மூழ்கிமொய்ம்மலர்புனல்கொ
ண்டெய்திப், பொனபுனைதிருவிற்கோலப்புனிதனை
வழிபட்டேத்திப், பின்புதன்மனையின்மெல்லப்பெய
ர்ந்துவந்திருந்தாரெய்த்தே. (க0)

இம்முறையந்தணாளரொண்டினமுணவொன்றி
ன்றித், தம்முடறளர்ந்தொன்பானாட்டையல்பாக
னைப்பூசித்தே, யம்மனைவருகுவார்மெய்யயர்ந்துவந்

தருகுவீழ்ந்தார்;, மைம்மலிகுழலினார்தமமதிமுகத் தறைந்தழுங்க. (கக)

அவ்வமையத்திலீசனடியவரொருவர்யாண்டும், *துவ்வரிதாகமேனிதுவண்டுகண்ணுள்விழுந்து;செவ்விதழ்புலர்ந்துவாடுந்திருமுகமோடுமுன்றில்,வெவ்வியபசியின்வந்தேன்,வினையிலீரொன்றுசென்றார்.

தொண்டர்வந்துரைததமாற்றஞ்சுடுதழற்காயந்தவெவ்வேல்; புண்டுளைபடப்புக்கென்னச்செவிப்புலம்புக்குநெஞ்ச, முண்டிட,வெழுந்துபோகியுரியநன்மனையாரோடும்,வண்டவர்தமைவணங்கிமனையினுட்கொண்டுபுக்கார். (கந)

ஆதனத்திருத்திமேனியயர்வுகண்டழுங்கிக்,கெட்டேன்;,மாதிடத்தவர்தம்மன்பர்வருந்தவிவ்வாறுகண்டே,, னேதினிச்செய்வேனெனாவிணைவிழியருவிபாய;, மூதழற்படுமாக்கின்மும்மைநெஞ்சுருகினைந்தார். (கச)

அன்னைபங்குடையோனன்பரயர்வுகண்டாற்றலாகா, தின்[illegible]யிந்நகரமுற்றுமிரந்துகாண்குவன்,புகுந்து; செந்நெல்வந்திலதேலாவிதீர்ப்பனென்றிவிற்கோதித்; தன்னிகரிலாதாரன்புதரும்வலிகொண்டுசென்றார். (கரு)

---

* துவ்வு-உணவு.

நனையவிழிதழியார்க்குநல்லவரினைத்தாரென்ன, வினைவுறு மனத்தோடங்கங் கிருந்திருந்தெழுந்து மெல்ல, மனைதொறும்பலிக்குப்புக்காரவடிவுறுவருத்தஞ்சற்று, நினைகிலரன்புபற்றாய்நின்றதந்தணருக்காவி. (கசா)

எம்மையாடிருவிற்கோலத்திறையவன்கருணைநன்றாற்,செம்மையாமனத்தற்கெய்தசெந்நெல்ங்கீரண்டுநாழி;நம்மையாளுடையதொண்டர்நனிபெருஞ்செல்வமுன்னின்,மும்மையாயடைந்ததென்ன. முதிர்மகிழ்வுற்றுமீண்டார். (கஎ)

அந்தணர்செல்லநங்கையருந்தவராயர்வுகாணு,வந்தெழுந்துயரமோர்பான்மனத்தெழுந் தலைப்பகூகேள்வர்,தந்தளர்வுண்ணின்றேங்குந்தணிப்பெருந்துயரமோர்பான்,மூந்துறவழுழிரங்குழுலைமுகட்டிடற்றிவீழும். (கஅ)

இன்னலங்கடலன்மூழ்கியெழுந்திடாதழுங்குகின்றார்; செந்நெல்கொண்டேந்தோநங்கடிருததொண்டர்பசித்தாரென்று; அன்னுறுதுயரநாக்கத்துணைவனார்வருதல்கண்டு; பின்னனவெதிர்வணங்கிவிரைந்துவாங்கினரச்செந்நெல். (ககூ)

வாங்கியசெந்நெற்குத்திமாதவர்பசிநோய்தீரப்பாங்கொடுமமுதமாக்கிப்படைத்திடவேண்டுமென்ன; வோங்குறுமனத்தன்பாற்றம்முடற்றளர்வெ

ண்ணுதம்பொற், பூங்கொடியனையார்†போனம்பொ
ருக்கெனவமைத்துப்பின்னர். (உ0)

திருந்தியகொழுநர்க்காயிற்றமுதெனச்செப்பி, நம்பா, லருந்துயர்கெடவந்தாரையமுதுசெய்விப்பீ ரென்ன! விருந்தினர்தமைவணங்கியமுதுசெய்வித் தவேலை; மருந்தெதிர்பவரின்மிக்கமறையவர்மகிழ்ச் சிகொண்டார். (உக)

மாதவரமுதுசெய்துமகிழ்ச்சிகொண்டெய்தப்பி ன்போ, யாதரவொடும்வணங்கியவரருள்விடைகொ ண்டேகித்; தீதகலன்பின்மிக்கார்சேடித்தவமுதுண் பாக்குப், போதுமவ்வமையந்தன்னிற்புகுந்தவர்ப தமுரைப்பாம். (உஉ)

வேறு.

அந்தணாளர்தம்மனையுலகிலுயலர்த்த; நந் திலாவருட்கூவநாயகனுளநாடித்; தந்தமாவுரிபோ ர்த்ததன்றனியுருமறைத்து; முந்துதொண்டர்கள் போலொருமூப்புருவெடுத்தான். (உங)

அன்றுமேவியகாரைக்காலம்மையேயம்மை யென்றவாசகமெய்பெறவவளுருவென்னத், [ன்ற துன்றுமேனியிற்றஞ்சவெண்ணீறுந்தென்பெலாந்தோ மன்றுளாடியதிருவடிமலர்நடைதளர. (உச)

---

† போனகம் என்பது-போனம் எனத் தொக்குநின்றது.

பொருவிறன்னைவிற்கோலத்தனெனும்பெயர்பு
துக்க; வுருவமுள்வளைந் தொருகழைத் தண்டுமுன்
னூன்றித்; திருவிறைஞ்சுபொற்பையரவல்குலாள்சி
ரிப்பத்; தருமசீலர்தம்மனையிடைப்புகுந்தனன்றலை
வன். (உரு)

புகுந்திளைத்தனமொருபிடிபோனகமிடிலோ,
மிகுந்தபுண்ணியமுமக்கெனவிளம்பினன்விமலன்,
பகர்ந்தவாசகங்கேட்டலும்பதமுணவிருந்தார்,
நுகர்ந்திடாமுனமடியர்வந்ததுதவநோன்மை. ()

என்றகங்களித்தெழுந்துபோரெம்பிரானிளைத்து
நின்றவந்நிலைகண்டுளம்பொருதுநெக்குருகித்,
துன்றருந்துயர்கூர்ந்திருகண்கணீர்சொரியப்,
பொன்றிலன்பொடுவணங்கியுட்கொண்டுபுக்கனரா [ல்.

வேறு.

ஐயனையர்தனத்திருத்தியிங்குநா
முய்யவந்தவர்தமக்குள்ளபோனகம்
பையரவல்குலாய்படைத்தியென்னலு
மையலின்மங்கையர்மகிழ்வுற்றிட்டனர். (உஅ)

இட்டலுமிறையவனெண்டினங்கணீர்
பட்டினியொடுமிகப்பரிந்துதொண்டுசெய்
* கிட்டையின்வழுவுறுதுங்கனெஞ்சிடை,
மட்டிலையன்பெனமறைந்துகூறுவான். (உகூ)

* கிட்டை - உறுதி.

கலிமிகுசிறுவிலைக்காலஞ்செல்வரை; மெலிவுறுந மக்குநம்விளங்குமாலயத், துலைவறவனுதினமொரு மணிக்குடம் மலிவுறுசெந்நென் முன்னைவத்துங்கொண்மெனை. (கூ0)

அண்ணல்சொற்றிடவதையந்தணாளர்கேட் டுண்ணெகிழ்வொடுகரமுச்சிகூப்பியே, கண்ணிணைபுனலுகக்கடையனேனையு மெண்ணிவந்தருளியவிறைவனேயெனை. (கூக)

ஆலயந்தனிலடைந்தன்புவேண்டுவிற் கோலவங்கணர்தமைக்குறுகித்தாழ்ந்தெழுங் காலையினங்கொருகடம்நிரம்புசெஞ் சாலிகண்டுவந்தனர்தருமசீலரே. (கூ௨)

கொண்டுபோய்மனையினக்குடநிரம்புநெல், லண்டர்நாயகர்திருவடியரொண்ணிலா ருண்டிடநல்லமுதுதவிச்சேடமுண் டொண்டொடியவரொடுமுவப்புற்றாரரோ. (கூகூ)

இத்திறநாடொறுமிறைவனாலயம் வைத்தசெந்நெற்கொடுவருந்தொண்டர்க்கெலாந் துய்த்திடவமுதறுசுவையொடும்படைத் துத்தமர்சிலனாளும்பதத்திலொன்றினர். (கூச)

வேறு.

மறையவர்தமக்கிம்முறைமையிற்செந்நெல்வைத்தலானரியவிற்கோலத், திறையவனுலகிற்செந்நெ

ல்வைத்தலனுமென்னுமெய்ப்பேரடைந்தனனு, ல
றையுமப்பெயரை மனம்விழைந்துரைப்போ ரழிவி
லாமிக்கசீர்ச்செல்வ, நிறைபெருங்கல்விபெருகுவர்பி
ன்னுநிகரில்பேரின்பவீட டைவார். (கரு)

அந்தவிற்கோலத்திறைசெயும்வெள்ளியடுக்கலி
ற்சந்தியாநிருத்த, நந்துபொற்பொதுவினரியவான
ந்தநடமிலங்குறுவடவனத்தி, லுந்துநற்சண்டதா
ண்டவங்கூவத்துலவுறுதருக்கமாதெனவே, வந்த
வச்சத்தியனுதினங்காணமகிழ்ந் * திரக்காநடம்புரி
வன். (கசு)

சாற்றரும்பெருமைக்கூவமாநகரிற்றருக்கமாதா
வெனும்பெயராள், போற்றுநடஞ்செய்யெம்பிரா
னுமம்போற்றுறுவளர்சடைக்கூத்தன், காற்றுணைக்
கமல மொருபகற்சென்று கண்டவரளப்பருங்கல்வி,
மாற்றருஞ்செல்வம்பெரும்புகழ்படைத்து மறுமை
யிற்சிவகதியடைவார். (கஎ)

எம்பிரானடஞ்செய்கூவமாநகரினிருப்பவர்க்
கொருதினையளவு, செம்பொனீகுறிலொண்காசியா
திகளாய்ச்சிறந்திடுந்தலங்களிற்சென்றே, யம்பொ
னுயிரநான்மறையவர்த்தேடியளித்திடு பலனிகர்த்தி
டுமாற், றம்பிரானடியார்கரத்ததையளிக்குந்தனிப்ப
லனுரைப்பதற்கெளிதோ. (கஅ)

* இரக்காநடம் - இரக்ஷாநடனம்.

கூவமாநகரிற்பிடியடங்கடிசில்கொடுத்திடினங்
தனர்தமக்குத், தேவர்மூவருமுண்மகிழ்மக நூறு
செய்பலனக்கணஞ்செறிவ, ரோவின்மாதவருக்கொ
ருபகனிரம்பவோதனமத்தலத்திடுவோர், பூவிஞே
ன்றிருமால்பதங்களோ வடைவார்புராரிதன் பதம்
பெறுகுவரால். (நகூ)

மாதவர்க்கினியகூவமாபுரத்தோர்மடமமைத்
துதவுவோர்தம்பாற், போதுறுமடம்விட்டின்பவீட
டைவர் பொன்றுறுபதங்களிற்புகுதா, ராதரவினி
லோர்சிவனடியவருக்கங்கையின் றுணைவிளைநிலமொ
ன்,றீதல்செய்பவரெக்காலமுமகலாதிருப்பரொண்க
யிலைமால்வரையில். (சo)

அருந்தவர்தமக்குக்கூவமாநகரிலாடையொன்
றளித்திடிலதனிற்,றிருந்திழையொன்றிற்கொருசத
கோடிதேவராண்டருஞ்சிவலோகத், திருந்துபின்ப
ரமன் றிருவடிக்கமல மெய்துவர்பெற்றமென்றுறுத
விற், பொருந்துறுபலனிவ்வுண்வெனக்கணித்துபபு
கன்றிடற்கரிதரிதம்மா. (சக)

கொன்றையங்கண்ணியிலெந்தவன்மகிழுங்கூவ
மாநகரிடத்தியற்று,மொன்றொருதருமமனந்தகோ
டிகளா யுலப்பறுபலன்களையுதவு, மென்றதனியல்
பைமுனிவரருவப்பவியம்பினன்புலனெறிகடந்து,

சென்றரும்பரமானந்தவாரிதியிற் றிளைத்திடுஞ்சூத
னென்பவனே. (௪௨)

செங்நெல்வைத்தசருக்கம்
முற்றிற்று.
ஆகச்செய்யுள்-௪௬௦.

## தாருகன்வதைச்சருக்கம்.

:o:

சுருககமிலறிவுடைச்சூதமாதவன்
றிருக்கிளர்கூவமாநகர்ச்சிறப்பெலா
முரைக்கவுண்மகிழ்ந்துகையுச்சிகூப்பிமா
விருக்குநன்முனிவரரியம்பன்மேயினர். (௧)

முன்னநீதருக்கமாதெனமொழிந்தவ
டன்னதுதோற்றமென்றனிப்பொற்கூவமா
நன்னகரிடைநடமாடவந்தவா
றென்னகொலியம்பெனவிசைத்தன்மேயினன். (௨)

பேரறங்களைநிலைபெயரக்காமரோ
யாருதலெனநிகழகிலம்யாவையுங்
கூரிடர்மூழ்குபுகுலையமேலைநாட்
டாருகனெனவொருதகுவன்றோன்றினன். (௩)

சேண்டொடுதனதுடம்சிந்துசெம்புனற்
காண்டுளிமுழுதுந்தற்கடுத்தெழுந்திட
வாண்டகையோர்களாலழிவுறாதற
மாண்டகுதவத்தினன்வரம்படைத்துளான். (௪)

எண்டிசையயானையமையெழுபிலத்துள்ள
விண்டலமிசையுறுவேந்தர்தங்களை
மண்டுதன்சேனைகாவலர்களால்வயங்
கொண்டனுதினமுங்குற்றேவல்கொள்பவன். (௫)

தறுகண்வெஞ்சினக்கொடுந்தாருகன்றிசை
யுறுகரிதினந்தொறுமொரோவொன்றாகவே
குறுகியதூதராற்கொணர்விதந்தெறியோர்
மறுகெனவுலகெலாம்பவனிவந்துளான். (௬)

ஒளவொளியிரவிதேர்க்கிள்ளையொத்தவேழ்
கிள்ளைகண்மீதுமொண்கிண்கிணிச்சரண்
பிள்ளையேழ்தினதினுமேறறிப்பேரொழின்
ஞெள்ளவினுலாவருவித்துநீக்குவான். (எ)

கொம்மெனப்புறவடிகொண்டொற்றினன்
மைம்மலிதிரைக்கடல்வறப்பவெற்றுவான்
செம்மகமேருவினோடுசிற்சிலம்
பம்மனையெனவெடுத்தாடுமாற்றலான். (அ)

வானிதிநந்துதாமரைதன்வாவியிற்
பானிகழ்வளையொடுபதுமமாகவே
யானிரைதனிற்பசுவாகத்தேனுவைங்
காநகாமலர்ப்பொழிலாகக்கண்டுளான். (௯)

வித்தகவிடையினோன்வில்லிற்பொன்கவர்ந்
தத்தனுவளைவுறவசைத்தநாரியின்

மெத்தொளிமணிகொளாவியப்பவாக்கிய
புத்தணியவயவம்புனைந்தமாட்சியான். (௧௦)

மணங்கமழ்குழலரமகளிர்ப்பற்றிவந்
திணங்குறுதகுவியாக்கேவல்செய்வியா
வுணங்குறுசிறைபுரிந்துடன்றணக்கியே
யணங்கியவொனும்பெயரவனிட்டானரோ. (௧௧)

மேயதன்றிகழவைவிளங்காவிறை
மாயிருந்தலேகளேவனைந்ததமபமா
மீயிலங்கொளிமணியிருள்விழுங்குறு
மாயிருஞ்சுடர்களாயமரவைத்துளான். (௧௨)

ஒலலையிற்பொழுதுணர்ந்தோலக்கத்துறு
மெல்லையிற்புகுந்திடாதிருந்ததேவரைக்
† கொல்லுலேக்கனல்விழிக்கொடியதூதரான்
வல்லியிட்டருஞ்சிறைபபடுத்தவன்மையான். (௧௩)

கனவினுமவன்றனைக்காணினிந்திரன்
மனநடுநடுங்கிவாய்குழறிவல்லேயி
னனவினையடைந்துபின்னடுங்குநெஞ்சகத்
தினைவுறலொருபகலெலாமொழிந்திடான். (௧௪)

ஒருங்குலகங்களினுயிர்களுக்கெலாம்
வருங்கொடுநோயெனவருமவன்றனு
லருங்கடவுளாருச்சனையறங்கள்வான்
றருங்கலைநெறிமகந்தவமகனறதே. (௧௫)

---

† கொல் எனபது - கொல்லனை என்னும் பொருளிலவந்தது.

அக்கொடுந்தயித்தியனுணையிற்படா, வுக்குநெஞ்சிடர்ப்படுங்காலத்தோர்பகன், மிக்கவிண்ணவரரிவிரிஞ்சனிந்திரன், ஞெருக்கொருங்கொருபுடைதுயரொடீண்டினர். (கசு)

தங்கள்வெந்துயருமத்தகுவனுவியு
மங்கொருங்கழியுநாளடுத்ததாதலாற்
சங்கரன்றனையினிச்சரணென்றெய்திடின்
மங்குநந்துயரொனமனந்துணிந்தனர். (கஎ)

துணிந்தவர்கயிலையைத்தொழுதங்கெய்துபு
தணிந்தமெய்ம்மனனுடைத்தவத்தர்சென்னிமீ
தணிந்திடுநந்திதாளரணடைந்துநோ
பணிந்தனரினையனபகர்தன்மேயினர். (கஅ)

தடுத்தசெங்கோலுடைத்தாருகன்றனு
லடுத்தவெந்துயருழைத்தகற்றவந்தனம்
படைத்தெமையளித்திடும்பராபரன்முனம்
விடுத்தருளையநீயென்றுவேண்டினர். (ககூ)

தன்னைநேர்கின்றவன்சைவதேசிக
னென்னையாளுடையநந்தீசன்சென்மென
மின்னுலாஞ்சடையினேன்வீற்றிருந்துழித்
துன்னுவானவரொலாந்தொழுதுபோயினர். (௨0)

வருணமாமணியொளிர்மண்டபத்திடைத்
தருணவாரணப்பகைத்தவிசின்மீமிசை

யருணகோடிகடிரண்டமர்ந்தசென்னவாழ்
கருணைவாரிதிதனைக்கண்டிறைஞ்சினார் (௨௧)

விழிப்புனறுளிப்புமெய்ம்மயிர்ப்பபுளகமெனரி, யுழுப்படுமரக்கினெஞ்சுருகிமெய்துயிர்ச், கழிப்படுமெனக்கருள்சுரக்குமீசனை, மொழிப்பயன்பெறத்திருமுன்னின்றேத்துவார். (௨௨)

வேறு.

வாணுதிகளாய்த்திகழ்வாயசரணமறைமாமுடியின பொருளேசரண, மூவுருவிரோசரணஞ்சரணமுணராவுக்குணர்வேசரணஞ்சரணந், தேனார்மொழிபங்கினனேசரணஞ்சிவசங்கரனேசரணஞ்சரண, மாஞவமுதேசரணஞ் சரணமருளாகரனேசரணஞ்சரணம். (௨௩)

மருவேமலரோசரணஞ்சரணமணியேயொளியேசரணஞ்சரணந், திருவேபொருளே சரணஞ்சரணந்தேனேயமுதேசரணஞ்சரண, மிரவேபகலேசரணஞ்சரண மெமையாளுடையாய்சரணஞ்சரண, மருவேயுருவேசரணஞ்சரணமருளாகரனேசரணஞ்சரணம. (௨௪)

வேறு.

என்றிவைபுகன்றுபோற்றியிணைமலர்க்கரங்குவித்து, நின்றவர்தமைமென்கொன்றைநெடுஞ்சடைக் கடவுணோக்கிப், பொன்றிகழ்மணாதிப்பட்டபோன்

முகம்புலர்ந்தவுங்கட்,கொன்றிநெஞ்சகன்றிடாததுயரழேழுமைத்தீதென்றான். (௨௫)

பெருந்தகையியம்பமாயோன்பெயர்வின்றிப்பொருள்கடோறு, விருந்துடைமூயிர்க்குமென்றவெந்தைநீயெங்கணைஞ்சி, னருந்துயரறியாயபோலவினவியதடியேமுய்ய, பொருந்தியகருணையென்றுபோற்றிநின்றுரைப்பதானான். (௨௬)

தாருகனென்னவெய்யதயித்தியனொருவன்றோன்றிப், பாரிடைமுன்னேவேதம் பகர்மகமறத்தின்பேதஞ, சீரியதவங்கடானஞ்சிதைத்தனனன்பமெய்தி, யாருயிர்தரித்திருந்தா ரமரராகையினல்விண்ணோர். (௨௭)

சற்றுமுட்கருணைகொள்ளாத்தாருகனிழைத்ததீமை, யிற்றெனக்கிளக்கவெம்மான்முடிவுறாதெம்பிரானே, மற்றினிப்புகல்வதென்கொல்வலிகெழுமவன்றனக்குன்,சிற்றடிக்கேவல்செய்யுஞ்செயலெனத்தினமுஞ்செய்தோம். (௨௮)

அந்தவேலவுணன்றீமையாற்றரிதெங்கட்குந்தன், கந்தவாரிசப்பொற்றுளே காப்பெனவபயம்புக்கே,மேநந்தைநீயெம்மைத்துன்பக்கடலினின்றெடுத்தாட்கோடி, தந்தையேயன்றிவேறுர்தனயர்தமின்னறீர்ப்பார். (௨௯)

அச்சுதனெனுமென்னுமத்தமரரொன்சுரர்களுமத்திச்சகமறியநின்றமுதலெழுத்திகவாதொன்ற

* நச்சினைமிடற்றடக்குநாதவன்னஞ்சிற்றியன், கைச்செமைத்தினமொறுக்குங்கடுந்திறற்றாருகன்றான்

எம்முயிரொழியாதென்றுமிருந்திடர்ப்படவருத்து, மம்மறவனையட்டாட் கொள்ளஃதின்றேலடியேமெல்லா, மிம்மெனவிமைப்பின்மாளவெமைமுனம்புரக்கவைத்த, வெம்மைகொண்மணிமிடற்றின் விடத்தைவிட்டிடுதியையா. (௯௧)

என்றரவணையிற்றுஞ்சுமெழிலரியியம்பக்கேட்டுப், பின்றிகழசடிலக்கற்றைப்பெருந்தகையருண்மீதூர, வன்றிறலவுணன்றன்னை மாய்த்துவானவர்கணெஞ்சந், துன்றுறுதுயரனைத்துந் தொலைத்திடவுளங்கொண்டானல். (௯௨)

வன்மனத்தவுணர்கோமான்வரத்தொடுவலியுமுள்கிப், பொன்மலைச்சிலைகுனித்துப்புரமெரிபடுத்தவெம்மான், சின்மயக்கிரிபயந்த தேவிதன்வதனநோக்கி, மென்மலர்க்கரந்தனது மிடற்றினுலத்துவைத்தான். (௯௯)

---

* நசசினைமிடற்றடக்காவழி, திருமாலும அயன முதலிய தேவரும் இறததலையுடையராக; அச்சுதன் அமரனென்னும அவர்நாமங்கள், அகரத்தையிழந்து முறையே சுதனென்னினறு அழிவை யுடையவனெனவும், மரனெனினறு மரித்தலையுடையவனெனவும், பொருள்பட்டு நிற்குமாகலின், முதலெழுத்திலவாதென்று நச்சினைமிடற்றடக்குநாதன் என்று விதந்தார்.

வைத்தவக்கணத்தினெண்டோண்மலேபிணேத் தன்னகொங்கை,மெய்த்தழற்கொழுந்துபோலுமெ ன்சிகைகுழைதாவால, மொத்தகட்பேழீவாய்வாரி யுண்முகில்புரையுமேனிக், கைத்தலக்கழுமுட்டுங் கக்காளிவந்துதித்தாண்மன்றே. (கூ௪)

அண்டகோளகையிற்றுக்கியணிமுடிவளேயமீக் க, வெண்டிசாமுகத்தினெல்லே யெண்புயமளப்பக்க ண்கண், மண்டுதீச்சொரியசூலம்வண்கையிற்றிரி யவூழிக்,கொண்டலாயிரமுழுஙகுங்கொள்கையினதி ர்த்தெழுந்தாள். (கூ௫)

செந்தழறனக்குவெம்மையியல்பெனச்சிற்றமெ னறு, மந்தமில்குணமாயுள்ளாளடைந்தவர்க்கருளு ஞசெய்வா, ளிந்தவண்டங்கள்கோடியியற்றிடவெ ண்ணுநெஞ்சா, ளுந்துமமாற்றலாலெல்வுலகினுமு வமையில்லாள். (கூ௬)

மைந்நககநடுவட்சூழ்ந்தமாலேயின்செக்கர்போல த்,தன்னரைவிரித்துடுத்ததயங்குசெந்துகிலின்பொ ற்பாள், கொன்னுனேவடுகன்சூலக்கொடும்படைதி கர்த்தசூல, மன்னியமலர்க்கரத்தாண்மணிச்சிலம்ப ரற்றுந்தாளாள். (கூ௭)

ஞாலத்தினுயிர்களெல்லாநடுங்குறக்கரத்திற் கொண்ட, சூலத்தினுதியிற்குத்திச்சொரியுண்டிடக் குறிப்பாள், வேலேத்திண்டிரையிற்சென்றி யுலகெ

லாம்விழுங்கவந்த, வாலத்தினுதித்ததாமென்றாலஃ
தவட்கடுத்ததன்றோ. (௩அ)

உன்னருமுதிர்சூன்மேகமொத்ததிர்த்தெழுந்த
செங்கட், கன்னியையுமைகண்டேங்கிக்கைவிரனெ
ரித்துச்சென்று, தன்னிகரமலன்மார்பிற்பண்டுறுத
ன்றழும்பிற், பொன்னவிர்சுணங்குபூத்தமுலைபடப
புல்லிக்கொண்டாள். (௩கூ)

அன்னவளெழுதல்கண்டவச்சுதனெம்பிரான்
முன், பின்னுமாசெய்தவாறேபெருவிடத்தினைமா
தாக்கி, யிந்நிலையெமைவதைப்பவிடுத்தனனென்ன
மாழ்கித், தன்னகமருண்டுநின்றான்சதுர்முகனுட
ல்கம்பித்தான். (ச0)

இந்திரன்மனந்தளர்ந்தானெரியுடல்வெயர்த்தா
ன்கொல்லு, மந்தகனுவுலர்ந்தானிருதிமெய்யயர்ந்
தானேதைச், சிந்துவினிறைவெருண்டான்சமீரனை
ன்றிகைத்தான்மூர்ச்சித், துந்துமுருகுபோன்வீழ்ந்
தானுயங்கியீசானனின்றான். (சக)

ஏனையவும்பரெல்லாமெழுந்தமாகாளிகோர [லைக்
மேனியையெதிர்கண்டேங்கிவிழிபுதைத்தனரவ்வே
கூனல்வெண்பிறையிலந்தகுரிசிலோடகிலமீன்ற
ஞானநாயகியைத்தாழ்ந்துநவினுமச்சூலிமாதோ.

வேறு.

பரமவென்னைப்படைத்தவநாளிவண்
புரியுமேவல்புகன்றருளன்னதுன்

னருளினாற்றுவனென்னவரன்சுரர்
வெருவுநெஞ்சமகிழவிளம்புவரன். (சங)

தேவரொன்றுஞ்செயத்தகவல்லகுற்
றேவல்செய்யவிடர்புரிதாருக
ஞவிகொண்டவாக்காக்கமுதவுவான்
பாவைநின்னைப்படைத்தனமென்றரோ. (சச)

காரிபட்டகடுந்தொழிற்றாருகன்
சோரிபட்டதுகளுமனையவன்
மாரிபட்டவடிவுகொண்டுற்றெழு
மூரிபட்டமுகின்முலைக்காளியே. (சரு)

சூலத்தாற்குத்துபுசொரிசோரிக
பாலத்தேற்றுப்பருகியவனெடு
நீலத்தாக்கையைநீயேவிழுங்குதி
யாலத்தோடுதித்தாயென்றமைந்தனன். (சசு)

குனித்தவார்சிலைக்குன்றினன்றம்மன
நினைத்தவாறுநிகழ்த்தினனாதலாற்
கனத்தவார்முலைக்காளிமகிழ்வுறீஇ
நுனித்தோர்மாற்றநுவலுதன்மேயினள். (சஎ)

அண்டர்நாதவளியன்றனக்குநீ
யுண்டலேபணியாகவுதவினை
தொண்டராகிற்சூழ்ந்திடுவோர்தமுட்
கொண்டிநின்னருளென்னிடைக்கூர்ந்ததே. (சஅ)

ஐயநீயென்பணித்தனையன்னதே
செய்யநான்கடவேனெனச்செப்பியே
கையின்மான்மழுக்கொண்டகடவுடன்
றுய்யதாளைத்தொழுதுநின்றுளரோ. (சகூ)

அன்னகாலையனீகமதாகவே
கன்னியோகினிவெள்ளங்கணிப்பில
மன்னுகாளிவடிவிலுதித்தெழ
வெனணையாளுடையீசனினைந்தனன். (ரு0)

அக்குமாரியனையவடிவொடு
கைக்கபாலங்கழுமுட்டிகழ்தர
மிக்கயோகினிவெள்ளமசனியே
ரொக்கவார்த்தவண்மெய்ந்நின்றுதித்ததே. (ருக)

எந்தைசென்னியிளம்பிறையொத்தபல்
கந்தரத்திற்கடுவைநிகர்த்தமெய்
செந்தளிர்க்கைச்செழுங்கனல்போன்றகண்
ணுந்துமுத்தலையோகினிகட்கரோ. (ருஉ)

வேறு.

கண்ணுதற்பரமன்பினர்க்காளியைநோக்கி, யெண்ணிலித்திறலயோகினிவெள்ளமோடேகிப், புண்ணியப்பகைத்தாருகனுவியைப்போக்கிப், பண்ணவர்க்கருள்செய்யெனவேவினன்பணித்து. (ருங)

எம்பிரானையுமகிலநாயகியையுமிறைஞ்சிக்
கும்பமாமுலைத்தயுகண்யாமளைவிடைகொண்டு

செம்பொனுலயப்புறத்துவந்தடைந்தனள்செறிந்த
வும்பராங்கதுகண்டனாமனப்பயமொழிந்தார். ()

தேறினார்மனமெம்பிரான்றிருவருட்செயலைக்
கூறினார்மகிழ்ந்தொருவாமேலொருவர்தாங்குப்புற்
றேறினார்கரங்கொட்டினார்பாடினாரிருகான்
மாறினார்சுழன்றாடினாரரன்புடைவந்தார். (௫௫)

அந்தணுறுவெமதாருயிர்போக்கவன்றதிர்த்து
வந்தகாளத்திம்காளியைவருவித்திங்கவளை
யெந்தமாவியைநிறுவிடப்பணித்தனையின்று
நுந்தமாரருட்பெருமையாரறிபவர்நுவலின்.(௫௬)

என்னவீசனதருடுதித்திறைஞ்சுபுவிடைகொண்
டன்னையாகியயாமளைபுடையினவந்தடைந்து
மன்னும்வானவரனைவருந்தனித்தனிவணங்கித்
துன்னுமாமலர்மழையவண்முடிமிசைச்சொரிந்தார்

சொரிந்தவிண்ணவர்தங்கள்கம்பியற்கொடுசூல,மி
ருந்தகையுடையாமளைக்கேற்றதோரிரதம், விரைந்
துநன்குறவாக்குவித்தளித்திதன்மீது, பொருந்திந
ண்ணலற்செகுத்திடப்போதுதியென்று. (௫௮)

புகழ்ந்துநிம்பவவ்விரதத்தின்பொலிவினைநோக்கி
மகிழ்ந்துமற்றதைக்கடவவோர்யோகினிமாதைப்
பகர்ந்திருத்தியெண்டோளியாயிடையதிற்பாய்ந்தா
ணிகழ்ந்தநன்முனிவரர்சயசயவெனநிகழ்த்த. ()

தலைவியாகியயாமளையிவரவத்தடந்தேர்
வலவிபாரிடைத்தூண்டினள்காற்றெனவலிதி
னிலவிமூவிலைப்படைகொடுயோகினிநீத்தஞ்
சுலவிவேலையினெண்மடங்கார்த்தனசூழ்ந்து. (௬௦)

நிலத்தினேகினவானகத்தேகினநிமிர்பா
தலத்தினேகினமுகிலிடத்தேகினதட்த்த
புலத்தினேகினகடலகத்தேகினபொருப்புக்
குலத்தினேகினகுமரிதன்பெண்படைகுழுமி. (௬௧)

துடியதிர்ந்தனபதலைகளதிர்ந்தனதுளைச்சங்
கிடியதிர்ந்தனகாகளமதிர்ந்தனவிரலை
வெடியதிர்ந்தனமுரசதிர்ந்தனபணிவேந்தின்
முடியதிர்ந்தனவதிர்ந்தனதரணியுமுழக்கால் (௬௨)

மிக்கயோகினிப்படைசெலப்பொடிவிசும்பிவர்த
லிக்குமேவியெற்காலொடுந்தொடத்தகாதெனவே
புக்குறூர்முடியிவர்ந்திமையவரெனல்போக்கி
மக்கள்போற்புரிகிற்பனென்றேகுதன்மாளும். ( )

கார்மறைத்தனதிசைகளைமறைத்தனகதிரின்
றேர்மறைத்தனகுலகிரிமறைத்தனதிரைமுந்
நீர்மறைத்தனவுடுக்கணமறைத்தனநெடுவா
னூர்மறைத்தனமறைத்தனவுலகெலாம்பூழி. (௬௪)

தொடுக்குமாலையங்குவிமுலைச்சூலிதாரணியை
யெடுக்குநாகமெய்நெளித்தலமரவதிர்த்தெழுந்து

நடக்கும்போகினிவெள்ளமோடமரர்நன்னதிமட்
டடுக்குமாமதிற்றிருகபுரத்தயலடைந்தாள். (௬௫)

வேறு.

ஓற்றரன்னதுணர்ந்தனரோடினர்,
கொற்றமன்னன்குருமணிப்பொற்றவி
சுற்றபேரவையுற்றுவணங்குபு
முற்றும்வெஞ்சினமூண்டெழக்கூறுவார். (௬௬)

ஐயநீவிண்ணவர்ப்பணிகோடலாற்
கையுலாம்படைக்காளியெனவொரு
தையல்யோகினித்தானைகளோடமர்
செய்யவிவ்வுழிச்சேர்ந்தனளென்றனர். (௬௭)

அந்தவொற்றரறைந்திடுமவ்வுரை
சந்தனப்புயத்தாருகன்சீற்றமா
முந்துமுட்கனன்மூண்டெழக்கூறிய
மந்திரத்தைநிகர்த்ததுவந்தரோ. (௬௮)

பன்னுமம்மொழிபாதிசெவிபுகு
முன்னந்தீச்சினமூண்டதவனகந்
துன்னுறும்புகைதுண்டத்தெழுந்தன
வன்னிவெம்பொறிவாட்கண்சிதறின. (௬௯)

மட்டில்வெஞ்சினவன்னியறிவினைச்
சுட்டதிவ்வளவிற்றொலைகின்றதோ,
கிட்டிஞெரையுங்கேளையுந்தன்னையு
மட்டிடுந்துணையும்மவியாததே. (௭0)

இதழதுக்கியெயிறுகறித்தன
னுதன்மிசைச்செலநூக்குபுருவியாய்
மதரரிக்கண்மலரவிழித்தனன்
முதிராசினத்தினன்மீசைமுறுக்கினான். (எக)

பொன்றில்கற்பகபுட்களொழுக்கர
மொன்றொடொன்றுறத்தாக்கியுருமுவீழ்
கின்றதென்னநகைததனன்கேட்டசொன்
னன்றுநன்றெனச்சீறிநவிலுவான். (எஉ)

அடியொன்றாலுலகியாவுமளந்தமா, னெடியன்றா
னுமென்னேவலின்றிடும், படியன்றாற்றுமென்
பாலமர்கவென்றுபெண், கொடியொன்றெய்திலென்
கொற்றநன்றாகுமால். (எங)

இந்திராதிகளியாரையும்வென்றிடு
மந்தமேவருமாற்றலுண்டென்னிடை
வந்துளாரொருமாதமர்க்கென்னுமிந்
நிந்தைதானுயிர்நீங்கினுநீங்குமோ. (எச)

புவனம்யாவினும்போர்த்தொழில்வந்துசெய்
பவரிலாமையிற்றோட்பயனின்றியே
கவலுநெஞ்சினன்காரிகையோடமர்
நவிலிலோர்பழிநண்ணினனாவனால். (எரு)

என்னைவெல்லவிங்கேந்திழையெய்தலான்
மின்னைவெல்லவுரகமுமேவுமான்

மன்னைவெல்லமலையும்வரும்புலி
தன்னைவெல்லவுழைகளுஞ்சாருமால். (எசு)

கண்ணன்வேதன்கடவுளரிந்திர
னண்ணன்மாமுனிவோர்களபயமோர்
பெண்ணின்பாற்புகும்பெற்றிமையாலவர்
நண்ணுமாண்மைநனிசிறந்திட்டதால். (எஎ)

வேறு.

இந்திரற்பிடித்தெடுத்தெற்றிவீழ்ப்பனோ
வந்தகற்பதைத்திடவடித்துக்கொல்வனோ
சந்திரற்கதிரொடுமெடுத்துத்தங்குபூம்
பந்தெனப்புடைப்பனோபடியிற்பாணியால். (எஅ)

கனலினைவிழுங்கியேழ்கடலுமுண்பனோ
சினமறவமரரைப்பதத்திற்றேய்ப்பனோ
முனிவரர்குலமெலாமுடிப்பனோவென
வினையனபலபகர்ந்தெரியிற்சீறினன். (எகூ)

சீறியதாருகத்தீயன்யாமளை
வீறியவெனைத்தொழுமேவினள்கொலோ
மாறமர்புரிந்திடவந்துளாள்கொலோ
கூறுதிரொற்றினீர்குறிப்பென்னென்றனன். (அ0)

என்றலுமொற்றர்களிறைஞ்சியையகேள்
வன்றிறல்யாமளைமறலிதன்னையும்
வென்றிகொள்படையொடும்பொருதல்வேண்டியே
யொன்றினளையமின்றுண்மையுண்மையே. (அக)

மாதெனவுளங்கொளேலவளைமன்னநீ
யோதருமசுரருஞ்சுரருமுட்கமுன்
மோதுறுதிரைக்கடன்முகட்டெழுந்தவப்
பாதகஞ்சமேபடிவங்கொண்டதால. (அ௨)

உமமெனவவளுரப்பொலிசொல்கின்றதீ
வெம்மைகொணமனையும்விட்டுமாயுதங
கைம்மலைபரித்தவக்கண்ணற்கோர்தலைச்
சும்மைகொள்சுமையவளெடுத்தசூலமே. (அ௩)

வேறு.

இனையனவொற்றர்கூறுமெல்லையிற்கடைநாட
பொங்கிக், கனைகடலுடைந்ததென்னக்காளிதன்றா
னையார்க்கு,நனியொலிசெவிப்புலத்துநடந்ததுதாரு
கன்றன், சினவெரிக்கிழுதுமன்றிச்சமிதையுஞ்சொ
ரிந்ததேபோல். (அ௪)

ஆபதுகாலைதன்னிலழலினெண்மடங்குசீறிச்,சே
யிழைமகளிர்ப்பற்றிச்சிறைபுரிந்திடுவன்றாதீர,போ
யெனதனிகமுற்றும் பொருக்கெனத் தருதிரென்ன,
வேயினனவருநன்றென்றிறைஞ்சுபு விரைந்துசென்
றார். (அ௫)

சென்றபினவுணர்செம்மல்செருத்தொழிற்கோ
லங்கொள்வான், கன்றியங்கெழுந்துட்போகிக்கதிரி
ளம்பரிதிநீலக், குன்றின்வந்தெழுந்ததென்னக்குரு
மணிமகுடமொன்று, தன்றலைகவித்தான்யாருஞ்ச
யசயென்றெடுத்துவாழ்த்த. (அ௬)

கல்லெனமிழற்றும்வீரக்கழலடித்தலத்திலார்த்
தான், மல்லலங்கச்சுவீக்கிமருஙகினிற்சுரிகைசேர்த்
தான், புல்லுறுமங்கிமேனிப்புறந்தெரியாதுபோர்
ததான், வில்லுமிழ்சரம்பெய்தூணிவெரினிடை த
தூக்கினானல். (௮௭)

அங்கையிற்கோதைசேர்த்தானணிவிரற்புட்டி
லிடடான், கொஙகலர்தும்பைமாலைகுருமணிமவுலி
சூழ்ந்தான், புங்கவப்படையனந்தம்பூசனைபுரிந்தெ
டுத்தான், செங்கையிற்றொழுதுமேருச்சிலைநிகர்சி
லையுங்கொணடான். (௮௮)

இம்முறையமரின்கோலமெய்தியொள்ளிலைவே
ன்மன்னன், கொம்மெனத்தனதுகோயிற்புறத்த
னிற்குறுகுமுன்னந், தெம்முனைமுருக்குஞ்சேனைத
ரமுனைஞ்சென்றதூதா, தமமனந்தனில்விரைந்து
தலைத்தலைபரவிசசென்றார். (௮௯)

சென்றவரொட்டகத்திற்செழுமுரசெறிந்துநு
ஙகட், கின்றொருபெரும்போர்வந்துகிடைத்ததிங
கெழுகசேனை, யென்றலுமவுணர்வேழமிரதமம்புர
வியென்னத், துன்றுறுமணிகவெள்ளந்தொகையில
வெழுந்தமாதோ. (௯௦)

போரொனச்செந்நெற்சூட்டுப்பெயரினைப்புகலு
ற்றானு, மேருறுதடந்தோள்வீங்கியெஙஙனென்றெ
ழுந்துதுள்ளும், வீரர்களவுணர்தூதர்வெஞ்சமர்க்

கெழுமினென்ன, வாருறுபணைமுழக்கமகிழ்ச்சிகொ
ள்வதையென்சொல்வாம். (௬௧)

வீங்கினர்புயங்களெஞ்சம்விம்மினரமரிற்றுன்
ப, நீங்கினரெழுவும்வாளுநேமியுமழுவும்வில்லுந்,
தாங்கினர்பகைஞரொங்கன் சார்ந்தனர்காட்டுமென்
ன, வோங்குறுமண்டகூடமுடைந்தெனவார்த்து
ச்சூழ்ந்தார். (௬௨)

இந்திரன்வயிரந்தன்னாற்சிறகர்முன்னீரப்பட்
ட, வந்தமில்கிரிகளெல்லாமனையவன்பகைஞனெ,
நந்துறுமவுணன்றன்பா னட்புறநடந்தவென்னச்,
சுந்தரத்திகிரிப்பொற்றேர் திசைதொறுஞ்சூழ்ந்தவ
ம்மா. (௬௩)

சோர்ந்துறுகற்பின்மாதர்துணிவுறுமுள்ளம்
வேறாய்ச், சேர்ந்திடுகொழுநரோவற்றிருந்துறச்செ
ய்யுமாபோ, லூர்ந்திடுபாகர்தம்பாலுளத்திடைமு
னிவுகொண்டு, கூர்ந்தவர்குறித்தல்செய்யுங்கொடும
தமாக்கள்சூழ்ந்த. (௬௪)

நிலத்திடைப்பாயுஞ்சென்றுநெடுவிசும்பகட்டி
ற்பாயும், பிலத்திடைப்பாயும்பாழிப்பெருங்கடன்
முகட்டிற்பாயு, மலத்திடைப்பாயுஞானவொருநெ
றியோங்குறாமற், புலத்திடைப்பாயும்புல்லர்மன
மெனப்புரவியீட்டம். (௬௫)

ஈண்டியவனிகநான்குமெழுந்தனவவுணர்கோ
மான், காண்டலுமுவகைபூத்துக்கவனவாம்புரவி

கோடி, பூண்டுறுமிரதமொன்றிற்பொருக்கெனவா
விப்புக்குத், தூண்டுறுவலவற்பாராவினையனசொல்
வதானான. (கூசு)

பாகனீரொடிப்பின்மாதின்படையெதிர்நமது
பொற்றே, ரேகுறவிடுத்தியென்னவிறைஞ்சினின்
றையவென்ன, மாகவாம்பரிகடம்மைமத்திகைத்
தொழிலாலுந்திச்,சேகுலாமுருளைத்திண்டேர்சசெ
லுத்தினன்விரைந்துசெல்ல. (கூஎ)

அடைப்பைகோடிகங்களாஞ்சியாலவட்டங்க
ளொள்வா, ளடுப்பவர்பலருஞ்சூழவிழிக்குறிகாட
டவந்து, படைப்புறமொய்க்குமீக்களகற்றுறும்பரி
சுபோலப், புடைப்பரிசனங்கணின்றுபொலியும்வெ
ண்கவரிவீச. (கூஅ)

தாருகமன்னனேகுந்தன்மைகண்டனிகவெள்
ளம், வாரிதியேழுமுட்கவல்லிதினார்த்தெழுந்து, சீ
ருறுமனந்தனுமைப்பணியிறைசென்னிமாற்றப்,பாரக
ம்போழ்பட்டேங்கப்படர்ந்தன திசைகண்முற்றும்.

படிமகளசுரனீசப்பரிசனஞ்செய்தபாவ, முடி
வுறககடவுட்கங்கைமூழ்குவான் படர்தலென்னக்,
கொடியவெம்படைகளார்த்துக் கொம்மெனநடக்கு
மேல்வைப், பொடிவிசும்படங்கநுங்கிமீமிசைப்போ
யிற்றம்மா. (௪00)

விண்ணெழும்பூழிமாலைவெண்குடையடைந்த
ப்பாற்போய்க், கண்ணகன்கதிரின்மேனிக்கவினழி

யாதவண்ண, நண்ணுபுதடுத்தவாழிநஞ்சுதானருந் திமுக்கட், பண்ணவனமரர்க்காத்தபேரருட்பான் மையேபோல். (கOக)

நீங்கியநானுப்பெற்றுநிறையழிகணிகைமாதர், தாங்களோருழியிற்கூடித்தத்தமின்மலேதலேபோற், பூங்கழன்மிழற்றச்செல்லும் பொருநர்கைப்பற்றவிண்ணி, ஞெங்கியேகொடிகளொன்ரேடொன்றுதாகருற்றவன்றே. (கO௨)

தழங்கினமுரசமார்த்ததண்ணுமைகலித்தமொந்தை, முழங்கினபடகமெல்லாமொய்ம்பினினியவர்தாக்குஞ், செழுங்கரவிசைகட்கேற்பச்சிலம்பினபுவனிமாந்த, ரழுங்குராலோசையேற்றுமடுக்கியன்றெழுதலேபோல். (கOக௩)

இவ்வகையனிகமென்னுமிருங்கடல்விரைந்துசூழத், தெவ்வடுகுவவுத்திண்டோட்டிருகுளத்தவுணர்கோமான், கொவ்வையங்கனிவாய்ச்செங்கட்குமரிதன்படைவந்தெய்து, மவ்வுழியெதிர்சென்றேற்றனமரர்கணடுங்கியேங்க. (கO௪)

மண்டுறுமவுணவெள்ளமலிந்தெதிர்வந்ததன்மை, கண்டனர்வடவையேபோற்கனன்றியோகினிகள்சூலந், திண்டிறலோடுசெங்கைவிரல்களாற்றிரித்துமிக்க, வண்டகோளகைவெடிப்பவார்த்தெதிர்சென்றுபுக்கார். (கO௫)

வேறு.

எழுக்களுமுசலமுமிலைகொள்வேல்களு
மழுக்களும்வளைகளும்வாளும்வாளியுங்
கழுக்களுமலைகளுங்கதையுங்காளிகள்
குழுக்களுமவுணர்மேற்கொதித்துவீசினர். (க0சு)

தோமரமொளிறுவாள்சுரிகைமுத்தலை
நேமிகள்சிலையுமிழ்நெடுஞ்சிலீமுக
நாமவேன்முதலினநஞ்சிற்றீயவர்
தாமும்யோகினிகண்மேற்றருக்கிவீசினர். (க0எ)

கரங்களின்முசலமுங்கதையுநல்கியே
யுரங்கிளர்சொரிமதவொருத்தலூநதினர்
மருங்குறவொளிறுகைவாள்விதிர்த்துவன்
றுரங்கராசிகடமைத்தூண்டியீண்டினர். (க0அ)

தார்கெழுதடம்புயத்தகுவராழியந்
தேர்களைமுடுககியெண்டிசையுஞ்சூழ்ந்துகொண்
டேர்கிளர்கொடுமரமிமைப்பின்வாங்கிவிண்
கார்களின்மும்மைவெங்கணைகள்சிந்தினர். (க0கூ)

விழுந்தனதலையுடல்வேறுவேறதா
யழுந்திடவரைகளினூற்றிற்செம்புன
லெழுந்தனவிருதிறத்தினுமெண்ணிலவ
ருழுந்துருள்பொழுதினிலுலந்துபோயினர். (கக0)

கண்டனரவுணர்தங்களிப்புமாற்றலு
மொண்டழலெனவுளமுருத்துப்பொங்கினு

ரண்டமுமிடிபடவதிரத்துவல்லேயின்
மண்டியோகினிகடாமலேதன்மேயினா. (கக்க)

பரியொடுபரிகளுமபனேகளைமும்மதக
கரியொடுகரிகளுங்கதிருலாமணி
யிரதமொடிரதமுமெடுத்துவீசினா
சுரருளமகிழ்வொடுதுணங்கையாடவே. (ககஉ)

சிறந்திடுநெடுமணிதழிகிரிததேர்களை
யுறைந்தவரொடுமெடுத்துமபாவீசினர்
மறந்தருபெருவலிமாருதம்பறித
தெறிநதிடுமேருவினமுடிகளென்னவே. (ககங)

கொய்யுளேமாவுமவெண்கோட்டுவேழமு
மொயயெனவேயெடுத்துகைக்கினரேருடன
மையலில்சூரரமடசுளிர்வீசினர்
வெய்யவன்றேரொடுவிலஙகவிண்ணின்மேல். (ககச

அருகுறுமவுணரையடர்ந்துபற்றியே
கருகுறுமிடற்றினைக்கடிததுக்கொசகிடைத்
திருகுறுகனியெனச்சுவைத்துசசெம்புனல்
பருகினர்முனிவொடுபசிசற்றாற்றினர். (ககரு)

பிடித்தனர்குருதிநீர்பிலிற்றக்கைகளா
லடித்தனரவுணர்தம்மாக்கையென்பெலா
மொடித்தனர்நகிரையுதிரத்தண்டிறை
விடித்தனருயிரைவிண்ணேற்றினரரோ. (ககசு)

வேறு.

வெருட்டினருதைத்தனர்மிதித்தனர்துகைத்
தார், மருட்டினரிடித்தனர்வளைத்தனர்செறுத்தார்,
புரட்டினரொடித்தனர்புடைத்தனர்கறுத்தா, ருருட்
டினர்தயித்தியருயிர்க்கிடரிழைத்தார். (கஎ)

அடுத்தவசுரக்குழுவெடுத்ததிருறங்கா, ரிடத்
தினுநகத்தினுநிலத்தினுமெறிந்தார், நொடித்திடுவ
ைப்பினுறுக்கினரனந்தம், படைத்தலைவரை
பபதைபதைத்திடவறைந்தே. (கஅ)

இத்திறமியோகினிகளெங்கணுநெருங்கிக், கொ
த்தசுரவெள்ளமயுதங்கடிதுகொன்று, ரத்திறமனை
த்துமொரடற்புயவமைச்சன், னெப்த்தழலெனக்க
னனுநெஞ்சமொடுகண்டான். (ககக)

கண்டவனிலங்கிரதமங்கெதிர்கடாவி, விண்டு
மகமேருவும்வெடித்திடவதிர்த்து, வண்டுபொழிகி
ன்றதனிவார்சிலைவளைத்துக், கொண்டொருகணத்தி
னிலடைந்தடல்குறித்தான். (கஉ0)

குறித்தவனதிர்ப்பொடுபெய்கொண்டல்கணிகர்
ப்பப், பிறைத்தலைநெடுஞ்சரமதிர்ப்பினொடுபெயது,
மறைத்தனனிருந்திசைகள்வஞ்சனிகள்சென்னி, ய
றுத்தனனுருட்டினனலக்கணுறவிண்ணோர். (கஉக)

கரத்தினையறுத்தனகழற்றுணையறுத்த, புரத்தி
னையறுத்தனபுயத்தினையறுத்த, சிரத்தினையறுத்தன

செருக்கினையறுத்த,வரத்தினையறுத்தனவமைச்சன்
விடுவாளி. (க௨௨)

வேறு.

மண்டுமாரழற்கடவுளைவந்தலைக்கின்ற, சண்
டமாருதமெனப்புகுந்தமைச்சர்கடலைவன், வண்டு
மாமழைபொழிந்தியோகினிகளைமலையக், கண்டுதா
னையந்தலைவியுங்கொருத்தியுட்கனன்றாள். (க௨௩)

அந்தயோகினியசனியேறக்கிடவதிர்த்தே,யிந்
தநீசனதுயிர்குடித்திடுவனென்றிமைப்பின், வந்து
கூடியக்கடுந்திறலமைச்சனைவானத், துந்துமாழிய
ந்தேரொடுமுடனெடுத்தெறிந்தாள். (க௨௪)

வீரயோகினியவனதுவீரக்குமகிழ்ந்து, யேரு
லாவுறுதுறக்கமேலேவினளென்னத், தேரொடே
யெடுத்தெறிந்திடத்தினகரன்றிருத்தே, ருரும்வா
னெறிகடந்துபோயொல்லையின்மீண்டான். (க௨௫)

மீண்டுவீழ்பவன்மேலொருபெருங்கதைவிளை
ந்து,தூண்டிஞளதிர்த்தவனதுவுணர்ந்துதுண்ணெ
னவோர், நீண்டவாளெடுத்ததிர்த்திரதத்தினுநீங்கி
த், தாண்டிவாளிடைத்துணித்துவண்டரைதனிற்
குதித்தான். (க௨௬)

இரதம்வீழ்ந்துநுண்டுகளதாயிற்றதவ்வேலை,
நிருதன்வான்கதை துணித்துமண்குதித்தவணிற்ப
க், குருதிகால்விழிச்சூர்மகள்கண்டுளங்கொதித்து

ப், பரிதிபோலொளிர்கின்றவெம்பரிதியொன்றுயத்
தாள். (கஉஎ)

உயத்தவாழியம்மாயவன்னேமிபோலுருத்து,
மெத்துதீயுமிழ்ந்துறுசெயல்கண்டுவில்வளைத்துப்,ப
த்துநூறெனும்பகழிகடுரந்ததுதுணித்துத், தத்து
வார்திரைக்கடலெனவார்த்தனன்றருக்கால்.(கஉஅ)

திகிரிமாய்வுறக்கனன்றன * டிகிரியொன்றொழியிற்
பகருமாதியப்பெயர்த்தினையொல்லையிற்பறித்து
நிகரில்வீரன்மேலெறிந்தனனஃதவனீக்கா
னகலவாகுவிலேற்றனனார்த்தெதிர்புகுந்து.(கஉகூ)

அந்தவெற்பவனடற்புயந்தாக்கிமீண்டதிர்ந்து,
வந்துபட்டவண்மூலைத்தடத்திற்றதுவறிதே, மூந்
துமற்றவர்புயமூலைக்குடைந்திடுமுனிவா, லுந்தவு
ற்றவையொடும்பொருதிறந்தவாறொப்ப. (கங0)

வெய்யவொண்கிரியிற்றலும்விரைந்துவில்வண
சுகி,யையிரண்டுவெம்பகழிகளவனுதலழுத்திக்,கை
யில்வன்கதையொன் றெடுத்திமைப்பினிற்கலந்து,
† மொய்யிலங்கவன் முடியிசைமோதினண் முடிந்
தான். (கஙக)

முன்னர்மெய்யொடும்விசும்பிடையேற்றினண்
முனிந்து, பின்னர்மந்திரக்கிழமையோன்றனையுட

* திகிரி என்னும் மூன்றெழுத்துள் ஆதியாகிய ஓரெழுத் தொழியில் பகரப்படும்பெயர் கிரி அப்பெயரையுடையதுமலை.
† மொய் - போர்களம்.

ல்பிரித்து, மன்னும்பரின் மீண்டிடாதேற்றிடமகிழ்ந்து, துன்னுபுங்கவர்குரவையாட்டயர்ந்தனர்துள்ளி. (கந௨)

ஆனகாலையினமைசசனங்கிறந்தமையறிந்து, தானமாவிகரவுணர்கள்சீறியச்சண்டி, சேனைநாயகிமீதுபல்படைக்கலஞ்சிதறி, மீனவேலைகண்முழக்கமுமழுங்கமிக்கார்த்தார். (கநந)

அன்னதன்மைகண்டியோகினிகடிதினோடல்வாட், டன்னையங்கைகொண்டப்படையனைத்தையுந்தடிந்து, * பன்னலின்குவைபாற்றிடுஞ்சூறைமாருதம்போன், மன்னுவெந்தொழிலவுணருட்புகுந்தனண்மலைந்தாள். (கநச)

தாடுணித்தனடலைகளைததுணிததனளசயஙகூர, தோடுணித்தனள்கரங்களைத்துணிததனள்சுடரும், வாடுணித்தனள்கொடுமரந்துணித்தனள்வயஞ்சொல், சூடுணித்தனளிமைபபிணிற்கறங்கெனச்சுழன்று. (கநரு)

சிலைகளற்றனவுடம்பிடியற்றனசெழுஞ்
விலைகளற்றனநெடுங்கரமற்றனவெழிற்றேண்
மலைகளற்றனதுணைப்பதமற்றனவயவர்
தலைகளற்றனதருவியர்தாலியுமற்றார். (கநசு)

குன்றமெண்ணிலபோலவேகளேபரங்குவிந்த, துன்றுமோங்கலிற்றொடங்கியோடாறெனச்சோரி,

---

* பன்னல் - பருத்திப்பஞ்சு.

யொன்றிவீழ்பிணக்குவாலினுநின்றிழிந்தொலித்து
ச்,சென்றுவேலைபுக்கனகருங்கடற்பெயர்நீர (கஅஎ)

படர்ந்தகாகமுமெருவையும்வன்சிறைப்பருந்து,
மடைந்தஞாளியுமிகலனுமளைக்குறுநரியுங், குடை
ந்துமூளையுநிணங்களுந் தின்றுபேய்க்கூத்தாய்க், கி
டந்ததெங்குமவ்விறலியோகினிபொருங்களமே. ()

பிறங்கல்போலுயர்பிணக்குவையுண்டவெம்பே
யின், றிறங்களோர்பெரும்பேயரசென்றுசெங்களத்
து, நிறங்கொண்மாமுடிகவித்திடுங்கவிகைகணிமுற்
றுங்,கறங்குபம்பையுமியம்புறுங்கவரிகளிரட்டும். ()

சோரிவாய்மடுத்துண்டுமென்னிணங்களைச்சு
வைத்துப், பேரியாநியகளத்துளவதிர்த்துவெம்பே
ய்கண், மூரிவேலுடைக்காளியெம்மிடிகளைமுடித்தா
ள், போரின்மேவியென்றவடனைப்புகழ்ந்துநின்று
டும. (கசo)

நீங்குபோர்வையம்பணையினைநிறுவிவேளிருத,
ரோங்குமூரல்களரிசியிற்பெய்துநீளுலக்கை,யாங்கு
வேழவெண்மருப்புமொண்முசலமுமாகத், தாங்கி
மாவெனவிடித்தனதருக்குபெண்பேய்கள். (கசக)

மிக்கமென்றசையிருந்திடவெற்றெலும்பதனை
த், தக்கதென்றுபுன்குமலிகள்கறித்தனதளர்ந்து,து
க்கமொன்றுமிறம்மனைதுறந்துபோய்ப்பிறரில், புக்
குவெந்துயர்க்கடற்படுமிழுதைகள்போல. (கசஉ)

இன்னதன்மையதாயசெங்களத்திடையெடுத்த,மின்னல்வாளிஞலியோகினியவுணரைவீசிச், சின்னபின்னமதாகவேதுணிததிடச்சிலர்தாம்,வென்னளித்தனருயிரினைக்காப்பதுவிழைந்தார. (கசங)

அதனைத்தாருகமன்னவனவ்விடைக்கண்டான், கதுவிப்புக்குலைக்கடுங்கனலாமெனக்கதமூற், மிதழைக்கவ்விவன்பறகறித்தெனதிருஞ்சேனை, சிதையக்கொல்பவர்மாதரோநன்றெனச்சிரித்தான். (கசச

சிரித்ததீயவன்யோகினித்திரளைச்செழுந்தீப், பருத்திவான்குவைப் புக்கெனப்படுப்பனென்றெண்ணிக்,கரத்திலோர்பெருங்கதைகொடுகலினமான்றேர்விட், டுருத்துமாகிலவரைப்பினிலொய்யெனப்பாய்ந்தான். (கசரு)

பாய்ந்தகாலையிற்பெரும்புவிவெடித்ததுபணிக, ளோய்ந்தமர்திரக்கடகளிறேடினவெருண்டு, சாய்ந்தமேருமால்வரைமுதலாயினசயில, மேய்ந்தவானவரென்கொலோமுடிவதென்றினைந்தார். (கசகா)

தேரினின்றுகுப்புற்றவன்செயறனைத்தெரிந்து, போரில்வென்றிகொள்யோகினிகாற்றெனப்புகுந்து, தாரின்மல்கியவசுரர்கோன்றடம்புயமீது, மூரிநல்வசியோச்சினளுருமெனமுழக்கி. (கசஎ)

தரியலார்புகழ்விறலிஞென்றடம்புயந்தாக்கு, மரியவாள்சிறிதேனுமூற்றற்றிடாததிலே, பெரியரோ

டிகலறிவறுபேதையர்போல, முரியவாங்கதுகண்ட
னன்ருருகமுதல்வன். (கச அ)

கண்டதீயவனவளூரத்தெடுத்ததோர்கரத்துத்,
தண்டிறைற்புடைத்தானலன்றனதிடக்கரத்தா,லண்
டகூடமேயுடைந்ததென்றயிர்த்திடவடித்தான், வி
ண்டுமார்பகங்குருதிவாய்சொரிந்திடவீழ்ந்தாள். ()

தலைவிவீழ்தலும்யோகினித்தானைகளனைத்துஞ்;
சுலவிவேன்மழுத்தண்டுவாள்சூலமாதிகளாம், பல
வுமோவறத்தாருகப்பதகன்மேற்றூர்த்தார், நிலவு
மாரழன்மீதெறிதுரும்புகணிகர்ப்ப. (கருo)

வேறு.

ஒடிந்தனசிற்சிலவுடைந்தசிற்சில
பொடிந்தனசிற்சிலபோழ்ந்தசிற்சில
மடிந்தனசிற்சிலமறிந்துவந்துமண்
படிந்தனசிற்சிலபடைக்கலங்களே. (கருக)

வீடினபடைகளிவ்விதத்திலாயிடைக்
கூடியவவுணர்கோன்கொதித்துமாதரு
ளோடினரொழியவிங்குற்றுளோர்தமைச்
சாடுவலெனவெதிர்தலைப்பட்டானரோ. (கருஉ)

அடிகளுங்கரங்களுமறுவைசூழ்தரு
* கடிகளும்புயங்களுங்காளிமாதர்தம்

* கடி - நிதம்பம்.

முடிகளுஞ்சிதறிடமோதினன்கருங்
கொடிகளுங்களிப்புறக்கொடியன்றண்டினால். ௧௫௩

ஆயிரநீலிகளடியொன்றாலகன்
மாயிருஞாலமேன்மறிந்துவீழ்ந்திடப்
போயருங்கதையினாற்புடைத்துவீட்டினான்
றீயுருமேறெனத்தெழிக்குமார்ப்பினான். (௧௫௪)

சிலவரைக்கதையினாற்சிரங்கள்போக்கினான், சிலவரைக்கரத்தினாற்செருக்குநீக்கினான், சிலவரைப் புயத்தினாற்றிகைப்பதாக்கினான், சிலவரைப்பதத்தினாற்சினத்துத்தாக்கினான். (௧௫௫)

உதைத்தனன்சிலவரையுதிரச்சேற்றிடைப், புதைத்தனன்சிலவரைப்பொறிகலங்கிடச், சிதைத்தனன்சிலவரைத்திருகிச்சென்னிகள், வதைத்தனன் சிலவரைமடங்கல்போன்றுளான். (௧௫௬)

பற்றினன்சிலவரைப்படுக்கும்வானிடைச்
சுற்றினன்சிலவரைத்தொலைக்குங்கால்களாற்
றெற்றினன்சிலவரைச்செறுக்குமார்பிடைக்
குற்றினன்சிலவரைக்குமைக்குந்தாருகன். (௧௫௭)

பாரினில்வரையினிற்பாதலத்தினிற்
காரினிலுவரியிற்கடத்தின்மாலய
னூரினின்மகபதியூழிலாதபன்
றேரினிலுலகினிற்சிலவரைவீசினான். (௧௫௮)

முரிந்தனவென்புகண் முரிந்தபன்னிரை
முரிந்தனபாணிகண் முரிந்தவான்றொடை
முரிந்தனதாளிணை முரிந்ததோட்டிணை
முரிந்தனகந்தர முரிந்தநாசியே. (௧௫௯)

ஓடினகுருதியாறெங்கும்வெற்பென
நீடினகளேபரநிறைந்தஞாளிகள்
பாடினகழுதுகள்பறந்தலைக்கணின்
றாடினகவந்தமோராயுதமென்பவே. (௧௬0)

மொழிந்திடுபுகழினோன்முருக்கவெல்வகை
யொழிந்திடும்யோகினிமகளிரோடினார்
வழிந்திடுபுனல்விழிவதனத்தெற்றியே
யழிந்திடுமுணர்வொடுமமரர்தேம்பினார். (௧௬௧)

கண்டனன்யோகினிக்கணங்கள்சிந்திய
தொண்டிறலவுணர்கோனுருள்பொற்றேரின்மேற்
றண்டொடுமொய்யெனத்தாவினான்சின
மண்டுறுபெருவலிமடங்கலென்னவே. (௧௬௨)

தானவப்படையெலாந்தருக்கிச்சிந்துபு
போனவப்படைகளைத்தொடர்ந்துபோக்கியே
மானவப்படைபுலான்மழுக்கள்வாண்முத
லானவப்படையெலாமார்த்துவீசினார். (௧௬௩)

எஞ்சலிறன்படையிரிதல்காளிகண்
டஞ்சலிரஞ்சலிரவுணரியாரையும்

புஞ்சமென்சிறைபுழுப்போலவிவ்விடைச்
செஞ்சிலம்படியினாற்றேய்ப்பனென்றனள். (கசுச)

என்றவள்வலவியைநோக்கியிம்மெனத்
துன்றுறுமவுணர்தஞ்சூழன்முன்னரோ
சென்றுறநமதுதேர்ச்செலுத்துவாயென்று
ணன்றெனவவடொழானடத்தினாளரோ. (கசுரு)

கடங்கவிழ்கவுணெடுங்களிறுவவ்வுறு
மடங்கலின்மிசைவருஞ்சிம்புண்மானவே
விடங்கதுவுறுமொழிவிமலைதேரொடு
மடங்கலரெதிர்புகுந்தடுதன்மேயினாள். (கசுசு)

முதிர்ந்திடுசினமொடுமூரிவில்லெடுத், ததிர்
ந்திடுமவுணர்முன்பெய்திமேதினி, யதிர்ந்திடமேரு
வுமலையவானமீ, னுதிர்ந்திடவுகிரினுணெலிக்கொ
ண்டாளரோ. (கசுஎ)

வெருண்டனர்சிற்சிலர்வீழ்ந்துமண்ணின்மேற்
புரண்டனர்சிற்சிலர்செவிகள்பொத்தியே
மருண்டனர்சிற்சிலர்மணிப்பொற்றேரொடு
முருண்டனர்சிற்சிலருலவுந்தானவர். (கசுஅ)

நாணொலிசெவிப்புகநடுங்குந்தானவர்
நாணுமிழ்சுடுசரநணுகுமுன்னரோ
நாணுளமுழுவதுநழுவினோடுவர்
நாணொருசிறிதுறாநலியநின்றனர். (கசுகூ)

நின்றலுமனலுமிழ்நெடியவாளிகள்
குன்றெனும்வரிசிலைகுனித்துச்செண்டுபோற்
பின்றலிலவுணர்மெய்விடாதுபெய்தனள்
சென்றுறுகுருதியாறற்றுச்செல்லவே. (கஎ0)

ஆழிமான்றேரினுமயங்கண்மீதினுஞ்
சூழிமால்கரியினுஞ்சுடுசரங்கடா
மூழிமாமுகில்களுமுடையச்சிந்தியே
பாழிமாநிலமிசைப்படுத்தினளரோ. (கஎக)

உரங்களையறுத்தனவுடலறுத்தன
வரங்களையறுத்தனவயினறுத்தன
சிரங்களையறுத்தனசிலையறுத்தன
கரங்களையறுத்தனகாளிவாளியே. (கஎஉ)

அறுத்தனகரிகளையறுத்ததேர்களை
யறுத்தனபரிகளையவுணர்கோன்புக
ழறுத்தனபுரையவேயறுத்தவெண்குடை
யறுத்தனகொடிகளையாசுகங்களே. (கஎங)

சுரங்களிலோடினசுறவுமோதுசா
கரங்களிலோடினகடவுளோர்கடம்
புரங்களிலோடினபுழைக்கைதங்குமா
திரங்களிலோடினசினீமுகங்களே (கஎச)

அறைதருகழலொடுமடிகளோர்திசை
கறைகெழுபடையொடுங்கரங்களோர்திசை

சிறையளிமலரொடுஞ்சிரங்களோர்திசை
பிறைமுகநெடுங்கணைபிடுங்கிவீசுமால். (கஎரு)

கூற்றுறழ்தனதுகைச்சாபங்கொண்டவர், சாற்றிடுபழுதில்வாய்ச்சாபமெண்ணில, மாற்றினனென நொடிவரையிற்றாருகன், போற்றுறுபடைகளொன்றில்லபோக்கினன். (கஎசு)

வரிசிலையீர்த்தனவாள்களீர்த்தன
வெரிவிழியவுணர்மெய்யீர்த்ததேரொடும்
பரிகளையீர்த்தனபணைகளீர்த்தன
கரிகளையீர்த்தனகறைவெள்ளங்களே. (கஎஎ)

காளிவாளிகள்விடுங்காலைவீரமில்
கோளராமவுணர்கள்குலைந்தநெஞ்சராய்த்
தோளுலாம்படைகளைத்துறந்திங்கன்னைநீ
யாளுவாயெமையெனவறைகின்றார்சிலர். (கஎஅ)

குடையறக்காம்பினைக்குமரிவன்கதைப்,படையெனத்தெறுமெனப்படிவிட்டார்சில, ரடுகளத்திறுகுடையதனையீட்டியிக், கடைகொளுவுதுமெனக் கைக்கொண்டார்சிலர். (கஎகூ)

பூங்கதிர்வாளியைப்போக்கிவாம்பரி
நீங்கியங்கதுபிடீஇநிற்கின்றார்சில
ராங்குறுபுரவிவாயடுத்தபுல்லினை
வாங்குபுதம்முவாய்வைக்கின்றார்சிலர். (கஅ0)

வாங்கியதனுவினுண்பூட்டும்வாளியுந்
தாங்கியகரமொடுந்தரைப்பட்டார்சில
ரோங்கியவயவமொன்றுணரவீக்கிய
வேஙகுறுகழலறுத்தெறிகின்றூர்சிலர். (கஅக)

அழிந்தவர்தன்மையுமழிவுறாதுயி
ரொழிந்தவரிவ்வகையுயங்குந்தன்மையுங்
கழிந்திடுபுகழினேன்கண்டுநாட்கடை
யெழுந்திடுகனலினுஞ்சீற்றமெய்தினன். (கஅஉ)

எய்தியவவுணர்கோனிரதமிம்மென
மொய்திகழ்குமரிமுன்முடுகவந்தன
னெய்தெனமடங்கன்முன்னேன்மையோடிகல்
செய்தொருகளிறெதிர்செய்கைபோலவே. (கஅங)

வந்தவள்பயங்கரவடிவங்கண்டனன்
சிந்தையின்வியந்திவடெரிவையாயினு
மெந்தமதமரினுக்கேற்றுளாளென
நந்திடுமறிவினனவிறன்மேயினன். (கஅச)

வேறு.

மாதுநீயாரைவென்றிமதகரியினையுமஞ்ச,'மோ
துமாண்புலியைவெல்வான்முன்னிமானடைந்ததெ
ன்னப், போதனுதியரைவென்றவென்னெடுபொர
நீவந்த, தேதுகாரணமுரைத்தியென்றனனறமிலா
தான். (கஅரு)

அன்னசொற்குமரிகேளாவசனியேறென்னநக்
கு, நன்னரிற்பகைவனைநவையுறுமசுரகேண்மோ,

துன்னுமக்கடவுளர்க்குத் துயரநீயிழைத்தலாலே,
யென்னைநிற்கொல்வான்முக்க ணெமபிரானிவண்வி
டுத்தான். (கஅசு)

ஆதலான்மதவேழத்தையட்டுணப்பினுமடங்
கல், போதுமாறென்னநின்னைப்புகுந்தொருகணத்
தினுங்கி, யோதும்வானவர்கடுன்போடுடற்றுமென்
பசியுநீங்கும், காதலாலிவண்வந்துற்றேன்காளிநா
னெனவுரைத்தாள். (கஅஎ)

உரைததலுமவுணர்கோமானொருகையோடொ
ருகைதாஜகிச்,சிரித்தெமைநுகர்வனென்றுதெரிவை
நீயுரைத்தமாற்றங், கரத்தினில்விசும்புபற்றிக்கவ்வு
வனென்பதொக்குந்,தரித்தமிவ்வளவுமுன்னைத்தை
யலென்றடாமலென்றான். (கஅஅ)

என்றலுமிறைவிகேளாவிழிதொழிலவுணவென்
னை, வென்றியின்மடந்தையென்னவிளம்பினையுலக
மெல்லா, மொன்றொருகணத்தின்மாற்றியொடுக்கு
வதெமையாள்வெள்ளிக், குன்றிறைசத்தியன்றோ
குறித்திலைபோலுமென்றாள். (கஅகூ)

என்றவளுரைத்தல்கொள்ளானிழைதயாதலினு
ற்சீறித், தன்றனிவரிவில்லொன்றுதாங்கினானொலிக
கொண்டார்த்தான், மின்றிகழ்முகிலுடைந்துவீழ்ந்
தனபணிபுரண்ட, குன்றமுகிலனுமண்டகூடமும்
வெடித்தவம்மா, (ககூ0)

தாமலிவயிரத்தோளான்றனுவினுணெறியக்கண்டு, வார்முலையிறைவிதானுமம்பினைவழங்குமுன்னங், கார்முகமதிர்ப்பதென்னக்கார்முகமதனைவாங்கிக், கூர்முகவம்புவீசநாணொலிக்கொண்டுநின்றாள். (கசுக)

அம்மைவெஞ்சிலைநாணோசையவுணனுணொலிவிழுங்கி, "இம்மெனவெழுந்ததம்மயாமளையவனைநுங்க, வெம்மைகொண்டிருந்தாளென்றுலவளதுவில்லினார்ப்புக், கொம்மையங்குவட்டுத்தோளானகுணவொலிவிழுங்கிடாதோ. (கசுஉ)

பின்னரங்கவுணன்றானோர்பெருங்கணைசிலையிற்பூட்டித், தன்னடிவிரன்முன்பின்றோர்தாங்குறச்சானுவாங்கி, முன்னுரமுறவளைந்துநின்றுமொய்குழைநாண்கையைக், கன்னமதளவுமீர்த்துக்காளிமேற்செலவெய்தான். (கசுஙு)

விரைந்தடலிறைவிபூட்டிவில்லினோர்பகழிதூண்டிப், பொருந்துறுமதனைமாற்றிப்பொருக்கெனப்பின்னுநூறு, சரந்தெறவெதிர்விடுத்தாடாருகன்கண்டுமாறத், தெரிந்திடுங்கணைகணூறுசெலுத்தியநகலையறுத்தான். (கசுச)

அறுத்தலுமிறைவிசீறியாயிரஞ்சுடுசரங்கடெறித், தவன்கலினமான்றேர்ச்சிந்தினன்பாகனோடுங், கறுத்துமற்றொருதேர்வாவிக்கணைகளோரார்பத்துநூறு, குறித்திடவந்துவாளிகுமரிமேலுற்றவன்றே. ()

வாளிகடாக்கிநொய்தினழிந்திடவலவிகின்ற,கா ளியங்கதனைக்காணூக்கணைகளீரேழுசிந்தி, மூளுறு சினத்துவெய்யோன்பற்றுகார்முகந்துணித்தா,' ளா ளியேறனையான்மற்றோரடறசிலையெடுத்துக்கொண் டான். (கககூ)

அச்சிலைகுனித்துவாளியைம்பதுசிதறிச்சூலி,கை ச்சிலைதுணித்துமுப்பான் கணையெதிரபுகவிடுத்தா, னச்சிலைபகழியெல்லாநாந்தகமொன்றானூறி, முசச மபுகழுமம்மைமூரிவில்லொன்றெடுத்தாள்(கஃஎ)

எடுததவெஞ்சிலைகுனித்தங்கீருமீர்ம்பகழிநொ யதின், விடுத்தனளவுணன்மார்பின்விசிகமற்றவனு ரத்தி, னடுத்தனவடுத்தலோடுமன்னதுவிலக்கமற் றுங், தொடுத்திருசரங்களன்னோன்சுடர்முடிதள்ளி யார்த்தாள். (ககஅ)

பொறையறுந்தலுமாட்சிப்பொருளறுங்கவி யுமான்ற, மறையறுமுணர்வுஞ்செய்யமகவறும்வா ழ்வுநீதி, யிறையறுமுலகுமன்போடியையறுமறமு ம்போல, முறையறுமவுணர்கோமான்முடியிழந்த முகொழிந்தான். (ககக)

சேகரங்குமரிதள்ளத்தியவனுட்கொண்டா ன், மாகரங்கெழுந்துதுள்ளிமலர்க்கரமெறிந்துநக் கார், சாகரங்கிளர்நஞ்சன்னதாருகன்கொதித்துச் செங்கே, மூகரங்கடுக்குமற்றோரணிமுடிமுடிகவித் தான். (உ00)

பின்னரவ்வசுரன்மேருப்பிறங்கனேர்சிலைவளை
த்துத், துன்னுறுசோனைமாரிதோற்றிடப்பகழிதூர்
த்தா, னங்கிலையமரரெல்லாமஞ்சினரிரியல்போனார்,
மன்னிருசுடருமீனு மறைந்தனவிருண்டவெங்கும்.

நதித்திரையென்னமேன்மேனஞ்சினுங்கொடி
யன்சாப, துதித்தலைப்பகழியீட்டமுமிழ்ந்திடகொ
றில்பரிததேர்க், கதிர்த்தினமணிமறைப்பக்கழியிரு
ளபுகலுங்கண்டம், புதித்திரையினர்கடாமம்புதத்
தொடுமருட்சிகொண்டார். (உ0உ)

பொற்றடமரைகுவிந்தபொலிந்தனகுவளைபுட்
க,டெற்றுறுகுடம்பைபுக்கசெய்தவர்திகைத்தாரின்
று, கற்றையஞ்சடிலத்தெந்தைகண்களையிமயமீன்று
பொற்றொடிக்கரத்தெம்மன்னை புதைத்தனள்கொல்
லோவென்று. (உ0௩)

அதுதனையிறைவிகாணாவசனியேறுட்கநக்குக்,
கதுமெனநெற்றிநாட்டக் கனலினாற்பகழிமுற்றுஞ்,
சிதைவுறவடலைசெய்தாள் செழுமறைச்சிரத்தினாடு
ம், புதுமதிமிலைந்தவண்ணல்புரம்பொடிபடுத்ததே
போல். (உ0௪)

கூர்ங்கணைப்படலைமாயக்குலவு *ஊழ்விளங்கிற்
றொல்லை, யீர்ங்கதிர்புனைந்தவண்ணலருளினாலிரிய
வூட, நீங்கருமறிவிருந்துநிகழ்வுறுந்தன்மைபோல,
வாங்கதுவிழியிற்கண்டானறமென்பதிலாதான்.

---

* ஊழ் - பழமை.

அன்னதுகண்டவெய்யனுயிரப்பத்துவாளி, தன்னிகர்குமரியெண்டோர டாக்குறவிடுத்தான்ருகசுப், பன்னுனிவிசிகநீறுபட்டனபடலுமூழி, வன்னியிற்கனன்றுகோடி வாளியங்கவன்மேற்றூர்த்தாள்.

அத்துணைப்பகழி தூண்டியவனவையறுத்துவீழ்த்தா, ணித்திறமிருவர்தாமுமொருவர்மீதொருவரோவும், வைத்தலைப்பகழிமாற்றிமகிழ்ச்சியுந்துயருங்கொண்டு, மொய்த்துறுமமரர்நோக்கமுதிர்சமர்த்தொழில்புரிந்தார். (உ0எ)

வானகத்தோடுமேருவரைமுதலாகின்ற, மானகத்தோடுந்துங்கமகரவேலைகளினோடுங், கானகத்தோடுமண்டகடாகத்தினோடுமானற், போனகத்தோடுமன்னோர்பொழிந்திடுசுடுசரங்கள். (உ0அ)

மாதிரத்தேகுநேமிவரையகத்தேகுமான்ற, பாதலத்தேகுமுற்றும்பாழியங்கடலினேகு, மீதலத்தேகுமண்டமுகட்டினிலேகுமீண்டும், பூதலத்தேகுமன்னோர்போர்செயத்திரங்களன்றே. (உ0கூ)

இவ்வகையமர்செய்கின்றவேலையிவ்வரிவைதன்னை, வெவ்வியகடவுளோர்தம்படைகளால்வெல்வனென்னத், தெவ்வடுருவவுத்தோளான்சிந்தனைசெய்துகூர்ந்த, பவ்வமன்னவன்றனுதுபடையெதிர்செல்லவுய்த்தான். (உக0)

இந்திரனமாமலரயன்மாலெனுமிவர்கள்படை
கடமையெடுத்துப்பின்ன,ருந்தினனங்கவுணனவை
யவருருக்கொண்டதிர்ந்துநனியுருத்தெழுந்து, வந்
திடலுமவர்படைகடானுமெதிர்செலவிடுத்துமாற்
றினின்றுள், கொந்தவிழுமலரிதழிச்சடாமகுடத்தி
றைவிடுத்தகுமரிமாதோ. (௨௨0)

வேறு.

இங்கினியிவனேயெல்லாவுலகமுமிமைப்பின்மா
ய்றுஞ்,சங்கரன்படைவிடுத்துச்சாடுதுமென்னத்தீ
யோ, னங்கதைவிரைந்தெடுத்தேயருச்சனைமனத்தி
யற்றி, மங்கைதன்னுயிர்குடித்துவருதியென்றிறை
ஞ்சியுய்த்தான். (௨௨௧)

ஊழியங்கனலியோர்சாருருமொடுமுகில்களோ
ர்சா, ராழியங்கடல்களோர்சாருலகடுமாலமோர்சா
ர்,சூழியங்கரிகளோர்சார்சுடுசரத்தொகுதியோர்சா
ர், பாழியம்புயத்துவென்றிப்பாரிடக்குழுக்களோர்
சார். (௨௨௨)

கடவுளர்படைகளோர்சார்காரிருட்படலையோ
ர்சார்,படவரவினங்களோர்சார்பாய்புலியரிமானோ
ர்சா, ருடலுறுபவனமோர்சாருடலுருத்திரர்களோ
ர்சார், மிடலுறுவடுகரோர்சாருக்கிரவீரரோர்சார்.

கான்றுவல்விரைந்துமுக்கட்கடவுடன்படைமு
ன்வந்து, தோன்றலுங்குமரிகண்டுதுணுக்கெனத்
தானுமங்ஙன், மூன்றெனும்புரமுருக்குமுதல்வன்

வெம்படையைப்பூசை, யான்றதன்மனத்திறுற்றிய தற்கெதிர்செல்லவுய்த்தாள். (உ௨௪)

உய்த்திடவனையதவ்வாறுருவுகள்பலவுமாகி,யத் தலையவுணன்றூண்டு மடற்படையுடன்சென்றேற் று, மெத்தமர்புரிந்ததம்மாவேலைகடணந்தவண்ட, பித்திகைபிளந்ததம்பொற்பிறங்கலும்வெடித்தவன் றே. (௨௨௫)

இருவர்தம்படையுமிவ்வாறேற்றமர்புரிந்துமீ ண்டு, மருவினவவர்பால்வெய்யன்மனமகிழ்ந்தவட ன்மீதி, லுரவியகதையொன்றெல்லையோச்சினனத னைப்பார்ந்தட், பொருவுறுசரமீரைந்துபோக்கினடு ணித்துவீழ்த்தாள். (௨௨௬)

பின்னைம்பதிற்றிரட்டிப்பிறைமுகக்கணைகடு வி, மன்னவன்றடநதேர்ச்சாய்ப்பமற்றொருதிகிரித் திண்டேர், தன்னிலொண்பணையினூடுதாவும்வான ரம்போற்பாய்ந்தா, னன்னதுமறித்தும்வீழ்த்தாள டற்கணைநூறுபோக்கி. (௨௨௭)

மற்றதுதெரிந்துதீயன்மறுகுறுமனத்தனுகிப், பற்றலர்புகழுங்காளிதேரினிற்பாய்ந்திமைப்பி,னிற் றதுபுவிகொலோங்கு மிமயங்கொலென்னக்கையா, லெற்றியங்கவடன்மார்பி னிருநிலந்தனிற்குப்புற்று ன். (௨௨௮)

கண்டனளதனைக்காளிகடையுகக்கனலிற்சீற்ற ங், கொண்டினியிவனையின்னேகொல்வனென்றனந்

தற்காண, மண்டலம்வெடிப்பமன்னர்மன்னவனுடன் குப்புற்று, விண்டிடவுரத்தெறிந்தாண்முத்தலை வேலொன்றம்மா. (உஉகூ)

எறிந்திடவயர்ந்துநின்றான்மனச்சினவெரிபோ ந்தன்ன, நிறந்தருகுருதியோங்கிநிலத்திழிந்தோடி ற்றீசன், மறந்தருமவுணன்சோரிமண்புகாதேற்றரு க்தென், றறைந்தருண்மொழியயர்த்தாளடுத்தவெ ஞ்சினத்தாற்காளி. (உகூ0)

மன்னவன்குருதிதோய்ந்தமண்ணினுண்டுகளனைத்து, மன்னவன்வடிவமாயவவுணராயாலகால, மென்னவெங்கொடியராகியிரும்படைக்கலங்களோடுந், துன்னுறமுகிலுமஞ்சவார்த்தனர்தோன்றினு ரால். (உகூக)

தோன்றியவவுணத்தீயோர்தொகுத்தொருபதினன்கென்ன, வான்றிடுமுலகனைத்துநிறைந்தனரானை யோர்க்கண்டு, கான்றிடுமுயிர்ப்படங்கிக்கைப்பொருள்சோர்ந்திறந்தோர், போன்றனர்புலனிழந்துபுலவரொன்றுரைக்கப்பட்டோர். (உகூஉ)

சூலமுமழுவும்வாளுஞ்சுரிகையுமெழுவும்பிண்டி, பாலமுஞ்சரமும்வீசித்தாருகன்படிவங்கொண்டோர், ஞாலமுமணலுமன்னவடற்பெருங்காளிதன்னைத், தாலமும்விழுங்குமாலஞ்சனிப்படையொடும் வளைந்தார். (உகூகூ)

மீண்டியவசுரர்தங்கடோற்றமுஞ்சமர்க்குமிக்கு, மண்டுறுசெயலுங்கண்டுமாதொருபாகன்சொல்லுட், கொண்டுதன்படையனைத்துங்கூவியவ்வசுரர்தம்மை, யுண்டிடுமென்றுதாமுமவர்தமையுண்பதானாள். (உ௱௪)

முத்தலையதனாலன்னோர்மொய்ம்பினிற்குத்திநெய்த்தோர், கைத்தலத்திருந்தபாழிக்கபாலத்தினேற்றருந்தி, மைத்தடவரைகளன்னவளரியாக்கைகளுமுண்டா, * னுத்தரந்தனிலுமோங்குமுதரவங்கியினைமிக்காள் (உ௱௫)

விரிந்திடுவயிறெண்குண்டமாயிடைமேவுமங்கி, யெரிந்திடுமுதவகன்றானெனவசுரர்கடஞ்சோரி, சொரிந்தவருடலினங்கடூர்த்தொருவீரயாகம், புரிந்தனளுலகமெல்லாம்புகழ்தருங்குமரியன்றே. உ௱௬

மூர்த்தமொன்றதனிலாண்டுமொய்த்தயோகினிகளோடு, மார்த்துவந்தெதிர்த்ததீயவவுணரையெல்லாமுண்டாள், சீர்த்தியகுமரிபின்னர்த்தாருகன்றெளிந்துசீறிப், பார்த்தனன்றனியாய்நெஞ்சம்பதைத்தவட்புடைப்பவந்தான். (உ௱௭)

வந்திடவிலைவெஞ்சூலமார்பினின்மீண்டுமோச்சிச், சிந்திடுகுருதியங்கைச்செழுங்கபாலத்தேற்றுண்ணு, விந்தமண்மகடன்பாரமிறக்கினளென்னவங்

* உத்தரம் - ஊழித்தீ.

ஙன், வெங்தொழிலவுணன்மாளயாக்கையும்விழுங் கினாள். (உ௩அ)

மற்றதுகண்டுவிண்ணோர்வலியதாருகனையன்னை, செற்றனனுங்கியிங்ஙன்றேவொன்றுரைக்குநம்மைப், பெற்றனளின்றென்றூர்வப்பெருங்கடற்படிந்துநெஞ்ச, முற்றவெங்துயரகன்றுபாடினரோடினார். (உ௩௯)

வேலையூடெழுந்தநஞ்சம்விமலனுண்டளித்தசெய்கை, போலநீயம்மாவின்றுபொருவிறுருகனையுண்டு, பாலராமெமையளித்தாயென்றனர்பழிச்சிவானோர், சூலிமீதிடைவிடாமற்சொரிந்தனர்பூவின்மாரி. (உ௪0)

ஆயிடையுளமகிழ்ந்தேயவுணர்கண்மலைப்பமாய்ந்து, பேரயினவனிகமுறறும்பொருக்கெனவுயிர்பெற்றுய்ய, நாயகிகுமரிநின்றுநவின்றனணவின்றகாலை, மேயினதுயிலொழிந்துவிழித்தெனவெழுந்துசூழ்ந்தார். (உ௪க)

வேறு.

அன்னதுகாலையிலவுணர்சோரியுந்
துன்னியவுடல்களுந்துய்த்ததன்மையான்
மன்னியகுமரிதன்மதிமயங்கியே
தன்னிகரிலையெனத்தருக்கினளரோ. (உ௪உ)

தருக்கியவுளத்திறைடாங்கிநல்லியாழ்
திருக்கரவிரலினற்றெறித்துப்பாடியே

முருககியபுயஙகளுமுடியுந்தாள்களுங்
கரகருவைகளுஞசெறிகளத்திறுடிஞள்.　(உசரு)

நடித்திடவவளதுநாடிப்பெண்சுடாம்
வெடித்திடநிலமுடுவீழுவாவிக
டுடித்திடவிமயமுந்துளங்ககைகளை
யடித்தனரதிர்த்தனராடன்மேயிஞர்.　(உசச)

கொட்டுபுகரங்களைக்குல்லைநேமிபோல்
வட்டணைவிரலினில்வருகின்றூர்சிலர்
கிட்டியவலகைகள்கீதம்பாடியே
நட்டமதிடவுடனடிககின்றூர்சிலர்.　(உசரு)

தண்ணுமைதனையடிச்சதிக்கிசைந்தொலி, நண்ணுறமுழக்குபுநடிக்கின்றூர்சில, ரண்ணலந்தயிததியராசகைக்குன்றின்மேற், றுண்ணெனவிவர்ந்தனர்துவைக்கின்றூர்சிலர்.　(உசசு)

மாகமீதெறியுமம்மனைகள்பற்பல
வாகவீழ்தலையெடுத்தாடுவார்சிலர்
வாருவால்விலாவுறத்தாக்கிமெய்வளைந்
தோகையானடநவின்றுழல்வரோர்சிலர்.　(உசஎ)

மெலிவுறுமடிகள்வாய்விழிபுரூரமங்
குலிவிகாரப்படக்குனிக்கின்றூர்சிலர்
வலியவெண்கவடிகணிரைத்துவைத்தபோ
னலியெயிறிலகுறநகைக்கின்றூர்சிலர்.　(உசஅ)

முத்தலைவேலினன் முடைப்பிணங்களைக்
குத்துபு தாங்கியேகுனிக்கின்றார்சிலர்
மத்தகமெனககுடர்மாலைதோளிடா
வத்திகளெனவதிர்த்தாடுவாரசிலர். (உ௪௯)

இனையனபலவிதத்தெண்ணில்யோகினி
வனிதையர்குருதிநீர்வாய்மடுத்திடு
நனிவருகளிபயினன்மத்தநாகமே
யனையவெங்குமரியோடாடினாரரோ. (உ௫0)

ஆடுறுமரவமுமவர்முழக்கமுங்
கூடுறுமங்கைகள்கொட்டுமோசையு
நீடுறுமுலகெலாநீங்கவங்கெழா
மூடுறுமுகிற்கணமுழக்கையென்றதே. (உ௫க)

போழ்ந்தனபுவியெலாம்பொடித்தவெற்பெலாம்
வீழ்ந்தனமுகிலெலாமெலிந்துமூர்ச்சையி
னாழ்ந்தனவுயிரெலாமலைந்தவான்சுடர்
சூழ்ந்தனவுலகெலாநதுயரவேலையே. (உ௫உ)

துப்புறகுமரிகடொகுதியாடுறச், செப்பரும்புகழுடைச்சேடன்பாரினை, யப்பரம்பொறுக்கிலாதாயிரஙகமுங், கொப்புளங்கொளவுளங்குலைந்துதாங்கினன். (உ௫௩)

மாதவனயன்மகத்தரசன்வானவர்
மூதறிவுடையமர்முனிவர்யாவரும்

பேதுறவந்திளம்பிறைமுடித்தவெம்
மாதியோடபயமென்றறைதன்மேயினர். (உருச)

எந்தையேதாருகனிழைத்தவெந்துயர்
வந்தமாகாளியெங்கட்குமாற்றியே
யந்தவான்றுயரினுமதிகமாக்கினண்
முந்துகான்முட்பறிஇமுளையடித்தல்போல்.(உருரு)

தாருகனல்வருந்துயரந்தன்னைநின்
பேரருளாலொருபெண்ணினீக்கினை
யாருறுசெருக்கினாலவள்செய்துன்பமு
நீருறுசடையினாய்நீக்கியாட்கொணீ. (உருசு)

நஞ்சினையருந்தியுங்கனலையேந்தியு
மஞ்சிடமதகரியட்டுமேழையே
முஞ்சிடவருளியவொருவகாளிதன்
விஞ்சியசெருக்கையும்வீட்டியாளுவாய். (உருஎ)

என்றிவரனைவருமியம்பிக்கைதொழா, நின்றிட வெங்கணுநிறைந்தவெம்பிரான், வென்றியங்குமரி தன்மிகுஞ்செருக்கினை,யொன்றொரு * சாழலாலொழிக்கவுன்னினன். (உருஅ)

வேறு.

உன்னுநாயகனுலகெலாமீன்றவளோடுந், துனனுவான்கணஞ்சூழ்தரச்சூரமகளி, ரன்னையாடி

* சாழல் - ஓர்விளையாட்டு.

ட்ம்வடவனமாகவாயிடையின், மன்னுபேருட்ட
ன்மையாலிமைப்பினில்வந்தான். (உருக)

வந்துகாளிமுன்பேருருக்கொண்டுமாமறையு,
மந்தநாரணக்கடவுளுமறிவதற்கரிய, கொந்துலாம
லர்த்திருவடிசிவந்திடக்குனித்தான்,றந்தையாகியெ
வ்வுயிரையுமளித்தருடலைவன். (உசு0)

கோதுக்காகரமாகியேசெருக்குறுங்குமரி, மா
துக்கோர்புறமளித்தவன்செயல்கண்டுவணங்கி,யே
துக்காடுகின்றாய்வறிதென்றெடுமீண்டு, வாதுக்கா
டுதிவருதியென்றுரைத்தனண்மயங்கி. (உசுக)

என்றவாசகங்கேட்டலுமடியவர்க்கெளிய,னன்
றுகாளிநீதருக்கதாண்டவஞ்செயநவின்றாய்,வென்
றிதோல்விகண்டுரைத்திடச்சான்றுநமவிமலை, நின்
றுதாண்டவம்புரிதியென்றுடினனிமலன். (உசுஉ)

கற்றைவேணியிற்செருகியகதிரிளம்பிறையை
ச், சுற்றிவாலகொடுகட்செவிநான்றிடச்சுருகிப்,பற்
றதாகியபதமலர்ச்சிலம்பொலிபரப்பப், பொற்றமா
நகநாயகன்றிருநடம்புரிந்தான். (உசுங)

படியும்வானமுநடுங்கிடப்பரவைகளடங்கக்,
கொடியயோகினிக்குழுவெலாம்பாணிகள்கொட்டி
நடநவின்றிடமயன்மிகுயாமளைநடித்தா,ளடியர்வே
ண்டியவேண்டியாங்களிப்பவனுடனால். (உசுச)

திருந்துதென்றிருவாலங்காட்டருந்தவஞ்செய்
யா, விருந்த * முஞ்சிகனோடுகார்க்கோடகனென்ன
ப்,பரந்தசீர்த்திமாநாகமுஞ்செஞ்சடைப்பகவன்,பு
ரிந்தநாடகங்கண்டருங்கதியிடைப்புகுந்த.(உசுரு)

வேதனாரணன்விண்ணவர்முனிவரர்விமலன்,
போதநாடகங்காண்டலுமெய்ம்மயிர் பொடிப்ப,
வோதும்வாசகந்தளர்ந்துளநெக்குநெக்குருகிக், கா
தலாலரகரவெனக்கூப்பினர்கரங்கள். (உசுசு)

அண்டர்நாயகன்றிருநடம்புரிவயினடுத்துப்,
பண்டைநான்மறையுருவுகொண்டன்பொடுபாடக,
கண்டுநான்முகன்றாளமொத்தினனதுகாலை,மண்டு
மாபுகழருணந்திமத்தளமதிர்த்தான். (உசுஎ)

எங்கணாயகனுலகெலாமாடல்கண்டிருக்கு, மங்
கைநாயகனடனமிவ்வாறுசெய்தருள, வங்குவாது

---

* சனந்தமுனிவரென்பவர், கைலாயத்திலே தாண்டவ
தரிசனந் தந்தருளப் பிரார்த்தித்து, சிவபெருமான் அனுக்கி
ரகப்படியே திருவாலங்காட்டையடைந்து, நெடுங்காலம் அ
ருந்தவம் புரிந்திருந்துழி, மண்மேடிட்டுத் திருமேனிமறைந்
து கேசத்தோடு முஞ்சிப்புல் முளைக்கப்பெற்றமையால், மு
ஞ்சிகேச முனிவரென்னும் திருநாமமுடையரா யிருக்க; கார்
க்கோடகர் என்பவரும், கைலாயத்திலே சிவபெருமானுக்கு
க் கங்கணமாயிருக்குங்கால், அறியாமையால் விடத்தைக்கக்
கி, அக்குற்றங் காரணமாக அக்கடவுளருளியவாறு அத்தலத்
தை யடைந்து, தவநிலையினின்று தாண்டவதரிசனம் கிடை
க்கப்பெற்று, அம்முனிவரோடு முத்தியடைந்தனர்.

செய்துடன்சுழன்றாடுவாளெய்த்தாள்,பொங்குமா
னமுற்றிடுதலாற்பினுநடம்புரிந்தாள். (உசுஅ)

வேறு.

நொந்துளாடனைநோக்குபுவாதினன்
வந்தநாடகமாற்றவருள்கொளா
வந்தவேலையினண்டமுகடுற
வெந்தைதாளொன்றெடுத்தனனென்பவே.(உசுகூ)

தொண்டராகுலந்தீர்க்குந்தொழிலினோ
னண்டகூடமளவுமெடுத்ததா
ளுண்டதாலமுமிழ்நெடுமான்முனங்
கொண்டபேருருக்கொள்கைநிகர்க்குமால். (உஎ0)

வேறு.

மண்ணிடையொருதாளூன்றிமற்றொருகமலப்
பொற்றாள், விண்ணிடையெடுத்துமேலோனடிப்ப
துவீரிகண்டு, துண்ணெனநாணுட்கொண்டுசுடுங்க
னற்பட்டமென்பூ, வண்ணமதெனப்புலர்ந்துவதன
ம்வன்றலைகுனித்தாள். (உஎக)

நாணினன்முகங்கவிழ்ந்துநண்ணியசெருக்கு
நீங்கி, யேனுலாங்குமரிநிற்பவெண்ணில்யோகினிக
ளெல்லாங், காணுறநடமொழிந்துகூத்திரங்கழலநி
ற்கு, மாணுலாம்பாவைபோலவறிதுநின்றனர்களெ
ன்றே. (உஎஉ)

ஆங்கதுகண்டுவிண்ணோருவகைபூத்தமலன்மீ
து, தூங்குறுமழையின்மும்மைசொரிந்தனர்பூவி

ன்மாரி, பாங்கரின்வந்துவீழ்ந்துபணிந்தனரொழுந் துதுள்ளி, வாங்குதெண்டிரைக்கடற்கெண்மடங் கொலியெழத்துதித்தார். (௨௭௩)

ஆயகாலையினிற்காளியஞ்சியாரணங்கடாமு,மா யனுதியருங்காணுநின்றனைமதித்திடாமற், பேயனே னசெய்ததீமைபொறுத்தருள்பெருமவென்று, தூய மாஞானனந்தசோதியைத்தொழுதுநின்றாள். ௨௭௪

நின்றவடன்னைநோக்கிநீயுளம்வெருவலென்றே, தனதிருவருள்புரிந்துசண்டதாண்டவமிதம்ம, வு னறனகநிதனைநோகக லரிதௌவுரைத்துத்தன்று, ளென்றலைபொறித்தமுக்க ணெம்பிரானியம்புகின் றான. (௨௭௫)

வேறு.

திகழ்வுறுமிந்தவடவனந்தனக்குத்தென்றிசை யாகவோர்நகரம், புகழ்வுறுங்கூவபுரமெனவுளதப் புரிகயிலையங்கிரிதன்னி, னிகழ்வுறுபெருமைபெற் றதுநமைப்போனிகரிலாவதனிடையென்று, மகிழ் வொடுமுலகமனைத்தையும்புரப்பான்மதித்திரக்காந டம்புரிதும். (௨௭௬)

அப்பெருங்கூவபுரத்திடையேகியருள்புரிநந்தி ருநடனஞ்,செப்பருங்காதலாற்றினங்கண்டுதிகழும, ந்நகருளாரெல்லா,மொப்பருமதுநந்தியங்கணத்தி னுள்ளவரொன்றுநீகருதி,வெப்பதுமுதலாம்பிணிமி டிபேய்கள்விலங்கினுன்வருந்துயர்களைவாய் (௨௭௭)

என்றிவையிசைத்து நம்மொடுதருக்கமியம்பிநீ டநவின்றதனு, னுன்றனக்கொருபேர்தருக்கமாதா வென்றேருங்குகவினையதுமன்றித், தெனதிருக்கூவந கர்தனைக்காத்துச்செறிந்திடுபீடைகளரிப்ப, வென் றிகொள்பெயர் * பீடாரியென்றுலகின் விளங்குகவெ ன்றனன்விமலன். (உஎஅ)

அன்னசொற்குமரிகேட்டுளமகிழ்வுற்றன்பினு ன்மும்முறைவணங்கி,நின்னருளதனாலடியனேன்றீ மைநீத்தெனையாண்டவாரமுதே, பன்னருங்கூவபு ரத்திடைசசென்றுன்பவுரிகண்டந்நகர்காப்பே,னெ ன்னவங்கியம்பி விமலனைவிடைகொண் டெய்தினள் கூவமாநகரின். (உஎகூ)

எய்தியகுமரிகூவமாநகராயிறைஞ்சியாலயத்தி னுட்போகிச்,செய்தவமுடையோர்விழியினிறெளி திற்றெரியும்விற்கோலநாயகனைக், கைதொழுதகலா வன்பினுற்பணிந்து களிப்பொடும்போந்தடியவர்க் கு, மெய்தருமருள்சேர்வளர்சடைக்கூத்தன் விளங்க குகாடகங்கண்டாள். (உஅ0)

கண்டலுமனவிற்படுமெழுகெனவேகரைந்துள முருகிவாள்விழிநீர்,கொண்டல்கண்மலைமேற்சொரி வதுகடுப்பக்குவிமுலைமீதுவீழ்ந்தொழுக,மண்டல மதனிலேந்துறுப்பனைய வணங்கியங்கெழுந்தனள்

---

* பீடாரி என்பது • உலகவழக்கில் பிடாரியென மருவிற்று.

போற்றி, விண்டிடவரியமெய்ப்பரானந்தவெள்ளத் திற்றிளைத்தனளன்றே. (உஅக)

இத்திறமமலனருணடநகாணுவின்பமுற்றிடு பெருஞ்சூலி, கைத்தலமமர்ந்தமழுவினேனுலஙகா ட்டினிலருளியமுறைமையே, மெய்த்தவர்புகழுஙகூவ மாபுரத்துவிருப்பொடுமிருந்தொருதுயரு, மத்திரு நகரிற்குறுவகையென்று மன்னைபோற்காத்திருக்கி ன்றாள். (உஅஉ)

வேறு.

இனையதிருக்கூவபுரப்பெருமையினையிவ்வளவெ ன்றியம்பவல்லோ,ரனையநகர்தனையிடங்கொண்டரு டிருவிற்கோலநாயகரேயல்லாற்,பினையொருவருரை த்திடுதற்கெளியதுவோவியாதனெனப் பெயர்பெற் றுள்ள,முனிவனருள்கொண்டுசிறிததன்பெருமைத மியேனுமொழியப்பெற்றேன். (உஅங)

அண்ணலருந்தவமுனிவீர்முத்திதருசிவஞான மளிக்கவல்ல, கண்ணுதலான்றலங்கடமிலனந்தகோ டியினினொருதலத்தையுன்னித், துண்ணெனவிங்கு ரைத்தியெனப் புகன்றனீராதலினுற் சுரர்கள்போற் று, மெண்ணரியபுகழ்க்கூவமாநகரைக்குருவருளா லியம்பினேனுல். (உஅச)

இக்காதைதனையொருக்காற்புகன்றருளவினவி னவரிசைகூர்வண்டு,புக்காருநளினமலர்ப்புங்கவனு

குவரிருக்காற்புகலிற்கேட்பின்,மைக்காரினிகர்நிறத்
தகமலவிழிப்புவியளந்தமாயனுவர்,முக்காலவ்வகை
புரியினெனேயாளுங்கயிலைமலைமுதல்வனுவார். ()

பழுதிறிருக்கூவபுராணத்தினையோதிடுபவர்க்கு
ம்பயன்கேட்போர்க்கும், கழுதுபலவிலங்குநவக்கிர
காதியாலணையுங்கடியவின்னன், முழுதுமிலையவம
ரணந்துற்கனவுமிடிபிணிகண்முற்றுமின்று, மெழு
துபவர்வினையனைத்துநமன்கணக்கர்தமதேடடி னெ
ழுதிடாரோ. (உஅசு)

இக்கதையையன்பினெடுபடிப்பவர்களரும்பய
ன்கேட்டிடுவோர்மேன்மை, மக்கடமையுயிர்த்திடு
வனொன்றென்றுமொழியாதவாழ்வுசேர்வர்,மிக்கபெ
ருஞ்சித்திகளோரிருநான்குமடைவர்மனம்விழைய
தவெல்லா, மக்கணமேபெறுகுவரீரோழலகுதனினு
மவர்க்கரியதின்றே. (உஅஎ)

நீங்கிறிருச்சினகரமேதவர்மடமேயறந்திறம்ப
த்திகழுமில்லே, யோங்குமலைக்கடமேநன்னதிக்க
ரையேயெனுமிவற்றுளொன்றின்மிக்க, பூங்கடிம
ண்டபமியற்றியதிலிருந்துதிருக்கூவப் புராணந்தன்
னைத், தேங்கமழுமலர்புகையொண்சுடர்கொடுபூச
னையியங்கள்சிலம்பச்செய்தே. (உஅஅ)

ஓதிடுகவோதிடுநாட்டொடங்கிநால்வகையுண்டி
யோடுமன்ன, மாதவருக்கிடுகமுடிவுறுநாளிற்படித்

தவர்கண்மலர்ப்பொற்றுளி, ஞாதரவுகொடுபரமசிவ னௌவேவந்தனைசெய்தறுவையோடுந், தீதிலணி வினோதிலம்பாற்பசுவிவைகளளிததிடுக சிறக்கப்பின் னா. (உஅகூ)

பொய்யின்மறைபுகழ்திருவிற்கோலநாயகாப்பு கழும்புராணமோடு,துய்யமனனுடன்படித்துப்பொ ருள்விரிக்கும்பெரியோனைத்தொழுதுபோற்றி, வை யமுதலூர்திகளி னிருததிமிகுபல்லியம்வான் மழை யினார்ப்பச்,செயயநகாலங்கரித்துவலம்வருவித்திட ல்வேண்டுந்திகழுமன்பால. (உகூ0)

இந்தவகைபுரிந்திடுவோர்பாவகோடிகளகற்றி யிம்பர்தன்னிற், புந்திவிழைபொருளனைத்துமீந்து திருவிற்கோலப்புனிதமூர்த்தி,கந்தமலரயன்முதலா நகடவுளர்க்குமரியபரகதியுநண்ணத், தந்தருள்வ னெனவுரைத்தான் சூதமாமுனிவனெனுந்தவத்தர் கோமான். (உகூக)

சூதமுனியுரைத்தமொழிநைமிசமாவனத்து றையுந்தூயநெஞ்ச, மாதவர்களனைவருங்கேட்டுவ ந்தனையோன்றனைவழுத்திவந்துகூவப், போதநக ர்தனினரியவிற்கோலநாயகனைப்போற்றிமேவி, மூ தறிவுவந்ததனுன் மூலவிருளகன்றுபரமுத்திசேர்ந் தார். (உகூஉ)

வேறு.

நீதிலாவிறைசெங்கோல்வழங்குக
வேதவாகமமெய்ந்நெறியோங்குக
போதனாதியபுண்ணியர்மல்குக
வோதுமூவர்தம்மொண்டமிழ்வாழ்கவே. (உகூ௫)

தாருகன்வதைச்சருக்கம் முற்றிற்று.

ஆகசசெய்யுள்-எ0௫.

திருக்கூவப்புராணம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.